Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

**கலைச் செல்வி**

சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், அறிவரங்கம், வளரும் எழுத்தாளர் பகுதி முதலிய விசேட பகுதிகளுடன் ஒவ்வொரு தமிழ் மாதம் முதலாம் திகதிகளிலும் மலரும் திங்களிதழ்

தனிப்பிரதி: 35 சதம் — ஆண்டு சந்தா ரூ. 4/-

கலைச் செல்வி

கந்தரோடை : : சுன்னாகம்

புத்தகம் 12 திருவள்ளுவர் ஆண்டு 1989 தைத் திங்கள் 12-ம் நாள் 25—1—1959 ஞாயிற்றுக்கிழமை றஜப் பிறை 15 இதழ் 35

அரசாங்க சுதந்திர தினத்தில்:

# "விடுதலை வாழ்வுக்கு வழி சமைக்க திட சங்கற்பம் செய்யுங்கள்

## பெப்ரவரி 4 இன்னும் துக்க தினமே

## கறுப்புக் கொடிகள் எங்கும் பறக்கட்டும் அரசாங்க வைபவங்களும் வேண்டாம்"

### தமிழரசுக் கட்சி அறிக்கை

"எதிர்வரும் பெப்ரவரி நாலாந் திகதியை தமிழ் பேசும் மக்கள் இம்முறையும் துக்க தினமாகவே அனுஷ்டிக்க வேண்டும். அதன் அறிகுறியாக அன்றைய தினம் எங்கும் கறுப்புக்கொடிகள் காட்சியளிக்கச் செய்வது அவசியமாகும்.

"அத்தோடு தமது இழந்த மொழி உரிமை, குடி உரிமை, நில உரிமை ஆகியவற்றைப் பெறவும் எல்லாவற்றிற்கும் மேலாக 'விடுதலை வாழ்வுக்கு வழி சமைப்போம்; அதற்கு நம்மால் ஆனதை, மலையே எதிர் வந்து எதிர்த்தாலும் நிலை குலையாது செய்தே தீருவோம்' என்றும் தமிழ் பேசும் மக்கள் திடசங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்''

தமிழரசுக் கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தமிழ் பேசும் மக்களைக் கேட்டிருக்கிறது. இலங்கையின் சுதந்திர தினம் என்று கொண்டாடப்படும் பெப்ரவரி நாலாந் திகதி பற்றி கட்சி அதிகார பூர்வமாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:—

**உண்மை வெளிச்சம்**

"1958-ம் ஆண்டோடு இலங்கை சுதந்திரம் அடைந்து 10 வருடங்கள் பூர்த்தியாயின. இந்தப் பத்தாண்டுக் காலத்திலும் தமிழ் பேசும் மக்கள் சிங்கள ஆட்சியாளரிடம் பெற்ற அவமதிப்புக்கும் நிர்த்தாட்சண்யத்துக்கும் சிகரம் வைத்தாற் போல அமைந்தது மே-ஜூன் மாதக் கலவரம். அப்போது தமிழ் பேசும் மக்கள் பல இன்னல்களுக்கு ஆட்பட்டு நைந்துபோய் நொந்த உள்ளத்தோடு தம் சொந்தப் பிரதேசத்துக்கு கப்பலேறிச் செல்ல வேண்டி ஏற்பட்டது ஒன்றே, 1948 ல் இலங்கைக்குக் கிடைத்த போலிச் சுதந்திரம் தமக்குத் தரும் பரிசு அடிமை வாழ்வு ஒன்றுதான் என்ற உண்மையை ருசுப்படுத்தவும் திட்டவட்டமாக அறிவுறுத்தவும் போதுமானதாகும்.

**கட்சியின் எச்சரிக்கை**

"மேற்படி உண்மையை ஏற்கனவே அறிந்து தமிழ் பேசும் மக்களை முதன் முதவாக எச்சரித்ததும் அந்தப் போலிச் சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டதும் தமிழரசுக் கட்சியேயாகும். இன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து பெப்ரவரி 4ந் திகதியைத் துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டியது அவர்களது நீங்காக் கடமை என்பதை உரிமையோடு தெரியப்படுத்த விரும்புகிறது''

**எப்படி துக்கம் அனுஷ்டிக்கலாம்?**

துக்கதின அனுஷ்டானம் எப்படி நடக்க வேண்டும் என்பது பற்றியும் கட்சி அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

1. தமிழ் பேசும் மக்கள் தம்மால் இயன்றவரையில் தமது இல்லங்கள், ஸ்தாபனங்கள், வாகனங்கள் ஸ்தல ஆட்சி மன்றங்கள் முதலியவற்றில் கறுப்புக் கொடிகளைக் கட்டிப் பறக்க விட வேண்டும்.

2. அரசாங்கம் வலுவில் ஏற்படுத்தும் கொண்டாட்டங்களில் பொதுமக்கள் எந்த வகையிலும் பங்கு கொள்ளக் கூடாது.

3. பாடசாலைகளில் சுதந்திர தினத்தையொட்டி நடைபெறும் வைபவங்களை மாணவர்கள் பகிஷ்கரிக்க வேண்டும்.

4. எல்[illegible] றைய தினம் பிரார்த்தனை

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு வாலிப முன்னணி 7-வது வருடாந்த மாநாடு

## பருத்தித்துறை, துன்னாலையில் ஜனவரி 31-ல் ஆரம்பம்

### வெளியூர் பிரமுகர்கள் தங்கியிருந்து பங்கு பற்ற ஜரூர் ஏற்பாடுகள்

தமிழரசு வாலிப முன்னணியின் 7-வது வருடாந்த மாநாடு ஜனவரி 31, பெப்ரவரி 1 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்று தெரிய வருகிறது.

மாநாட்டில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மலைநாட்டுப் பிரதிநிதிகள், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித்துறையைச் சேர்ந்த துன்னாலை நுணுவில் பிள்ளையார் கோவில் முன்றலில் மாநாடு நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. அரசியல் மாநாடு தவிர்ந்த ஏனைய இலக்கிய மாநாடு, மாதர் மாநாடு, தொழிலாளர் மாநாடு ஆதியன இங்கு நடைபெறும். அரசியல் மாநாடு மட்டும் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

ஜனவரி 31 காலை 9 மணிக்கு இலக்கிய மாநாடு. மாலை 2 மணிக்கு மாதர் மாநாடு.

பெப்ரவரி 1 காலை 9 மணிக்கு தொழிலாளர் மாநாடு. மாலை 6 மணிக்கு அரசியல் மாநாடு.

அரசியல் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் மாலை நான்கு மணியளவில் ஊர்வலம் ஒன்று நடைபெறும்.

மாநாடு ஜனவரி 31-ந் திகதி ஆரம்பமாவதற்கு முன்னோடியாக 30-ந் திகதி பைசிக்கிள் ஊர்வலம் ஒன்று

(9-ம் பக்கம் பார்க்க)

யாழ் நகரிலிருந்து:

## 'சிறீ' அல்லாத பஸ்களும் படிப்படியாக வாபஸாகும் மாயம்

## மக்களை 'வழிக்கு கொண்டுவர' அரசாங்கத்தின் நயவஞ்சக நடவடிக்கை

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணம்—22

யாழ்ப்பாணத்தில் பாவனையிலிருந்து வந்த நல்ல நிலையிலுள்ள பஸ் வண்டிகளிற் சில சமீபத்தில் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அவற்றுக்கு பதில் பாடாவாரியான வண்டிகள் இங்கு அனுப்பிவைக்கப்படலாமென ஸ்தல இ. போ. ச. அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். அணிமையில் இங்கு வந்திருந்த இ. போ. ச. மேலதிகாரி ஒருவரின் விஜயத்தின் பயனாக இச் செயல் நிகழ்ந்திருப்பதாகத் தெரிகிறது.

சிங்கள சிறீ எதிர்ப்புக்குப் பழிக்குப்பழி வாங்கும் முகமாக ஓட லாயக்கற்ற பஸ் வண்டிகளை அனுப்பி வஞ்சம் தீர்த்து வரும் இ. போ. ச. இங்கிருந்த நல்ல பஸ் வண்டிகளிற் பெரும்பாலானவற்றை ஏற்கனவே தென்னிலங்கைக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டது. இலக்கத் தகட்டில் ஆங்கில எழுத்தையுடைய அந்த வண்டிகள் கொழும்பிலும் அநுரதபுரத்திலும் இப்போது ஓடிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

**வான்கள் நடமாட்டம்**

படிப்படியாக இங்கிருந்து

(9-ம் பக்கம் பார்க்க)

ஈளை நோயின் சத்துரு

**ரிச்லெட்ஸ் பெக்டோரல்**

(Richelet's Pectoral)




தொய்வு (சுவாசகாசம்)
இருமல்
மார்ச்சளி
மார்புவலி
தொண்டைவலி
கக்குவான்
மூச்சுத் திணறல்
பீனிசம்

மேற்கண்ட கொடிய நோய்களுக்கென்றே பிரெஞ்சு (France) தேசத்தில் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஒரே போத்தலில் குணம் தெரியும்.

எங்கும் கிடைக்கும்

ஸோல் ஏஜண்ட்:

வெஸ்டன் ஏஜன்ஸீஸ்,

170, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (16)

## விருந்து ஏற்பாடு

சங்கரன் காரை இப்போதே நாம் பின் தொடர வேண்டிய அவசியம் இல்லை. முன்னரே நாம் அதை மல்லிகைத் தோட்ட பங்களாவில் உறுமல் சத்தத்துடன் சந்தித்து விட்டோம்.

நீலவேணியை ஏற்றிக் கொண்டு காற்ருய்ப் பறந்த மியூறியலின் காரைப் பின் தொடர்வதில்தான் நமக்கு வேலையிருக்கிறது. நம் கதையைத் தள்ளிக்கொண்டுசெல்வதற்கும் அந்தக் காரின் பின்னல் போக வேண்டிய அவசியம் இருக்கிறது.

நீலவேணியுடன் புறப்பட்ட அந்தக் கார் டாக்டர் சங்கரனின் டிஸ்பன்ஸரி காம்பவுண்டுக்குள் வழுக்கிக் கொண்டு வந்து நின்றது. காரிலிருந்து கானமயில் போல அசைந்து மியூறியல் இருந்த அறைக்குள் நுழைந்தாள் நமது பிரதம கதாநாயகி நீலா.

நீலாவைக் கண்டதும் மியூறியலின் மலர்வதனம் புதுப் பொலிவுகொண்டது.

"வா நீலம்!" என்று நீலவேணியை வரவேற்ருள். மியூறியலின் அருகில் நீலவேணி வந்து அமர்ந்து கொண்டாள்.

"மன்னிக்க வேண்டும் நீலா! உனக்கு ரொம்பவும் சிரமம் தந்துவிட்டேன்" என்று மரியாதை வார்த்தைகளை உதிர்த்தாள் மியூ.

"இதில் சிரமம் என்ன இருக்கிறது? காரில் ஜம் என்று ராணிமாதிரி வந்தேன்" என்று விட்டுக் கொடுக்காமல் பதிலிறுத்தாள் நீலம்.

"உன் தலையில் ஒரு பெரிய சுமையைச் சுமத்த எண்ணியுள்ளேன்" என்ற பீடிகையுடன் பேச்சை ஆரம்பித்தாள் மியூ.

"தாராளமாகச் சுமத்துங்கள். எத்தனை பளுவையும் என் தலை தாங்கும். இளமையில் சிரஸாஸனம் செய்த அனுபவம் இருப்பதில் என் மண்டைக்கு வேண்டிய சக்தியிருக்கின்றது. தாக்குப் பிடிக்கும்" என்று ஹாஸ்ய ரசனையுடன் கூறினுள் நீலா. எழுத்தாளனின் தங்கையல்லவா! அந்த வாசனை எங்கே போகும்?

"அப்படியொன்றும் பாராங் கல்லை உன் பூத்தலையில் ஏற்ற நான் வரவில்லை. ஒரு பெரிய விருந்து வைபவத்தை நீ முன்னின்று ஒழுங்கு பண்ண வேண்டும். அவ்வளவுதான்"

"விருந்தா? யாருக்கு? எப்போ?"

"உங்கள் நாட்டு நண்பர்கள் பலருடன் நான் நெருங்கிப் பழகாமல் இதுவரை சும்மா இருந்துவிட்டேன். எழுத வேண்டும் என்றுநான் எண்ணி வந்த இலக்கிய நோக்குக்கு இது தவறு. இலங்கையிலுள்ள முக்கியமான அரசியல் தலைவர்கள், பத்திரிகைக்காரர்கள், மற்றும் கலைஞர்கள் எல்லோருடனும் நான் தொடர்பு கொள்ள வேண்டும். நான் வந்த வேலை சரளமாக ஓடுவதற்கு அது மிகவும் அவசியம். தவிரவும் இந்த எழுத்து வேலை இருக்கிறதே, அது ரொம்ப அபாயகரமான ஆயுதம். கொஞ்சம் அஜாக்ரதையாகக் கையாண்டால் ஆளையே தீர்த்துவிடும்! இலங்கைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு நான் பிரான்ஸிய மொழியில் எழுதப் போகும் நவீனம் உலகின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதே என் அவா. எங்கள் நாட்டின் ஈடு இணையற்ற எழுத்தாளர் விக்டர் ஹியுகோவின் வழித் தோன்றலில் வந்தவளானபடியால் தான் நான் இதில் இத்தனை அக்கறை காட்ட வேண்டியிருக்கிறது.

"உங்கள் நாட்டு எழுத்தாளர்களுடன் தொடர்பு கொள்வதால் என் முயற்சியின் பெரும்பாகம் இலகுவாக முடிந்துபோகும். 'எழுத்தாளன்' மக்களின் கண்ணுடி' என்று எங்கள் நாட்டில் ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதன்படி பார்க்கப் போனுல் உங்கள் நாட்டு எழுத்தாளர்களின் உறவு—நெருக்கம் எனக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை ஊகித்துக்கொள்" என்று கொஞ்சம் ஆங்கிலத்தில் கூறி முடித்தாள் மியூ.

மியூறியலின் பிரசங்கம் நீலவேணியின் நெஞ்சில் ஒரு வெறியை ஏற்படுத்தியது. தன் நாட்டின் புகழ், மியூறியல் எழுதப்போகும் கதையின்மூலம் திக்கெட்டும் எட்டப்போகிறதே என்பதை எண்ணியபோது மியூறியல் மீது எண்ணமுடியாத—விவரிக்க முடியாத ஒரு பக்தி உணர்ச்சி ஏற்பட்டது.

"நான் இப்போ என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுங்கள்" என்று கேட்டாள் நீலம்.

"ஒன்றும் செய்ய வேண்டியதில்லை! நம் ஸிலேஸ் ஓட்டலில் ஒரு பெரிய 'கொக்டெயில்' பார்ட்டிக்கு ஒழுங்கு செய்ய வேண்டும். இலங்கையிலுள்ள முக்கிய 'புள்ளி'களின் பெயர்ப் பட்டியலைச் சேகரித்து அவர்கள் எல்லோருக்கும் அழைப்பனுப்ப வேண்டும். இன்னும் ஒரு வாரத்துக்குள் இந்த ஏற்பாட்டையெல்லாம் முடிக்க வேண்டும். விருந்து அபாரமாக அமைவது உன்னைப் பொறுத்த விஷயம். செலவைப்பற்றிய கவலையே வேண்டாம்" என்று தன் திட்டத்தை விளக்கினுள் மியூ.

"சரி" என்று ... கொண்ட நீலவேணியின் ... தனை தீவிரமாக வேலை செய்தது. தன்மீது சுமத்தப்பட்ட இந்த முக்கிய வேலையை எங்ஙனம் திருப்திகரமாகச் செய்து முடிப்பது என்பதில் அவள் எண்ணம் குத்திட்டு நின்றது. தன் அண்ணு அழகேசனைப் பிடித்து எல்லாருடைய பெயர்களையும் விலாசங்களையும் சேகரிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள் நீலம்:

மியூறியலிடம் விடைபெற்ற நீலவேணி வீட்டுக்குத் திரும்பிச் சென்ற கையோடு, டாக்டர் சங்கரனின் கார் டிஸ்பன்சரிக்கு வந்து சேர்ந்தது. அதிலிருந்து அழகேசனும், அஜந்தாவும் இறங்கினுர்கள். சங்கரன் மட்டும் அவர்களுடன் வரவில்லை.

நீலவேணியைப் பார்க்க வேண்டும் என்று ஆவலோடு ஓடிவந்த அஜந்தாவிற்கு நீலம் அங்கு இல்லாதது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது. ஏன் இந்த அயோக்கியர்கள்இருக்கும் இடத்திற்கு வந்தோம் என்று எண்ணினுள். ஆனுலும் அவள் கணவனின் பாசம் அவளையறியாமலேயே தணிகாசலம் படுத்திருந்த அறைக்கு இட்டுச் சென்றது. தணிகாசலத்தைக் காயங்களுடன் கண்ட மாத்திரத்தில் அவள் பழி வாங்கும் எண்ணம் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டது.

அஜந்தாவைத் தணிகாசலம் அப்போது எதிர்பார்க்கவில்லையாதலால் கொஞ்சம் பரபரப்படைந்துவிட்டான். மியூறியலைச் சமிக்கையினுல் எச்சரிக்கை செய்துவிட்டு அஜந்தாவின் பணிவிடைகளை ஏற்றுக்கொண்டான் தணிகாசலம்.

"இப்பவே புறப்படுங்கள் நாம் வீட்டுக்குப் போய்விடுவோம்" என்று தணிகாசலத்தை அழைத்தாள் அஜந்தா.

தணிகாசலம் ஒரு வரட்டுச் சிரிப்பைச் சிதறவிட்டுக் கொண்டு, "பைத்தியமே! படித்தவளான நீயா இப்படிப் பத்தாம் பசலித்தனமாகப் பேசுவது? காயங்கள் ஆருமல் நான் வீட்டுக்கு வரலாமா? இன்னும் மூன்று நாலு நாட்களில் காயங்கள் ஆறிவிடும் என்று டாக்டர் கூறியிருக்கிருர். அதுவரையில் நான் இங்கு இருந்துதான் ஆக வேண்டும். நீ இங்கு அதிகம் தாமதிக்க வேண்டாம். வீட்டுக்குப் போய்விடு" என்று கூறி அவளை அனுப்பி வைத்தான் தணிகாசலம்.

வீட்டுக்குத் திரும்பிச் சென்ற அஜந்தாவுக்கு ஒரு அதிர்ஷ்டம் காத்திருந்தது. நிழல் மனிதன் வேஷதாரி யார்? என்ற மர்மம் அஜந்தாவுக்கு அகஸ்மாத்தாகத் தெரிய வந்தது. அத்தோடு மல்லிகைத் தோட்டப் பங்களாவிலும் இரண்டாவது தடவையாக ஒரு கொலை நடைபெற்றது. எல்லாம் மின்வெட்டு நேரத்தில் தான்......

## (17)

## நாகம் புகுந்தது

நடுநிசி. சுமார் ஒரு மணியிருக்கும். எங்கும் [illegible] புரண்டுகொண்டிருந்தாள். விருந்தினர்களின் பெயர்களை ஒழுங்குபடுத்த அழகேசனின் வருகையை எதிர் பார்த்துப் பார்த்து ஏமாற்றத்தால் அவள் உள்ளம் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது. அழகேசன் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதற்கும் மேலால் அவன் எழுதும் தொடர் கதையின்மீது அளவுக்கு மீறிய ஆத்திரம் வந்தது. கதை எழுதி முடியுமட்டும் என்னை அடிக்கடி நீ காண்பதும் கஷ்டம் என்று ஒரு தடவை அழகேசன் தன்னிடம் சொன்னது அவள் ஞாபகத்துக்கு வந்தது. எங்கே முடங்கிக்கொண்டு 'இந்துமதி'யை எழுதிக்கொண்டிருக்கிருனே? தெரியாது என்று எண்ணமிட்டபடியே படுத்துக்கொண்டிருந்தாள். இடையிடையே தனக்குத் தெரிந்த 'புள்ளி'களின் பெயர்களை ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

எத்தனை ஜாமம் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருந்தாளோ தெரியாது. அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள். கண்ணயர்ந்தவள் ஏதோ ஒரு உணர்ச்சித் தூண்டுதலால் கண்களைத் திறந்தாள்.

ஒரு மெல்லிய ஒளிக் கதிர் அவள் கண்ணுமூச்சி விளையாடும் கண்களுக்கு நேரே 'ஷூட்டிங் லைட்' குத்திட்டு நிற்பதுபோல ஒளி பாய்ச்சிக் கொண்டு நின்றது. வர வர அந்த ஒளி தன் படுக்கையை நெருங்கி வருவதுபோன்ற உணர்ச்சியும் அவளுக்கு ஏற்பட்டது.

'வில்' என்று கத்திவிடுவோமா? என்று எண்ணினுள் நீலா. கால், கை, உடம்புஎல்லாம் போட்டது போட்டபடியே கிடந்தன. தலையை இம்மியும் அங்கே இங்கே திருப்ப முடியவில்லை.

தன்னை நெருங்கி வந்த அந்த ஒளிக் கதிர் திடீரென அணைக்கப்பட்டது. ஒளி அணைந்ததுதான் தாமதம் நீலவேணி தன் பக்கத்திலிருந்த லைட் ஸ்விச்சைப் போட்டுவிட்டாள். அறை ஒரே ஒளி மயமாகியது. அந்த ஒளியில் ஒரு நெட்டை நிழல் உருவம் யமன்போல அவள் எதிரில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது,

நீலவேணி 'பரபரப்'படைந்து கட்டிலிலிருந்து எழுந்து ஓட முயற்சித்தாள்.

நீலவேணியின் திகைப்பையும், பீதியையும் அங்குவந்த அந்த நிழல் மனிதன் ஊகித்திருக்க வேண்டும்.

"நீலா!" என்று அழைத்தது அந்த மனிதனின் முகமூடிக்குள் மறைக்கப்பட்டிருந்த வாய்.

வந்திருப்பது நிழல் மனிதன்தான் என்பதை உணர அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. நிழல் மனிதனின் திடீர் விஜயத்தினுல் திக்பிரமையடைந்துவிட்ட நீலாவால் எதுவுமே பேச முடியவில்லை. மிரள மிரள விழித்துக்கொண்டிருந்தாள். இப்படியான பயங்கர உருவங்களை அவள் நேரில் பார்த்திராததால் உயிரே அடங்கிவிடும் போல இருந்தது அவளுக்கு.

"நீலவேணி"! வந்திருப்பது யார்? என்று புரிகிறதா?" என்ருன் நிழல் மனிதன்.

தட்டுத்தடுமாறிக் கொண்டு "நீங்கள்தான்..." என்று இழுத்தாள் நீலா.

"உன் ஊகம் சரி நீலா! நான்தான் அந்த நிழல் மனிதன். உனக்குத் துன்பம் தர இங்கு நான் வரவில்லை. உதவி செய்யவே வந்திருக்கிறேன். உன் அண்ணு அழகேசன் இப்போதைக்கு இங்கு வரப்போவதில்லை! நிச்சயமாக அது எனக்குத் தெரியும். உனக்கு இலங்கையின் பெரிய பெரிய புள்ளிகளின் முகவரி வேண்டுமல்லவா? இதோ இருக்கிறது வேண்டிய விலாசங்கள் எல்லாம். இவற்றை உன்னிடம் தந்துவிட்டுப்போவதற்காகவே எவ்வளவோ முக்கிய ஜோலி

(11-ம் பக்கம் பார்க்க)







ஓடிக்கொலோன் இதமளிக்கும் தன்மையில் சுகானுபவம் பெறுங்கள்.

மிக்காடோ
ஓடிக் கொலோன்
டல்கம் பவுடர்

கவர்ச்சிகரமான புதிய டின்களில் எங்கும் கிடைக்கும்.

மிக்காடோ
அன் கம்பெனி,
டாம் வீதி, கொழும்பு.
போன் : 3242.


## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை யெழுத விரும்புவர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானுலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெருத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல : 3

இந்த மூன்ருவது வெண்பாப் போட்டிக்கு "தொல்லைகள் நம் காலில் தூசு" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

—ஆசிரியர்: சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183.
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு திகதி 25—1—1959

தொல்லைகள் நம் காலில் தூசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். மோகனதாஸ், சுன்னுகம்

கே: குழந்தையின் புன்னகைக்கும் கிழவனின் புன்னகைக்கும் என்ன வித்தியாசம்?

ப: ஒன்று வாழ்க்கை என்ற போரில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கைப் புன்னகை. மற்றது, வாழ்க்கைப் போரில் புறமுதுகிட்டபின் ஏற்படும் விரக்திப் புன்னகை.

உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் எது?

ப: வாளினைவிட பேனு வலியது என்பது பழமொழி. அதைவிட வலியது பெண்களின் நாக்கு என்பது புதிய ஆராய்ச்சி!

ஃ

ம. சரவணபவன், தலவாக்கொல்லை

கே: நெஞ்சுரமும் நேர்மைத் துணிவும்கொண்ட அரசியல்வாதிகள் நம்மிடம் உண்டா?

ப: உண்டென்றல் அவர்கள் வருடாவருடம் ஜெனீவாவுக்கு யாத்திரை போவதைவிட மக்கள் உரிமைக்காகப் போராடி இலங்கை அரசாங்கத்தின் சிறைக் கதவுகளில் இன்றுமுட்டிக்கொண்டு நிற்கமாட்டார்களா?

ஃ

கிருஷ்ணக்குட்டி, மட்டக்களப்பு

கே: சுதந்திரன் வெளிவந்த சிறிது நேரத்தில் 'மருந்துக்குக்கூட' ஒரு பிரதி இல்லாதபடி எல்லாம் விற்பனையாகி விடுகின்றது. இதர சில வாரப் பத்திரிகைகள் அப்படியில்லாமல் கடைகளில் வைத்தது வைத்தபடி தூங்கி வழிகின்றன. வீட்டுக்கு விடு கொண்டு திரிந்து விற்றுலும் வாங்குவாரில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

ப: செய்வது என்ன? சுதந்திரனை வலிந்து தாக்கிப் பக்கம் பக்கமாக எழுதிப் பாருங்கள். அதற்காகவாவது ஒரு வேளை விற்கலாம். ஒருசிலர் இன்று கையாளும் முறை இது. பாவம், அப்படியாவது பிழைத்துப்போகட்டும்!

கே. சரஸ்வதி, கொழும்பு

கே: மனிதனுக்கு எத்தனை அறிவுகள் உள்ளன?

ப: கற்காலத்தில் ஐந்து அறிவுள்ள மிருகமாகவிருந்தான். பிற்காலத்தில் பகுத்தறிவைச் சம்பாதித்து ஆறறிவுள்ள மனிதனுனன். இப்போது அரசியல் மோகம் என்ற அந்தகாரம் அவன் ஆறும் அறிவை மூட்டம் இடவே திரும்பவும் ஐந்தறிவுள்ள மிருகமாகிவிட்டான் என்பதைக் கடந்த மே—ஜூன் மாதக் கலவரங்கள் காட்டவில்லையா?

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12.

ஃ

எம். கே. மஹ்மூத், வேருவலை

கே: சமயத்தைச் சமயத்துக்குத் தக்கபடி பேசும் சக்திபடைத்த ஒரு பெரியாரைக் கூற முடியுமா?

ப: பெரியாரையல்ல கனவானைக் கூறுகிறேன். அவர் தான் கனம் மந்திரி மரிக்கார் அவர்கள். பாஞ்சாலையில் பௌத்த மதமும் பள்ளிவாசலில் இஸ்லாமியமும் பேசி வருகிருர் தம் பதவியை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக.

ஃ

மெ. பாக்கியவதி, மட்டக்களப்பு

கே: உலகிலே மிகச் சிறிய பிராணி எறும்புதானு?

ப: இல்லை, மனிதருக்குள்ளேயே அப்பிராணியென்று ஒன்று இருக்கிறதே அதுவே சிறிய பிராணியாகும்.

ஃ

செல்வி க. பூவிலுறைவாணி, மாத்தளை

கே: தங்கள் கூரிய மதியினுல் கவரப்பட்டுத்தங்களைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். சம்மதம் தருவீர்களா?

ப: எப்படித் தர முடியும்? தங்களுக்கும் கூரிய மதியிருந்தால் இந்தக் கேள்வியை இவ்வளவு பகிரங்கமாகக் கேட்டு திருமதி குயுக்தியாரின் செவியில் நாராசம் வார்ப்பீர்களா?

ஃ

தெ. பரிபூரணனந்தா, காங்கேசன்துறை

கே: உலகிலேயே மிகவும் இருள் சூழ்ந்த குகை எது?

ப: நாஸ்திகர்களுடைய மனம் என்பர் ஆஸ்திகர்கள். அது தவறு. இரக்கம் என்ற பண்பு கெட்ட அரக்கர்களின் மனக் குகைதான் எலக்டிரிக் வெளிச்சத்திலுல் கூட விளக்கம் பெருததாகும்.

ஃ

ஆ. செல்லையா, இரத்தினபுரி

கே: கொம்யூனிஸம் என்றல் என்ன?

ப: பணக்காரர்களை ஏழைகளாக்கவும், ஏழைகளை அரசாங்கத்தின் அடிமைகளாக்கவும், அரசாங்கத்தைச் சர்வாதிகாரியின் களிமண்ணுக்கவும், அந்த சர்வாதிகாரியை இரண்டாவது சர்வாதிகாரியின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கவும், அந்த இரையை அமெரிக்காவின் கைக்கூலியென்றுக்கவும் கூடிய ஒரு மகத்தான மந்திரத் திட்டம்.

## குயுக்தியாரின் மந்திரி சபை

திருமதி லீலா நவரத்தினம், கிரான்

கே: மிஸ்டர் குயுக்தியாரே, இன்றுள்ள தமிழ்த் தலைவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு அரசாங்கம் அமைக்கும்படி உங்களிடம் சொன்னல் எப்படி அமைப்பீர்கள்?

ப: இதோ கவர்னர் ஜெனரலையும் நியமித்து மந்திரி சபையையும் அமைக்கிறேன். உங்களுக்குப் பிடிக்கிறதா என்று பாருங்கள்.

| | |
|---|---|
| சேர் கந்தையா வைத்தியநாதன் | கவர்னர் ஜெனரல் |
| 1. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் | பிரதம மந்திரி, வெளி விவகார மந்திரி |
| திரு வ. நவரத்தினம் | மேற்படி உதவி மந்திரி |
| 2. திரு கு. வன்னியசிங்கம் | உள்நாட்டு மந்திரி |
| திரு எஸ். நடராசா | மேற்படி உதவி மந்திரி |
| 3. திரு வி. ஏ. கந்தையா | கலை, கலாச்சார மந்திரி |
| 4. திரு என். ஆர். இராஜவரோதயம் | விவசாயம், உணவு, நிலம் நில அபிவிருத்தி மந்திரி |
| திரு பி. மாணிக்கவாசகர் | மேற்படி உதவி மந்திரி |
| 5. திரு எஸ். எம். இராஜமாணிக்கம் | நிதி மந்திரி |
| 6. திரு ஹாண்டி பேரின்பநாயகம் | கல்வி மந்திரி |
| 7. திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் | கடற்றெழில் கைத்தொழில் கூட்டுறவு மந்திரி |
| திரு எம். மாணிக்கம் | மேற்படி உதவி மந்திரி |
| 8. திரு வி. சுந்தரலிங்கம் | எல்லைப் பிரதேசம், பாதுகாப்பு, யுத்த மந்திரி |
| 9. திரு செ. இராசதுரை | தொழில், சமூக சேவா மந்திரி |
| 10. திரு அ. அமிர்தலிங்கம் | வானெலி, தபால், தகவல், ஒலிபரப்பு மந்திரி |
| திரு கே. துரைரத்தினம் | மேற்படி உதவி மந்திரி |
| 11. திரு வி. என். நவரத்தினம் | போக்குவரத்து தேசியமய சேவைகள் மந்திரி |
| 12. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் | சுகாதார மந்திரி |
| டாக்டர் தர்மலிங்கம் | மேற்படி உதவி மந்திரி |
| 13. திரு அல்பிரட் தம்பிஐயா | வர்த்தக வியாபார மந்திரி |
| 14. திரு வி. ஏ. அழகக்கோன் | நீதி மந்திரி |


## கிழக்கு மாகாண ஆசிரிய அன்பர்கட்கு

### தமிழரசுக் கட்சி வருடாந்த மகாநாடு

மேற்படி மகாநாடு சம்பந்தமாகப் பருத்தித்துறைக்கு விஜயம் செய்யும் கிழக்கு மாகாண ஆசிரிய அன்பர்களை அறிமுகம் கொள்ளவும், வேண்டிய விடுதி வசதி உபசரணைகள் செய்யவும் விரும்புகிறேம். உடன் எமக்கு எழுதவும்.

'கலாபவனம்'
மேலைப் புலோலி
பருத்தித்துறை.

வே. சிவக்கொழுந்து
நூலாசிரியன்-யாழ்ப்பாணம்



# நோத் சிலோன் றேடிங் கம்பனி லிமிட்டட்

## ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

வட மாகாண Ford விநியோகஸ்தர்கள்

போன்: 587 தந்தி: யாழ்றேடிங்


## இவைகள் மூ[illegible]ம்பிக்கைகளா?

மூட நம்பிக்கைகள் எவை என்று நாம் விளக்கத் தேவையில்லை. அவை உலகம் முழுவதும் நிரம்பிக் கிடக்கின்றன. அர்த்தமற்ற மூட நம்பிக்கைகள் தமிழர்களிடையேயும் ஏராளமாக இருந்து வருவது தெரிந்ததே.

ஆயினும், பொதுவாக மூட நம்பிக்கைகள் என்று கருதப்படும் சில நம்பிக்கைகள் அர்த்தபுஷ்டி உள்ளனவாகவும், இன்றைய விஞ்ஞான வியாக்கியானத்துக்கும், அறிவு ஆராய்ச்சிகளுக்கும் ஈடு கொடுப்பனவாகவும் இருக்கின்றன.

### உணவில் கரித்துண்டு

இரண்டொரு உதாரணங்களைப் பார்ப்போம்: "இராக் காலத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னேர் இடத்துக்கு உணவு எடுத்துச் சென்றல், சோற்றின் மேலே ஒரு கரித்துண்டு வைத்துச் செல்ல வேண்டும்"—இப்படிச்சொல்லப்படுகிறது. இது மூட நம்பிக்கையா?

பேய் பசாசுகளின் பார்வையிலிருந்து உணவைப் பாதுகாப்பதற்கு கரித்துண்டு கவசமாகிறது என்று சிலர் கதை திரிக்கிருர்கள்.

பலர் இது ஒரு மூட நம்பிக்கை என்று கருதுகிறர்கள். ஆனல் இதற்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் உண்டு என்று தெரிய வருகிறது.

### விஞ்ஞான விளக்கம்

காற்றில் இரண்டு முக்கிய கூறுகள் இருக்கின்றன. ஒன்று பிராண வாயு (Oxygen). மற்றது கரியமில வாயு (Carbon di oxide). நாம் எப்போதும் காற்றைச் சுவாசிக்கும் போது பிராண வாயுவைக் கிரகித்துக் கொண்டு கரியமில வாயுவை வெளியே விடுகிறேம். கரியமில வாயு நச்சுத் தன்மை வாய்ந்தது; எனவே அது தீங்கானது.

மரங்கள் பகல் காலங்களில் கரியமில வாயுவை உட்கொண்டு அதன்உதவியோடு தமக்கு வேண்டிய உணவைத் தயாரித்துக் கொள்ளுகின்றன. இராக்காலங்களில் அவை கரியமில வாயுவை உட்கொள்வதில்லை. மனிதனைப் போல், சுவாசிப்பதற்கு பிராணவாயுவை உட்கொண்டு, கரியமில வாயுவைப் பெருமளவில் வெளிவிடுகின்றன.

### கரி செய்யும் பணி

சமைக்கப் பெற்ற சோறு முதலிய உணவுப் பண்டங்களை வெளியே எடுத்துச் செல்லும் போது மரந்தடிகளின் கீழால் கொண்டு போக நேரிடலாம். அப்போது உணவின் மீது துர்க்காற்றுப்படிய இடமுண்டு. அப்படி கரியமில வாயு படிந்த உணவை உண்பது உடல் நலத்துக்குத் தீங்கு பயப்பதாகும்.

கரிக்கு கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை உண்டாம். எனவே கரித்துண்டை வைத்தால் துர்க்காற்று உணவில் படியுமுன் கரித்துண்டு அதைக் கவர்ந்து கொள்ளும். இந்த உண்மையை நம் முன்னேர்கள் எப்படியோ அறிந்து "இரவில்சோற்றின்மேல் கரித்துண்டு வைத்துக் கொண்டு போ" என்று காரணம் சொல்லாமல் ஒரு கற்பனையை வகுத்து விட்டார்கள்.

### இரவில் வீடு பெருக்குதல்

மற்றெரு உதாரணத்தைப் பார்ப்போம்: "விளக்கு வைத்தபின் வீட்டைப் பெருக்கித் தள்ளக் கூடாது" என்பது ஒரு கூற்று. இதற்கும் ஏதாவது விளக்கம் உண்டா? உண்டு. பழங்காலத்தில் பிரகாசமான விளக்குகள் கிடையா. மின்னி மின்னி எரியும் தேங்காய் எண்ணெய் விளக்குகள் தான் வழக்கில் இருந்தன. இவற்றின் வெளிச்சத்தில் சிறிய பொருட்களைக் கூர்மையாகப் பார்ப்பது முடியாத காரியமாயிருந்தது.

### காரணம்

அந்தக் காலத்துப் பெண்கள் வீட்டில் இருக்கும் போதே நிறைய ஆபரணங்கள் அணிந்திருந்தார்கள். அவற்றில் விலையுயர்ந்த முத்தும், பவளமும், முழு வைரமும், மாணிக்கமும் இழைக்கப் பட்டிருந்தன. குற்றி, இடித்து, அரைத்து, ஆக்கி வீட்டு வேலைகள் செய்யும் போது ஆபரணங்களிலிருந்து இரத்தினங்கள் தவறி விடவும், சங்கு புரி, பின் கொக்கி, சிமிக்கி, பரல் போன்ற சிறு உறுப்புக்கள் சிதறி விடவும் வாய்ப்புக்கள் இருந்தன. ஊசி, பாசி மணி, காசு போன்ற பொருட்களும் தவறி தரையில்விழுந்து கிடக்கலாம். பகல் காலங்களில் வீட்டைப் பெருக்கினுல் அவற்றைக் கண்டு கொள்ளலாம். விளக்கேற்றிய பின், இராக் காலங்களில் பெருக்கித் தள்ளிவிட்டால் விலையுயர்ந்த பொருட்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

(3)

அம்பாரை விமான நிலையத்திலிருந்து நம்மை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட இராணுவ விமானம் மேலே உயர்ந்துகொண்டேயிருந்தது. கண்ணுக்குத் தெரிந்த கட்டடங்கள்-காடுகள் மறையத் தொடங்கின. இப்போது விமானம் முகில்களுக்கிடையில் செல்லத் தொடங்கியது. வெள்ளை வெளேரென்ற முகில்கள் விமானத்தை மூடிச் சென்றன. சில நிமிடங்களுக்குப் பின் விமானம் கீழே இறங்கத் தொடங்கியது. மறுபடியும் மண் கண்ணுக்குப் பட்டது. கட்டடங்கள் மனித உருவங்கள் தெரியலாயின. கீழே பார்த்தால் எங்களுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. விமானம் இறங்கிக்கொண்டிருந்த பிரதேசம் கொழும்பு நகரமல்ல என்ற சந்தேகம் உதித்தது. பக்கத்தில் இருந்த இராணுவ அதிகாரியுடன் பேசினேம்.

### எங்கே போகிறேம்?

"விமானம் எங்கு செல்கிறது?" என்று கேட்டதற்கு அவர் திரிகோணமலையை நோக்கி செல்வதாகச் சொன்னார்.

நாங்கள் சந்தேகப்பட்டது சரியாகப்போய் விட்டது. விமானம் நிலத்தில் இறங்கியது. உள்ளேயிருந்த இராணுவத்தினர் கீழே இறங்கினர்.

கூடவே நாங்களும் இறங்கினேம். கண்ணுக்கு தெரிந்த தூரத்தில் எங்களைத் தெரிந்தவர்கள் இருவர் நின்றனர். ஒருவர் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு என். ஆர். இராஜவரோதயர்—அடுத்தவர் மூதூர்ப் பிரதிநிதி ஜனுப் முகமது அலி.

கை கூப்பி இருவரும் வணக்கம் கூறினேம். ஒருசில நிமிடங்கள் நாட்டின் நிலைமைபற்றி சம்பாஷித்தோம். விமானம் புறப்படுவதற்கு ஆயத்தமாகியதும் விரைந்து சென்று ஏறினேம். புதிய இராணுவ வீரர்கள் கூடவே

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை

ஏறினர்கள். எங்களுடன் அம்பாரையிலிருந்து வந்த இராணுவ வீரர்கள் அங்கு தங்கிவிட்டார்கள்.

### வானிலே வானொலி

விமானம் இப்போது கொழும்பை நோக்கி சென்றுகொண்டிருந்தது. ஒருவரோடொருவர் பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம்.

இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்ட செய்திகள் பற்றி நீண்ட நேரம் விவாதித்தோம்.

வேல்போல் மின்னும் மழைத் துளிகள் விமானத்தில் பட்டுச் சிதறின. மலைபோன்ற மேகக் குவியல்கள் விமானத்தில் மோதிச் சிதைந்தன.

### முஸ்தபா கமால் பாஷா?

'இலங்கையில் ஜனநாயகம் என்பது ஒரு கேலிக்கூத்தாகிவிட்டது' என்று கனத்த குரலில் கூறினர் பொத்துவில் பிரதிநிதி ஜனுப் முஸ்தபா.

ஜனுப் முஸ்தபா தமிழரசுக் கட்சியின் அபேட்சகராக பொத்துவில் தொகுதியில் போட்டிபோட்டவர். அபரிமிதமான வாக்குகளால் வெற்றிகண்டவர். செயல் வீரர்கள் மலிந்த திருக்கோயில், தம்பிலுவில் போன்ற கிராமங்கள் இவர் தொகுதியிலேதான் இருக்கின்றன. தேர்தலின்பின் நடைபெற்ற வரவேற்புக் கூட்டங்களில் ஜனுப் முஸ்தபா செய்த சங்கநாதத்துக்கு அளவேயில்லை. அவர் இலங்கை இஸ்லாமிய சமூகத்தில் ஒரு முஸ்தபா கமால் பாஷாவாக விளங்குவார் என்று பலரும் எதிர்பார்த்தார்கள்.

### ஆட்சி மொழி

19[illegible] ஆண்டு ஜ[illegible] இலங்கை[illegible] டம் பாராளுமன்றத்தில் புகுத்தப்பட்டது. இலங்கையின் சரித்திரத்தில் ஒரு மொழி, இலங்கையின் அரசியல் மொழியாக இருந்ததில்லை. உள்நாட்டவர்களால் ஆளப்படும் காலத்திலும் வெளிநாட்டார் ஆட்சிக் காலத்திலும் சில பகுதிகளில் தேசிய மொழிகள் அரசியல் மொழிகளாக இருந்ததுண்டு. ஆங்கிலேயர்தான் ஒரு மொழி வைத்து ஆட்சி செய்தனர். உள்நாட்டு மக்களின் ஆட்சிக்காலத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கையில் ஒரே மொழி தமிழாக இருந்ததுண்டு. பின்பு சிங்களமும்—தமிழும் அரசியல் மொழிகளாக விளங்கி வந்தன.

### சத்தியாக்கிரகம்

ஆனல் 1956 ஜூன் 5ல் தமிழுக்கு அரசியல் மொழி அந்தஸ்து இல்லாமல் செய்யப்பட்டது. தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தக் கொடுமையை எதிர்த்து பாராளுமன்றத்தில் சத்தியாக்கிரகம் செய்வதென்று தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. அம்முடிவை ஏற்று நூற்றுக் கணக்கானவர்கள் வடகிழக்கு மாகாணம்—மலைநாடு ஆகிய பகுதிகளிலிருந்து கொழும்பில் கூடி காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் செய்தனர். அக்கோஷ்டியில் முன்னணியில் நின்ற முஸ்தபா காடையர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். அப்படியான தாக்குதலுக்கு இலக்கான நமது நண்பர்—பொத்துவில் பிரதிநிதி இப்பொழுது எம் இயக்கத்தில் இல்லை. அவரை நினைத்தால் உண்மையில் வருத்தமே. எந்த சக்திகள்—எத்தகைய எண்ணங்கள் அவரை எம் இயக்கத்தில் இருந்து பிரித்தனவோ நாம் அறியோம்!

### கொழும்பில் காலடி வைத்ததும்....

விமானம் இரத்துமலானையில் தரைதட்டியது. ஒருவர் பின் ஒருவராக இறங்கினேம். விமான நிலையத்தில் பல விமானங்கள் இரைச்சல் எழுப்பிக்கொண்டு நின்றன. நிலையத்தில் திருவாளர்கள்: கு. வன்னியசிங்கம் எம். பி., வி. என். நவரத்தினம் எம். பி., ஸி. சுந்தரலிங்கம் எம். பி. ஆகியோர் கைகளை உயர்த்தி வணக்கம் செய்து வரவேற்றனர். விமான நிலையம் முழுவதும் இராணுவமயமாகக் காட்சியளித்தது.

வட மாகாணத்திற்கு அனுப்பப்பட்ட விமானமும் அப்போதுதான் வந்து சேர்ந்ததாக அறிந்தோம்.

கொழும்பு நகரப் பொலிஸார் பிரத்தியேக வண்டி கொண்டு வந்திருந்தார்கள். அந்த வண்டியில் எங்கள் அனைவரையும் ஏறச் சொன்னர்கள். ஏறியதும் பின்பக்கக் கதவை தவருமல் பார்த்துப் பூட்டிக்கொண்டார்கள். வண்டி புறப்பட்டது.

(தொடரும்)

## கடல் கடந்த கதை

எ[illegible]டாத கதை!—தரணியாண்ட பண்டைத் தமிழனின் பழங் கதையல்ல. தற்காலத் தன்மானத் தமிழன், தமிழரசுத் தளபதியின் புத்தம் புதிய கதை!

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் தமது வாழ்க்கைத் துணைவி மங்கையர்க்கரசியாருடன் கடந்த வருடம் நடந்த இன கலவரத்தின்போது கப்பலோட்டிச் சென்று கிழக்கிலங்கைக் கரையில் காலடி வைத்த உண்மைக் கதை!

தமக்கே உரிய பாணியில் பிரத்தியேகமாகச் சுதந்திரனுக்கெனத் திரு அமிர்தலிங்கமே எழுதுகிருர். தொடர்ந்து வெளிவரும்.

ஆசிரியர்: சுதந்திரன்

# நவரத்தினக் கலசம்

1

எந்த விஷயத்திலுமே ஊமைக் காயத்தைப் பொறுத்துக்கொண்டு மனிதன் வாழ்நாளைக் கடத்துவதென்பதை எண்ணிப் பார்ப்பதுகூட பயங்கரமாகத் தோன்றுகிறது. உடலின் வெளிப்புறத்தில் படும் காயத்தைக் காட்டிலும் "கான்ஸர்" போன்ற உள் நோய்தான் உயிருக்கு அதிக ஆபத்தை விளைவிப்பது. சாமானிய மனிதர்களின் துன்பங்களுக்கும் இதே விதி பொருந்தும். வறுமையினுல்கூட மனிதனுக்கு வாழ்க்கை வெறுத்துப் போகாது. ஆனல் இல்லறத்திலுள்ள வறட்சி ஒன்றே தற்கொலை எண்ணங்களை அவன் மனதில் தலைநீட்டச் செய்வதற்குப் போதுமானது.

—வி. ஸ. காண்டேகர்

2

என்னுடைய வார்த்தைகள் ஆண்டவனுடைய வசனத்தை மாற்றிவிடமாட்டா; ஆனுல், ஆண்டவனுடைய வசனம் என் வார்த்தைகளை மாற்றியமைக்கக்கூடும்.

—நபிகள் நாயகம் (ஸல்)

3

ஒருவன் நெருப்பினுள் இருந்து தூங்குதலும் இயலும். ஆனல் வறுமை நிலையில் எவ்வகையாலும் கண் மூடித் தூங்குதல் அரிது—"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது"

—வள்ளுவர்

4

மனிதன் மனிதனுகப் பிறந்தும் பறவையைப்போல ஆகாயத்தில் பறக்கவும், மீனைப்போல தண்ணீரில் நீந்தவும் கற்றுக்கொண்டிருக்கிறன். ஆனல் மனிதன் மனிதனுகப் பிறந்தும் மனிதனைப்போல தரையில் எவ்வாறு நடப்பது என்பதைக் கற்றுக்கொள்ளவில்லை. அதைக் கற்றுக் கொடுப்பது திருக்குறள்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்

5

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டுமென்று நினைத்தால் நீங்கள் ஒரு உதாரணமாக வாழ வேண்டியதில்லை. அவர்கள் உங்கள் குறைபாடுகளை அறிந்துவிடாதபடி எச்சரிக்கையாக வாழ்ந்தாலே போதுமானது.

—பெர்னுட் ஷோ

6

நல்லவனுக வாழ்வது சிறந்ததுதான். ஆனுல் அது சாத்தியப்படாவிட்டால் நல்லவனுக வாழும்படி பிறருக்காவது உபதேசம் செய்யுங்கள். தான் கெட்டாலும் பிறர் வாழ வேண்டும் என்று நினைப்பது நல்லதல்லவா?

—மார்க் டுவெயின்

7

ஏணியின் மேல் படியை அடைய விரும்புகிறவன் அவசரப்பட்டுத் துள்ளிக் குதிப்பதில் அர்த்தமில்லை. அதன் கீழ்ப் படியிலிருந்து ஆரம்பிப்பதே புத்திசாலித்தனமாகும். வாழ்க்கையென்ற ஏணிக்கும் இது பொருந்துவதாகும்.

—பைத்த கோரஸ்

8

சமூகமும் ராஜ்யமும் தனி மனிதர்களின் சுபாவங்களை ஒத்திருக்கும். ஆசைகளை அடக்கி, அறிவையே நாடி நிற்கும் உத்தம ஞானிகளைத் தலைவர்களாகக்கொண்ட ஆட்சியே ஆதர்ச ராஜ்யத்தைத் தோற்றுவிக்கும். ராஜஸ குணம் மேலிட்டவர்களைக்கொண்டு அரசுபுரியும் ராஜ்யம் படிப்படியாகப் பணக்காரர் ஆட்சியாகவும் திரிந்து சமூகம் சீர்குலைந்து விடும்.

—க. சந்தானம்

9

கன்னிப் பெண்ணைக் காதலித்து விவாகம் செய்தவன் அதிகாலையில் மலர்ந்த பவள மல்லிகையின் மோகன வாசனையை முகர்கிறுன். அந்தப் பெண்ணும் வாழ்க்கையென்னும் எட்டாத ஆகாயத்தில் வர்ணமயமான வானவில்லை முதன் முறையாகக் கண்டு இன்புறுகிறுள். விதவைப் பெண்ணை விவாகம் செய்தவன் அந்தியில் விரிந்த மந்தாரையின் மறுமலர்ச்சியைக் காண்கிறுன். அந்தப் பெண்ணே ஒரு முறை படித்த துப்பறியும் நவீனத்தை மீண்டும் ஒரு முறை வாசித்து இன்பம் காணத் துடிக்கிறுள்.

—குயுக்தியார்

# இவை மூடநம்பிக்கைகளா?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொலைந்து போய்விடும். இதைத் தவிர்ப்பதற்கே 'இராக்காலத்தில் கூட்டித் தள்ளினுல் சீதேவி போய் விடுவாள்' என்று பயங் காட்டி வைத்தார்கள். பொன்னும், பொருளும், காசும், பணமும் வீட்டுக்கு சீதேவி தானே.

### இன்று பொருந்துமா?

கோடி சூரியப் பிரகாசம் என்று இதிகாசங்களில் வர்ணிப்பது போன்ற மின்சார விளக்குகள் இன்று வந்தபின்னரும் இந்த சம்பிரதாயத்தை அனுஷ்டிக்க வேண்டுமா என்பது ஒரு நல்ல கேள்விதான். ஆம், இரவில் விடு பெருக்கக் கூடாது என்பது இன்றைய சூழ்நிலையில் மூட நம்பிக்கையேயாகும்.

### தொகுத்து தருபவர்

அறிவுக்குப் பொருத்தமான நம்பிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை வாழ்க்கையில் பயன் தருவனவாய் இருக்க வேண்டும். மூட நம்பிக்கைகள் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும். எனவே, நம்மிடையே மூட நம்பிக்கைகள் என்றே சரியான நம்பிக்கைகள் என்றே நிலவி வரும் சில கோட்பாடுகளைத் திரட்டி இங்கு தொடர்ந்து தருவதற்கு முன் வந்துள்ளார்,—பல்வேறு சமூகங்களின் பழக்க வழக்க ஆராய்ச்சியிலும், கிராமிய இலக்கியங்களிலும் வல்லுனரான—திருவாளர் வெள்ளவத்தை மு. இராமலிங்கம்.

### ஆராய்ச்சிக்கு இடம்

திருவாளர் இராமலிங்கம் திரட்டித் தரும் "நம்பிக்கை"களுக்கு ஆதாரம் உண்டேல் அறிந்தவர்கள் வெளிப்படுத்த வேண்டும். இன்றேல் பிரஸ்தாப நம்பிக்கைகள் விரைவில் மூட நம்பிக்கைகள் என்று ஒதுக்கி அலட்சியப் படுத்தப்படும். அது கூடாது. ஆதாரம் அற்றவை உடனடியாகவே நீக்கப்பட வேண்டும். இன்றேல் அவை ஒரு சமூகத்தின் தீரத்தையும், வீரத்தையும், துணிவையும், செயல் வன்மையையும் மண்ணக்கி விடும்.

இப்படியான ஒரு ஆராய்ச்சிக்கும், கருத்துப் பரிமாறலுக்கும் சுதந்திரன் வகை செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

### எழுதி அனுப்புங்கள்

"இவை மூட நம்பிக்கைகளா?" என்ற இப்பகுதியில் திருவாளர் இராமலிங்கம் திரட்டித் தரும் 'நம்பிக்கைகள்' அவ்வப்போது வெளியிடப்படும். வாசகர்கள் அவை மூட நம்பிக்கைகள் தானு அல்லது அறிவுக்கும் ஆய்வுக்கும் பொருத்தமானவையா என்பதை தக்க ஆதாரங்களோடு விளக்கி எழுதலாம். சிறந்த விளக்கங்கள் சுதந்திரனில் வெளியிடப்படும். விளக்கங்கள் எழுதி அனுப்ப வேண்டிய விலாசம் "இவை மூட நம்பிக்கைகளா?" C/o ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி, 1183, கொழும்பு.

ஆசிரியர்
சுதந்திரன்

### நம்பிக்கைகள்

1. பயணம் போகும் போது "போகிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக் கொள்ளக் கூடாது. "போய் வருகிறேன்" என்றே விடை பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. பல்விழுந்தால் அதைப் பாம்புப் புற்றுக்குள் போட வேண்டும்.

3. செத்தவன் 'பெண்டிலை'க் கட்டினுலும் விட்டவன் 'பெண்டிலை'க் கட்டக் கூடாது.

4. காலில் சுளுக்கு ஏற்பட்டால் 'காலால் பிறந்தவர்களை'க் கொண்டு உருவச் செய்ய வேண்டும்.

5. நீரும் நெருப்பும் ஒரே முறையில் எடுத்துச் செல்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்:

# தியாகச் சின்னம்

இளந் தம்பதிகளான ஒரு கணவனும் மனைவியும் இலங்கையின் புராதன சிற்பச் செல்வங்களையும் ஆட்சிச் சின்னங்களையும் கண்டு களிக்கும் நோக்கமாக அநுராதபுரம், சிகிரிய முதலிய இடங்களைச் சுற்றி விட்டு பொலன்னறுவைக்கு வருகிறார்கள். சிதைந்த பல சின்னங்களையும் சிவ ஆலயத்தையும் பார்த்து விட்டு பராக்கிரமபாகு சமுத்திரம் என்ற பிரம்மாண்டமான குளத்தைக் கண்டு அதிசயிக்கிறார்கள். குளத்துக்குப் பக்கத்தில் கற்பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் பிரம்மாண்டமான சிலை மனைவியின் கண்ணில் படுகிறது. அதைப் பற்றிய சரித்திரத்தை தெரிந்துகொள்ள ஆசைப்பட்ட மனைவி கணவனிடம் கேட்கிறாள்:

மனைவி: அதோ பாருங்கள், அந்தச்சிலையை.எவ்வளவுகம்பீரமாக தோற்றமளிக்கிறது! சிகிரிய, அநுராதபுரம், இசுருமுனிய முதலிய இடங்களிலுள்ள சின்னங்களைப் பற்றியெல்லாம் சரித்திர உண்மைகளைச் சொன்ன உங்களுக்கு இதுவும் தெரியாமலிருக்கக் காரணம் இல்லை. சொல்லுங்கள், அது யாருடைய சிலை? பார்த்தால் யாரோ ஒரு முனிவருடைய சிலை போலல்லவா தோன்றுகிறது!

கணவன்: கண்ணே, நீயாக கேட்காவிட்டாலும் கூட நான் சொல்லத்தான் இருந்தேன்...கொஞ்ச நேரத்துக்கு முன்னால் பார்த்தோமே சிவன்கோவில், அதற்கும் இந்த சிலைக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது.

மனைவி: அப்படியா, அந்த சிவன்கோவில் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாக சொன்னீர்களே. ஒரு வேளை இந்த சிலை அந்த கோவிலை நிர்மாணித்த அரசனுடையதாக இருக்குமோ?

கணவன்: சரிதான் போ! ஒரு சில சரித்திராசிரியர்களும், புதை பொருளாராய்ச்சியாளர்களும் செய்த அதே தவறைத் தான் நீயும் செய்கிறாய்.

மனைவி: என்ன அப்படி சொல்லுகிறீர்கள்? சரித்திராசிரியர்கள் கூடவா தவறு செய்வார்கள்?

கணவன்: எல்லோரும் அல்ல, ஒரு சிலர். தன் இனத்துக்கும் மதத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற அவாவினால் சரித்திர நிகழ்ச்சிகளை திரித்து கூறும் வழக்கம் சிலரிடம் இருந்திருக்கிறது. சரித்திரத்திலே ஆதாரம் கிடைக்காத சந்தர்ப்பத்தில் சூழ் நிலையை ஆதாரமாகக்கொண்டு தீர்ப்பு அளிக்கும் வழக்கம் ஒரு சில புதைபொருளாராய்ச்சியாளர்களிடம் இருந்து வருகிறது......இந்த சிலையைப் பற்றிய சரித்திரமும் அப்படித்தான்.

மனைவி: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இதைப் பற்றிய சரித்திரமே ஒரு புதிராக இருக்கும் போலிருக்கிறதே!

கணவன்: ஆமாம் கண்ணே! சிலர் இதை மகாபராக்கிரமபாகு அரசனுடையது என்று சொல்லுகிறார்கள். சிலர் அகஸ்திய முனிவருடையது என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை வேறு. அதைப் பற்றி சொல்லுமுன் இந்தச் சிலையும் கொஞ்ச நேரத்துக்கு முன் நாம் பார்த்த சிவன் கோவிலும் கட்டப்பட்ட காலத்திலே இலங்கையின் அரசியலைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கிறது. கவனமாகக் கேள்:

கி. பி. 985-ம் வருடத்திலே சிம்மாசனமேறிய இராச ராச சோழ சக்கரவர்த்தி, கங்கபாடி, நுளம்பபாடி, வேங்கை, கலிங்கநாடு முதலிய நாடுகளைப் போரில் வென்று இலங்கையின் ஒரு பகுதியையும் கைப்பற்றினார். தன் ஆட்சிக் காலத்திலே அவர் செய்த மகத்தான வேலை தஞ்சாவூரிலே நிர்மாணித்த பிரகதீஸ்வரர் ஆலயமாகும்.

அவருக்குப் பின் சிம்மாசனமேறிய இராஜேந்திர சோழ சக்கரவர்த்தி சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க

சரஸ்வதி நாகராஜன்

எண்ணி லக்ஷத்தீவு முதலிய இடங்களையும் இலங்கையின் பெரும் பகுதியையும் கைப்பற்றினர். அவர் காலத்திலே சோழ சாம்ராஜ்யம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது.

இலங்கையைக் கைப்பற்றியவுடனே அதை சோழ நாட்டின் ஒரு மாகாணமாக்கி பொலன்னறுவைக்கு சனநாதபுரம் என்று நாமகரணம் சூட்டப்பட்டது.

மனைவி: சனநாதபுரம்...... என்ன அழகான பெயர்.

கணவன்: ஆமாம். சனநாதபுரத்திலே சஞ்சயன் என்னும் அரச பிரதிநிதி ஆட்சி செய்து கொண்டிருந்தார். சோழ நாட்டிலிருந்து ஏராளமான குடும்பங்களும் வீரர்களும் இலங்கையில் குடியேறினார்கள். தன் ஆட்சியின் சின்னங்கள் என்றென்றும் இலங்கையில் திகழ வேண்டுமென்று விரும்பினார் இராஜேந்திர சோழர். ஆகவே கீழை சோழ நாட்டிலுள்ள ரம்மேளக்காடு என்ற ஊரிலிருந்து மாயவர் என்ற கை தேர்ந்த சிற்பியையும் பல கல் தச்சர்களையும் சனநாத புரத்துக்கு அனுப்பினார். மாயவர், அழகு தெய்வமான தன் ஒரே புதல்வி விநோதினியுடன் இங்கு குடியேறி சிவாலய நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்தார்.



பொலன்னறுவையில் உள்ள புராதனச் சிலை

இதே காலத்தில், கழுத்துறையைத் தலை நகரமாகக் கொண்டு தென்னிலங்கையின் ஒரு பகுதியை விக்ரம பாண்டியன் ஆண்டு வந்தான். சோழர்களை இலங்கையிலிருந்து துரத்த அவன் செய்த முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் ஒவ்வொரு தடவையும் தோல்வி தான் அவனை எதிர் கொண்டழைத்தது. இதற்கு காரணம் இலங்கையில் சோழர்களின் தளபதியாயிருந்த வீரவர்மனின் திறமையும் பலமும்தான்.

கண்ணே, இது தான் அப்பொழுதிருந்த சூழ் நிலை. மற்ற விஷயங்களை சீக்கிரத்தில் நீ புரிந்து கொள்வாய். வா, போகலாம்.

## காட்சி--2

சஞ்சய அரசின்சபை. தளபதி வீரவர்மன், உப தளபதி தாண்டவன், சிற்பி மாயவர், மந்திரி ஜகத்பாலர் முதலியவர்களும் மற்றும் ராசப் பிரதானிகளும் வீற்றிருக்கிறார்கள். சிறிது நேரத்தில் "மகாராசாதி ராச இராஜேந்திர சோழ சக்கரவர்த்தி வாழ்க" "சனநாதபுர சஞ்சய சோழ அரசர் வாழ்க" என்ற கோஷங்கள் வானைப் பிளக்க, சஞ்சயர் சிம்மாசனத்தில் வந்து அமர்கிறார். அரசரின் ஆக்ஞைப்படி நடனமாதின் ஆட்டம் நடக்கிறது. நடனம் முடிந்ததும் விசாரணை ஆரம்பிக்கிறது.

சஞ்சயர்: ஜகத்பாலரே, தென் பிராந்தியத்துக்கு சென்றிருக்கும் ஒற்றர் படைத் தலைவனிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா?

ஜகத்பாலர்: அரசே, இன்றைக்குச் சரியாக எட்டு நாளாகிவிட்டது, இன்னும் ஒரு தகவலையும் காணோம். சக்கரவர்த்தியிடம் சென்றிருந்த தூதுவன் திரும்பி விட்டான். சிவன்கோவில் திருப்பணி எந்த அளவில் இருக்கிறது என்பதைக் கேட்டிருக்கிறார் சக்கரவர்த்தி. அதன் கும்பாபிஷேகத்தை இலங்கைப் போரின் வெற்றி விழாக் கொண்டாட்டமாக

(12-ம் பக்கம் பார்க்க)

## ஊசிப் பட்டாஸ்

மந்திரி இலங்கரத்தினுவிற்கு ரூபா 25000 மும் பென்ஷனும்.

—பத்திரிகை செய்தித் தலைப்பு

தன்வில்லத்தில் தான் தருமம் தொடங்கும் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு உதாரணம் என்கிறார் வேலை நிறுத்தத்தின் பொழுது சம்பள 'வெட்டு'ப் பெற்ற ஒரு குமாஸ்தா.

ஃ

பிலிப் மந்திரியார் தஹநாயகாவை மெச்சுகிறார்.

—பத்திரிகை செய்தித் தலைப்பு

சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்கிறார், அநேக மந்திரிகள் பிலிப்புக்கு மாறாகத் திரள்கிறார்கள் என்ற செய்தியை வாசித்த ஒருவர்.

ஃ

"அரசாங்கம் அவசரப் படாது"

—ஆர். ஜி. சேனநாயகா

சாரங்கள் இறக்குமதிக்கு தடையுத்தரவு விதித்த பொழுது பெற்ற அனுபவம் போலும் என்கிறார் புடைவை வியாபாரி ஒருவர்.

ஃ

இலங்கையில் பல பாகங்களிலுமுள்ள வாடி வீடுகளில் சேரும் அழுக்குத் துணிகளை வெளுப்பதற்காகக் கொழும்புக்குக் கொண்டுவரத் திட்டமிடுகிறார் மந்திரி ஆர். ஜி. சேனநாயகா.

—தினசரிச் செய்தி

'தனைச்சுச் சுமத்தல்' என்ற மொழிக்குப்புது உதாரணம் என்கிறார் நாட்டுத் தொழிலாளி ஒருவர்.

ஃ

பாடசாலைகளில் இடவசதி தட்டுப்பாட்டுக்கு தபால் மூலம் போதனை தான் மருந்து என்று கல்வி மந்திரி காரியாலயம் யோசித்து வருகிறது.

—செய்தி

தபால் கந்தோர்களில் தபால் மூட்டைகளைப் புரட்டவே இடமில்லாமல் முட்டுப்படும் மந்திரி மரைக்காயர் "ஐயோ பாம்பு" என்று குளறக்கூடுமே என்கிறார் தபால் கந்தோர்ச் சிப்பந்தி ஒருவர்.

ஃ

யூகோசிலேவியாவின் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ இரண்டு முறைகளில் நெடு நேரமாகப் பிரதமர் பண்டாவுடன் சம்பாஷணை நடத்துவார் என்கிறார் பத்திரிகை வாசகர் ஒருவர்.

எங்கு? இரண்டு தடவையும் இராணி மாளிகையில் தானே? என்கிறார் அரசியல் நுட்பமறிந்த ஒருவர்.

# நாகரிகம் பேசினால்....!

எனது பெயரைச் சொல்லிக் கொண்டு நீங்கள் நடாத்தும் அலங்கோல வாழ்க்கையை வர்ணிக்க வரவில்லை. அதற்குப் பாகம் பாகமாக புத்தகங்கள் அச்சிட வேண்டும். உங்களில் யாராவது வசதியுள்ளவர்கள் ஒரு மலிவுப் பதிப்பை வெளியிடுங்கள். எனக்காக நீங்கள் என்னவெல்லாமோ செய்கிறீர்கள். பணத்தைக் கொடுத்து நீளக் கையுள்ள சட்டை தைத்து, கையை மடித்து விடுகிறீர்கள். முழங்கையில் மணிக்கூடு கட்டுகிறீர்கள். தலையை நாகபடம் போல சீவி விடுகிறீர்கள். பெண்களென்றாலோ, அந்த ரங்க அங்கங்களை வெளியில் தெரியும்படியாக கண்ணாடிப் புடவைகளை அணிகிறீர்கள். நல்ல வேளை, அவை சாதாரணக் கண்ணாடிப் புடவையாக இல்லாமல் பூதக்கண்ணாடியின் தன்மையை மட்டும் பெற்றிருந்தால் ஆண்கள் செத்தார்களோ பிழைத்தார்களோ...........

### ஸ்ரீமான் வயிற்றெரிச்சல்

நீங்கள் எதைச் செய்தாலும் எனக்கென்ன? ஆனால் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபா உழைப்பவனும் கடன்பட்டாவது எனக்காக தினசரி ஐந்து ரூபா செலவு செய்யவும் காத்திருக்கிறான் என்பதை எண்ணும் பொழுது தான் எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. வேண்டுமென்றால் ஒரு உதாரணத்துக்கு ஸ்ரீமான் வயிற்றெரிச்சலைப் பாருங்களேன்.

அவர் பிறந்த வேளை தகப்பனார் பஞ்சாங்கத்தைப் புரட்டினார். வானு வரியில் பெயர் வைத்தல் உத்தமம் என்பதைப் படித்தபோது வயிற்றெரிச்சல் தான் அவர் நினைவுக்கு வந்தது. முதல் நினைவுக்கு வந்த பெய[illegible] இருக்க ஒரு இரண்டாவது பெயரை வைப்பது அபசகுனம் என்றுகருதி அவருக்கு "வயிற்றெரிச்சல்" என்றே நாமகரணம் செய்தார்.

### ஆசை

ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் வளர்ந்து, படித்து, கொழும்புக்கு வந்தபோது, ஒரு அரசாங்க அலுவலகக் கதிரை அவரை வரவேற்று மாதம் நூற்றைம்பது ரூபாவைத் தானம் செய்தது. இந்தச் சம்பளப் பணத்தில் அரைவாசியை எனது வாயைத்

பரதன்

திறந்து திணித்து விடுவதால் சம்பள தினத்தன்று ஆயிரமாயிரம் கரங்கள் அவரை நோக்கி விரியும் போது பணத்தைக் 'கிள்ளித் தெளி'த்து விட்டு குத்துவிளக்குக் கொளுத்திக் கணக்குப் பார்த்துக் குப்புற விழுந்து படுக்காமல் அவரால் இருக்க முடியவில்லை. என்றாலும் ஸ்ரீமான் வயிற்றெரிச்சலுக்கு ஒரு கைக்கடிகாரம் வாங்கி 'ஸ்டைலா'க கட்டிக்கொள்ள வேண்டுமென்ற தாளாத ஆசை இருந்து வந்திருக்கிறதென்றால், அவர் எத்தனை துணிச்சல்காரன் என்பதைப் பாருங்களேன். தெருவோரத்துக்கு விற்பனைக்கு வரும் சில்லறைக் கடிகாரங்களை வாங்கிக் கொள்ள அவர் தயாராக இல்லை. கொஞ்சம் பெரிதாகத் தான் தேவைப்பட்டது.

### பெரிய தவறு!

பெரிது என்றால் நீள-அகல-உயர- ஆழத்திலல்ல, விலையில். அதற்காக அவரால் மாதாமாதம் ஒரு சிறிய தொகையை மிச்சப்படுத்தி வைக்க முடிந்திருந்தால், குமாஸ்தாக் கும்பல்—கற்பனை[illegible]க் கொடுத்து காற்றிலே கோட்டை கட்டி வாழும் குமாஸ்தா யந்திரங்கள் ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் உயிருடன் இருக்கும் பொழுதே கோவில் கட்டிக் கும்பிட்டிருக்க வேண்டுமே! அதெல்லாம் இல்லை. அலுவலகத்தில் ஒரு பியூன் நடத்திய 'சீட்டு' ஒன்றில் சேர்ந்தார். சீட்டின் பெயரால் இவர் செலுத்த வேண்டிய பணம் முழுவதையும் செலுத்தினார், நாணயமாக. அந்தப் பியூன் மேலும் கொழும்பில் இருந்தால் தானே நாணயக் குறைவு ஏற்படும் என்று எங்கேயோ ஓடிவிட்டான். ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். களைப்பு நீங்கி எழுந்த போது, அவர் இன்னொரு பாரதூரமான தவறைச் செய்து விட்டதாக எண்ணினார். அந்த பாழாய்ப் போன ஜென்மம் என்ன செய்து விட்டார் தெரியுமோ? கல்யாணம் செய்து கொண்டாரய்யா, கல்யாணம்!

### ஸ்ரீமதி வயிற் அவதாரம்

அவருடைய பத்தினியாளுக்குப் பெயர் அவதாரம். ஸ்ரீமதி வயிற். அவதாரத்துக்கு என்மீது ஏற்பட்டிருந்த அளவு கடந்த மோகத்தினால் ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் கடிகாரம் வாங்கும் யோசனையைக் காலவரையின்றி ஒத்திப் போட்டதோடு, "ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் நூறு இருநூறு ரூபா செலவு செய்து கடிகாரங்களை [illegible] கட்டிக்கொள்வது சுத்தமான [illegible] இப்படிப்பட்டோர் நாலு நாலு பேராகச்

(13-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்,
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடம் பொருளாதாரம் 3

திட்டமிடுதல்:

# இலட்சியங்கள்-குறிக்கோள்கள்

## PLANNING: PRINCIPLES AND OBJECTIVES

### பாத்திரங்கள்

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

**உபாத்தியாயர்:**

ஓ, அப்பாக்குட்டியோ, வா. வந்திரு.

**அப்பாக்குட்டி:**

உபாத்தியாயர், எங்கேயோ ஓர் ஊரிலிருந்து ஒரு ஜனாதிபதியாம் அவர் இலங்கைக்கு விஜயம் செய்கிறாராம் இப்போ. அவருக்கென்டு விசேடமாய்ச் செய்த ஒரு காராம். அந்தக் காருக்கு சுட்டால் அல்லது குண்டு போட்டால் குண்டு காரில் தைக்கமாட்டுதாம். அந்தக் காரை அவர் இங்கு வரமுன்னமே கொண்டுவந்துவிட்டினமாம். ஒரு கலன் பெற்றோலுக்கு அஞ்சு கட்டைதான் அந்தக் கார் ஓடுமாம்.

**உபாத்தியாயர்:**

ஆம் அதுதான் ஜனாதிபதி டிட்டோ-மாஷல் டிட்டோ என்று சொல்வார்கள். அவர் ஒரு சேனைத் தளபதி என்றதை அந்த மாஷல் என்ற பட்டம் குறிக்கும். அவர் யூகோஸ்லேவியா என்ற தேசத்து ஜனாதிபதி. அவருடைய தேசம் ருஷியாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் இருக்கின்றது. அவருடைய அரசாங்கத்தையூகோஸ்லேவியாவின் மக்கள் குடியரசு என்று சொல்வர்.

**அப்பாக்குட்டி:**

மக்கள் குடியரசு என்றால் என்ன?

**உபாத்தியாயர்:**

குடியரசு என்ற பதம் ஆங்கிலத்தில் Republic என்ற சொல்லைக் குறிக்கும். அந்த ஆங்கிலச் சொல் Res Publicus அல்லது Res Poplicus என்ற லத்தீன் சொல்லை அடியாகக்கொண்டு தோன்றினது. அதன் அர்த்தம் பொது ஜனங்களின் அலுவல் என்று அமையும். அதனடியாகத்தான் Republic என்ற ஆங்கிலச் சொல் பொதுசனங்களின் ஆட்சியென்ற பொருளைக் குறிக்க வந்தது. அதாவது பரம்பரையாக ஒரு அரச குடும்பத்தில் தோன்றும் ஒரு அரசனை அதிபதியாக வைத்து அமைக்கப்பெறும் முடியாட்சி முறையாயில்லாமல் பொதுமக்கள் தாமாகவே அரசாட்சியை நடாத்தும் முறை. முற்காலத்தில் பெரும்பாலும் இராசாக்கள் ஆட்சி செய்வதே வழக்கம். அந்த முறையை முடியரசு என்றும் மக்கள் ஆட்சியைக் குடியரசு என்றும் சொல்வார்கள்.

**அப்பாக்குட்டி:**

மக்கள் ஆட்சியைக் குடியரசு என்று குறிப்பிட்டால் "மக்கள் குடியரசு" என்று குறிப்பிடுவது என்னத்தை?

**உபாத்தியாயர்:**

உண்மையில் "மக்கள் குடியரசு" என்ற பதத் தொடர் அர்த்தமற்றது. ஆனால் அந்தப் பதத்தொடரை தாமாகவே தங்கள் அரசாட்சிக்கு சூட்டுவது சில பொதுவுடமை அரசாங்கங்களின் வழக்கமாய்விட்டது. பொதுவுடமை முறை நிலவும் சமூகங்களில்தான் மக்கள் ஆட்சி உண்டு என்றும் மற்ற நாடுகளில் காணப்படும் ஜனநாயகம் பொதுமக்களின் ஆட்சி அல்ல முதலாளித்துவ ஆட்சியென்றும் வேற்றுமையும் உரிமையும் பாராட்டும் நோக்கமாக பொதுவுடமை நாடுகளும் பொதுவுடமைக் கட்சிகளும் "மக்கள்" என்ற பதத்தை தங்கள் ஆட்சிகளினதும் ஸ்தாபனங்களினது[illegible] பெயர்கட்கு முன்னால் சூட்டிக்கொள்கின்றன.

**அப்பாக்குட்டி:**

அந்த நாட்டிலே நடக்கிறது மக்களுடைய பொதுவுடமை ராச்சியம்? என்ன?

**உபாத்தியாயர்:**

ஆம், அப்படித்தான் அவர்கள் கூறுகிறார்கள்.

**அப்பாக்குட்டி:**

இலங்கையிலே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியும்பொதுவுடமைக் கட்சிதானே?

**உபாத்தியாயர்:**

ஆம் இலங்கையிலே கம்யூனிஸ்ட் எனப்படும் பொதுவுடமைக் கட்சிக்கும் மார்ஷல் டிட்டோவின் கட்சிக்கும் தொடர்பு இல்லை. உண்மையில் ஒன்றனுக்கு ஒன்று விரோதபான்மையில் உள்ளவை. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் ருஷ்ய அரசாங்கத்தின் சீடர்கள். சோவியத் ருஷியா டிட்டோவிற்கு சதா விரோதியாகும்.

**அப்பாக்குட்டி:**

அப்பொழுது மார்ஷல் டிட்டோவின் கட்சியைப் பிரதிபலிக்கும் பொதுவுடமைக் கட்சி இலங்கையில் இல்லையோ?

**உபாத்தியாயர்:**

அப்படிச் சொல்ல முடியாது? லங்கா சமசமாஜக் கட்சியென்ற கட்சி மார்ஷல் டிட்டோவின் சித்தாந்தத்தை பெருமளவுக்கு—ஆனால் முற்றாக இல்லை—பின்பற்றுகிறது என்று காட்டிக்கொள்கின்றனர். சித்தாந்தமளவில் ஒற்றுமை—வேற்றுமை ஐயத்திற்கு இடமாயிருந்தாலும் மார்ஷல் டிட்டோவின் அபிமானப் பரிவாரங்கள் தாங்கள் என்பதை இலங்கை சமசமாஜக் கட்சியினர் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்கின்றனர்.

**அப்பாக்குட்டி:**

சரி சித்தாந்தத்தைப்பற்றிப் பேசினது போதும். மக்கள் குடியரசு மக்களின் நயத்திற்காக உழைக்கும் அரசாட்சியில் ஜனாதிபதியாக இருப்பவர்கள் நடமாடுவதற்கு ஏன் குண்டேற முடியாத பாதுகாப்புள்ள கார்?

**உபாத்தியாயர்:**

அதுதான் எனக்கும் விளங்கவில்லை.

**அப்பாக்குட்டி:**

இந்தியாவும் ஒரு குடியரசு தானே. அங்கே பிரசாத் அல்

சகாதேவன்

லது நேருவுக்கும் இப்படிக் குண்டு தைக்கமாட்டாத கார் உண்டோ?

**உபாத்தியாயர்:**

அப்படிக் கார்கள் இந்தியத் தலைவர்களுக்குத் தேவைப்படவில்லை. சரி குமரேசு வருகிறார்.

**குமரேசு:**

என்ன உபாத்தியாயர். பெரும் விவாதம் நடாத்துகிறீர்கள் போலிருக்கின்றது.

**உபாத்தியாயர்:**

அப்படியொன்றுமில்லை. மார்ஷல் டிட்டோவின் விஜயத்தைப்பற்றிப் பேசினோம். சரி. நாங்கள் விவாதித்த பொருளாதாரத் திட்டம் என்ற விடயத்தில் இதுவரை பொருளாதாரத்துறையில் திட்டம் இட்டுக் கருமம் ஆற்ற வேண்டிய சூழ்நி[illegible] எப்படி ஏற்பட்டி[illegible] தென்[illegible] காலத்தில் நிலவின வருணச்சிரம தருமம் என்ற சமூக அமைப்பு உண்மையில் சகாப்தக்கணக்கிலிட்ட ஒரு பொருளாதாரத் திட்டந்தான் என்றும் ஆயினும் இன்றைய உலகில் அம்முறை பொருத்தமற்றது என்றும் முடிவு செய்தோம். இன்றைக்குத் தற்கால உலக நிலைக்கு ஏற்ற முறையில் எவ்வாறு பொருளாதாரத்திட்டம் இடுதுவது என்ற விடயத்தைப்பற்றி அறிவோம்.

**குமரேசு:**

சரி, முதலாவதாக எந்த ஒரு நாட்டுப் பொருளாதாரத் திட்டமும் சில இலட்சியங்களைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். அத்தகை இலட்சியங்கள் யாவை,அத்தகைய இலட்சியங்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புபட்டிருக்கின்றன என்ற பிரச்னைதான் முதலில் பிரதானமாக ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

**உபாத்தியாயர்:**

குறிக்கோள் என்ன என்பதுதான் ஒரு திட்டத்திற்கு முகவுரையாய் இருக்க வேண்டும்.

**அப்பாக்குட்டி:**

சனங்களுடைய நயம் தானே எந்த நாட்டிலேயும் நீங்கள் சொல்லுற குறிக்கோளாயிருக்க வேண்டும்.

**குமரேசு:**

ஜனங்களின் நன்மை, மக்களின் சுபீட்சம்தான் சகல நாட்டிற்கும் குறிக்கோளாக அமைய வேண்டும். எந்த நாட்டு அரசியலும் அதுதான் குறிக்கோள் என்று கூறுகின்றது. ஆயினும் எது நன்மை, எது சுபீட்சத்தைக் கொடுக்கும் என்ற வினாவை தனி மனிதர்கள் பலரிடம் கேட்டால் ஒவ்வொருவரும் தம் தம் மனோபாவத்திற்கும் அபிலாஷைக்கும் இயைந்தவாறு வெவ்வேறான பதிலைக் கொடுப்பார்.

**அப்பாக்குட்டி:**

அது சரிதான்.குடிகாரனைப் பார்த்தால் அவன் மூக்கு முட்டக் குடிச்சிட்டு தெருவிலை விழுந்து புரளுறது தான் அவனுக்கு மனசுக்குப் பிடிச்சது. எங்கடை சாமியார் மூண்டு மணித்தியாலமாய் மூக்கிலே விரலை வைச்சுக்கொண்டு தானேடே சம்மாடு போட்டுக்கொண்டிருக்கிறார். அவர் மனசுக்கு அது தான் கைலாயம். தனக்குத் தனக்கு இசைந்தது தான் ஒவ்வொருத்தருக்கும் சுபீட்சம். அது சொன்னியே தம்பி, அது சரிதான்.

**உபாத்தியாயர்:**

சமூகத்தைப் பொறுத்தளவில் எவ்வாறு வெவ்வேறு சமூகத்திற்கு மக்கள் சுபீட்சம் என்ற இலட்சியம் வேறுபடக்கூடும்?

**குமரேசு:**

ஆங்கிலத்தில் Values என்று குறிப்பிடுவர். அதாவது ஒவ்வொரு சமூகத்திலும் பரவியிருக்கும் பண்பாட்டுக்கேற்ப பல்வேறு இலட்சியங்களையும் அபிலாஷைகளையும் ஒன்றிற்கு ஒன்று உயர்ந்ததாக அல்லது குறைந்ததாகக் கணித்தும் போற்றியும் வரும் மனோபான்மை. சில சமூகங்களில் தனி மனிதன் சுதந்திரத்தை அதியுச்சமான ஒரு இலட்சியமாக மதிப்பர். வேறுசில சமுதாயங்களில் தனி மனிதனுடைய விருப்பங்கட்கு அவ்வளவு கௌரவம் கொடுப்பதில்லை.

**அப்பாக்குட்டி:**

உதாரணமாக ஏதேனும் சொல்லுங்கள் பார்க்கலாம்.

**குமரேசு:**

உங்களுடைய மகன் ஒரு எஞ்சினியராக வர வேண்டும் என்று விரும்பி அதற்காகத் தேர்ச்சி பெற முயற்சித்து அந்த வழியில் பயிற்சி பெறுகிறார். நாளடைவில் ஒரு எஞ்சினியராகித் தன் சொந்த முறையிலோ அல்லது ஒரு அரசாங்க இலாகாவிலோ தொழில் செய்யும் சந்தர்ப்பத்தை தானாகத் தன் விருப்பத்திற்குத் தெரிந்துகொள்ள முடியும். அவ்வாறு ஒவ்வொரு தனி மனிதனும் தன் சுதந்திரமாக வாழ்க்கை முறையை நிர்ணயிக்க இடம் கொடுக்கும் சில சமூகம். வேறு சில சமூகங்களில் அவ்வாறு தனி மனிதன் தன் சுதந்திரமாகவாழ்க்கை முறையை நிர்ணயிக்க முடியாது. பெரும்பான்மை பொதுவுடமை நாடுகளில் அத்தகைய தனி மனிதன் சுதந்திரம் கிடையாது.

**உபாத்தியாயர்.**

இவ்வாறு தனி மனிதன் சுதந்திரத்தை கௌரவிக்கும் ஜனநாயக நாடுகளில் அங்கீகரிக்கப்படும் இலட்சியங்களும் பொதுவுடமையை அடிப்படையாகக் கொண்ட சர்வாதிகார நாடுகளில் அநுமதிக்கப்படும் இலட்சியங்களும் வேறுபடும். வேறு என்ன வகையில் சமூகத்திற்குச் சமூகம் இலட்சிய வேறுபாடுகள் தென்படும்?

**குமரேசு:**

சில நாடுகளில் சாம்ராச்சியப் பித்தும் வேறு சில நாடுகளில் ஏகாதிபத்திய துராசையும்நிலவி வருகிறது.சாம்ராச்சியப் பித்துப் பிடித்த நாட்டு அரசாங்கங்களும் சமூகமும் படைக் கலங்களை பெருவாரியாக ஆக்கிக் குவிப்பதிலேயே மும்முரமாக ஈடுபடுவர். அச் சமூகங்கட்கு இலட்சியம் தற்காலிகமாக அப்படியமையும். ஏகாதிபத்திய துராசைகொண்ட சமூகங்களில் ஆதிக்கத்தை கையில் வைத்திருக்கும் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகங்களை நசுக்கி முடிவில் அழித்தொழித்துவிடுவதையே இலட்சியமாகக் கொண்டு கருமம் ஆற்றும். ஆகவே நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் இலட்சிய வேறுபாடு பல்வேறு காரணங்களைக் கொண்டு தோன்றும்.

**உபாத்தியாயர்:**

தனி மனிதன் சுதந்திரத்தையும் சமூக நன்மையையும் இணைத்து ஒருமைப்பாடுடையதாக சமூக அமைப்பு இயங்கவும் பொருளாதாரத் திட்டம் இடவும் முடியாதோ?

**குமரேசு:**

நீங்கள் சுதந்திரம் என்ற பதத்தை சுயேச்சை என்ற பதத்திற்குப் பதிலாகத் தப்பாக உபயோகிக்கிறீர்கள். சுயேச்சை என்பது ஒவ்வொருவரும் தன்னிச்சைப்படி நடத்தல். அவ்வாறு தன்னிச்சைப்படி நடத்தல் ஏனையோரையும் சமூகத்தையும் பாதிக்குமோ இல்லையோ என்ற பிரச்னை பதிலில்லாமல் ஆட்சேபத்திற்கு இடமாக இருக்கின்றது. ஆனால் சுதந்திரம் என்ற சொல் மகத்துவமான கருத்தைத் தொனிக்கும். அதாவது எந்தெந்த வகையில் ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு குழுவினரோ தம்மிஷ்டப்படி நடத்தல் முறையானது என்று சமூகமும், சிந்தனையாளரும் கற்றறிந்த பெரியோரும் தீர்க்கமாக விவாதித்து, அதன்படி சமூகம் காலத்திற்குக் காலம் அங்கீகரித்த எல்லையுள் அல்லது வரம்பிற்குள் நிதானமாகத் தன்னிஷ்டப்படி நடத்தற்குள்ள உரிமைதான் சுதந்திரம் எனப்படும். அவ்வாறு தனி மனிதனோ அல்லது ஒரு குழுவினரோ தம்மிஷ்டப்படி நடத்தற்குச் சமூகம் அங்கீகரிக்கும் எல்லைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும்.

**உபாத்தியாயர்:**

நீங்கள் குறிப்பிடும் சமூகத்திற்கும் ஒரு நாட்டு அரசாங்கத்திற்கும் எவ்விதத் தொடர்பு உண்டு?

**குமரேசு:**

ஒரு நாட்டு அரசாங்கம் குறுகிய தன்மையது. நான் இப்பொழுது குறிப்பிடும் சமூகம் நாட்டு எல்லை அரசாங்க எல்லைகட்கு அப்பாற்பட்டது. நாட்டு அரசாங்கம் தீர்மானிப்பது சட்டங்களாக அமையும். அச் சட்டங்களை இன்னொரு அரசாங்கம் அடுத்த ஆண்டே மாற்றியமைக்கக்கூடும். அன்றி நாட்டு மக்கள் அதை எதிர்த்து அவற்றை அமுலுக்குக் கொண்டுவர முடியாமல் செய்யலாம். ஒரு அரசாங்கம் தன் சொந்த நயத்திற்காக சில சட்டங்களை நிறுவக்கூடும். சமூகம் வகுக்கும் அடிப்படை உரிமைகளின் தன்மை கால வரம்பிலும் இட எல்லையிலும் ஒரு நாட்டு அரசாங்கத்திற்கோ அல்லது ஒரோர் காலத்தில் ஆட்சி புரியும் அதிகார பீடத்தின் ஆற்றலுக்கோ அப்பாற்பட்டவை. அவை திட்டவட்டமாக சட்ட ரூபமாகத் திணிக்கப்படாமல் இருக்கும். எனினும் அவற்றின் பலம் சமூக மக்களின் மனோதிடத்திலும் அவர்களின் ஞானமுதிர்ச்சியிலும் ஒவ்வொரு உரிமையின் நியாய பூர்வமான தன்மையிலும் தங்கியிருக்கும்

(12-ம் பக்கம் பார்க்க)


உங்கள் அபாயகரமான விரோதி



பயோரியா

ஈறுகளில் இரத்தம் வடிதல்? வாய்ப் புண்? பல்லாட்டம்?

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வதுமன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளா வட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும்! நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3/50

தபால்செலவு பிரத்தியேகம்.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

பயனீர் பார்மஸி,

183, ஷாப்புத்தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இயற்கை அன்னையின் கை வண்ணம் இனிது விளங்கும் இன்பச் சூழலில் அம்மை அப்பனாய் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் புரியும் கைலை நாதனைக் காண வேண்டும் என்ற அவா இன்று நேற்று உண்டாகவில்லை. முன்னம் அவனுடைய நாமம் கேட்டேன். மூர்த்தி அவனிருக்கும் ஆரூர் கேட்டேன். அன்றிருந்தே எம்பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னிதயத்திற் குடிகொண்டது.

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 19-ந் திகதி மாலை நேரம் மகாவலி கங்கைக் கரை மனதிற்கு அமைதியை நிறைவித்தது. பாரத நாட்டிலிருந்து ஈழ நாட்டிற்கு வந்திருந்த சுவாமி பிரேமானந்தஜியும் அருகில் இருந்தார்கள். இறைவன் இன்னருள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். ஆண்டவனின் அளவில்லாத அருளை இயற்கையிலே கண்டு இன்புற வேண்டுமாயின், இமய ராஜனின் மணி முடி எனத் திகழும் கைலயங் கிரியைத் தரிசிக்க வேண்டும் என்பதை இருவர் உள்ளங்களும் ஏற்றுக்கொண்டன. கைலை செல்வது எனத் தீர்மானித்தோம். சுவாமி பிரேமானந்தஜி அவர்கள் பம்பாயிலிருந்து யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறினர். கைலை யாத்திரை செய்வதற்கு ஏற்ற காலம் ஜூன் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களாதலால் அக் காலத்தை எதிர் பார்த்திருந்தோம்.

### சேமிப்பு

ஏப்ரல் மாதம் 26-ந் திகதி பம்பாயிலிருந்து கடிதம் ஒன்று கைக்கு வந்தது. சுவாமி பிரேமானந்தஜி, "யாத்திரைக்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வருவது எப்போது?" என வினவியிருந்தார். மே மாதம் 20-ம் திகதிக்குள் பம்பாய் வருவதாகப் பதில் அனுப்பிவிட்டு கொழும்பிலும் கண்டியிலும் யாத்திரைக்கு வேண்டிய பல பொருட்களைப் பெற்றுக் கொண்டேன். ஈழத்தில் சேகரிக்கப்படாத பொருட்கள் பல, இந்தியாவில் சேர்க்கப்பட்டன. கைலை யாத்திரை செய்வோர்க்கு 2 மாதத்திற்குத் தேவையான உணவுப் பண்டங்களும் பிறவும் மிக அவசியம். அவ்விதமே, பனி உறைந்து, குளிர் மிகுந்த பிரதேசத்தில் யாத்திரை செய்வோர்க்குக் குளிரைத் தாங்கும் உடைகளும், படுக்கை வசதிகளும் அவசியமானவை. ஆங்காங்கே தங்கிச் செல்லக் கூடாரமும் கொண்டு செல்லுதல் வேண்டும்.

### பருப்பு அவியாது

கைலை செல்வோர் தமக்குப் பழக்கமில்லாத உணவை, உண்ணவும் மனதை இசைவித்துக் கொள்ள வேண்டும். இமய மலையில், மேலே செல்லச் செல்லப் பருப்பு, அரிசி போன்ற பொருட்கள் அதிகமாக உதவா. திபெத்துப் பிரதேசத்தில் எமது பருப்பு அவியாது, ஆகவே, பூரி, சப்பாத்தி, போன்ற உணவை

# கைலாசம்—கண்டேன்



## 2. யாத்திரையின் அவசியம்

உட்கொள்ள வேண்டி வரும். யாத்திரை முற்பகுதியில் உருளைக்கிழங்கு, வெங்காயம் நீங்கலாக வேறு காய் வகைகளைக் காணவும் முடியாது. பிற்பகுதியிலோ அவையும் கிடையாது போகலாம். அதனால், வற்றல் வகைகள், மசாலைத் தூள், ஊறுகாய், உறைந்த பாற்புட்டிகள், காப்பி, தேயிலை, சீனி, பல நாட்களுக்குப் பழுது படாத தீன் பண்டங்கள் ஆகிய வற்றைக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

### அடுப்பு

சமைத்து உண்பதற்கு அலுமினியப் பாத்திரங்கள் அவசியமானவை. காற்று இறுக்கத்தில் சமைக்கும் பாத்திரம் இருப்பது மிக உதவி. செல்லும் இடங்களிற் சமைப்பதற்கு அடுப்பும், நெருப்பும் கிடையா. ஆதலால் மண்ணெண்ணெய் அடுப்பு கொண்டு செல்லுதல் மிக அவசியம். காற்று அமுக்கமுள்ள வெப்பம் காக்கும் குப்பியும் மிகப் பயன்படும்.

### உடை, படுக்கை

குளிர் மிக்க இமயமலையில் பருத்தி உடைகளோடு மட்டும் பிரயாணஞ் செய்ய முடியாது. அதனால் கம்பளியாலான உட் சட்டை, காற் சட்டை, கையுறை, காலுறை விரிப்பு, போர்வை ஆகியவற்றைக் கொண்டு செல்ல வேண்டும். கிடைப்பின் குளிரைத் தாங்க தூங்கும் பைகள் (Sleeping bags) கொண்டு செல்வது மிக நல்லது. இவை தென்னாட்டிலும் பார்க்கக் குளிர் மிக்க வடநாட்டில் எளிதாகக் கிடைக்கும். பனி நிறைந்த மலையில் நடக்கும் போது செருப்பும், புறங்காலை மூடத்தக்க பூட்சும், மலை மீது ஊன்றிச் செல்லக் கூர்மையான இரும்புப் பூண் போட்ட ஊன்று கோலும், குடையும் தேவையானவையாம்.

### தராசு வேண்டும்

சாமான்களைச் சுமக்கக் குதிரைகளும், கூலிகளும் ஏற்படுத்தல் அவசியம். சுமைகளைத் தூக்குவதில் எடைகளைத் தீர்மானிப்பதற்காக, 'ஸ்பிரிங்' தராசு ஒன்று கையில் இருப்பது நல்லது. அது பல தக

சுவாமி சச்சிதானந்தா

ராறுகளைக் குறைக்கும். தேவையானால் ஏறிச் செல்லவும் குதிரைகள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அடிக்கடி குதிரையிலிருந்து கீழே விழவும் தயாராகிக்கொள்ள வேண்டும். கைலாய யாத்திரை செய்வது ஏழைகளுக்கும், மெலிந்தோருக்கும் எளிதான காரியமல்ல. செல்வருக்கும், வலியோருக்குமே அது மிகவும் உகந்தது. அல்மோராவிலிருந்து கைலைக்குச் சென்று, திரும்ப ஒவ்வொருவரும் சுமார் நூறு ரூபா செலவு செய்யின் யாத்திரை இனிது நிறைவேறும். தேகாரோக்கியம் உள்ளவராயிருப்பினும், மலையிடைச் செல்லும் போது சிறு சிறு பிணிகள் தோன்றுமாதலால், மருந்து வகைகளை மறந்திடாமல் கொண்டு செல்லுதல் நன்று.

### உபகரணங்கள்

இன்னும், எழுதுவதற்குக் குறிப்புப் புத்தகம், பென்சில், பேனா, ஊசி, நூல், கத்தி, மின்விளக்கு ஆகியவற்றைக் கொண்டு செல்லுதல் உசிதம். மேலே செல்லச் செல்ல ஒரு சிறு பொருளைத்தானும் வாங்குவதற்குக் கடைகள் இருக்க மாட்டா என்பதைக் கருத்தில் வைத்து, படம் பிடித்துக்கொள்ள விரும்புவோர் புகைப் படக் கருவி, அதற்கு வேண்டிய படத் தாள்கள் (பிலிம் ரோல்கள்) போன்றவற்றையும் உடன் கொண்டு செல்ல வேண்டும். கமிராவோடு தூர திருஷ்டிக் கண்ணாடியும் இருப்பது மிக உதவியாகும். நிறைந்த பனி ஒளியில் கண் கூசாது இருக்கப் புகைக் கண்ணாடியும் கொண்டு செல்ல வேண்டும்.

### நீர்ப் பிரச்னை

கைலை செல்வோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை சிலவுள. இடத்திற்கு ஏற்ப உடையையும், உணவையும் மாற்றிக்கொள்ள வேண்டி நேரிடும். கம்பளியாலான மேற் சட்டையும், காற்சட்டையும் அணிய வேண்டும். வேட்டியும், மேலாடையும் அணிவது ஆரோக்கியத்தைக் கெடுக்கும். கூரான கற்கள் மீது நடக்கும்போது செருப்பு அணிவது அவசியமாகிறது. பனி மிக்க இடத்தில் காலுறையையும் பூட்சையும் அணிந்து சென்றால் இடர்ப்பாடின்றிச் செல்ல இயலும். போவோர் எந்த நீரானாலும் வெந்நீராக்கியே உட்கொள்ளல் வேண்டும். சில நாள் பழகிய பின் விரும்பினால் ஊற்று நீரை மாத்திரம் காய்ச்சாமல் குடிக்கலாம். பனிக் கட்டியிலிருந்து ஊறிவரும் ஆற்று நீரைக் காய்ச்சாது அருந்தினால், குளிர் குடலை நலிவித்து, இரத்த பேதியையும் வயிற்றுக் கடுப்பையும் சில சமயம் உண்டாக்கல் கூடும்.

### கைலாசம் போக குறுக்கு வழி

வழியிலுள்ள எல்லாச் செடி கொடிகளையும் தின்டுவதையும், பழங்களைப் பறித்து உண்பதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் நச்சுத் தன்மையான செடிகளும் பழங்களும் பல இடங்களிற் செழித்து வளர்ந்து இருக்கும். செங்குத்தாக நிமிர்ந்து செல்லும் ஒடுங்கிய பாதைகள் பல உண்டு. அங்கே ஆடுகளையும், குதிரைகளையும் கடக்க நேரிடலாம். அப்பொழுது முன்னே விரைந்து சென்றோ அல்லது பின் திரும்பியோ அகலமான இடத்தை நாடி ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இல்லையேல் பிராணிகளால் மோதப்பட்டு படுபாதாளத்துள் உருண்டு விழுந்தால் வெகு விரைவில் கைலாசமே போய் விடலாம். மலைமேலே ஏறும் பொழுது முன்னோக்கியவாறு செல்ல வேண்டுமேயன்றி பின் புறம் திரும்பிப் பார்த்தால் மேலே நடக்க முடியாதவாறு தலை சுற்றும். காலையில் புறப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு முன்பு ஒரு நாள் பிரயாணத்தை முடித்துக்கொள்ளல் நன்மை தரும். மாலை நேரம் நடந்தால் பனிப் படலத்துள் அகப்பட்டுத் திண்டாட வேண்டி வரும். நேரத்தைப் பொன் எனப் போற்றி உறுதியுடனும் தெய்வ சிந்தனையுடனும் முன்னோக்கிச் செல்பவருக்கு யாத்திரை இனிதே நிறைவேறும்.

### சம்பாஷணை

மேலே குறித்த ஆயத்தங்களுள் இயன்றவற்றை ஈழத்தில் விரைவில் செய்து கொண்டேன். கைலை செல்லுமுன் கண்டி, திருமலை ஆகிய இடங்களிலுள்ள அன்பர்களையும் சந்திக்க இறைவன் அருள் புரிந்தார். அவர்களுடன் அளவளாவி விடை பெற்றேன். "எப்போது வருவீர்கள்?" என்றே எல்லோரும் ஆர்வமுடன் வினவினர். பதில் என்ன சொல்ல முடியும்? "கைலை செல்கிறேன். எம் பெருமான் அழைத்துச் சென்று காட்சியுந் தந்து, திருப்பி அனுப்பும் போது வந்து விடுவேன்" என்று கூறினேன். ஒரு அன்பரின் சம்பாஷணை உள்ளத்தைத் தொட்டது. எனினும் அது சிறந்த கருத்துக்களைத் தந்தது.

"'அம்மா அப்பாவிடம் செல்கிறேன்' என்கிறீர்கள்.

(15-ம் பக்கம் பார்க்க)

## வண்டும் கவிஞனும்

கவிஞன்:

மெல்லிசை பாடி எங்கு
விரைகின்றாய் வண்டே? இன்பக்
கள்ளருந் திடவோ? எந்தக்
காதலி அழைத்தாள் இன்று?
உள்ளதைச் சொல் நீ; என்பால்,
ஒளியாதே. ஒளித்தால், உந்தன்
கள்ளத்தை உலகுக் கெல்லாம்
கவிமுரசடித்துச் சொல்வேன். 1

வண்டு:

மதிமிகு நண்பா, உன்பால்
மறைப்பேனா? மறைத்தால், நீயே
இதயத்தில் புகுந்தி ழுக்கும்
இயல்பினன் அன்றோ? கேள் நீ:
உதயத்தின் முன்பு ஆழ்ந்து
உறங்கினேன்; என்னை எழுப்பி,
மதுமணம் சுமந்த மந்த
மாருதம் வழுத்திச் சென்றான்: 2

மல்லிகா, முல்லை, ரோஜா,
மனோரஞ்சித், சண்பகம், எக்
கல்லையும் உருக்கும் இன்பக்
கமலப்பொற் கன்னி யெல்லாம்,
[illegible] மலர்ந்து, காதல்
வீணையை மீட்டும் செய்தி,
உள்ளத்தைக் கரைப் பொங்கும்
ஊற்றெனக் கிளம்பி வந்தேன். 3

தடுக்காதே, இன்னும் என்னை;
தயவுசெய்; பருவப் பெண்கள்,
எடுப்பான பலருண் டாம்ஆங்(கு),
யாவரை யுங்கு கிக்கத்
துடிக்குதென் இதயம்; காதற்
சுவையைநீ உணராய் போலும்.
கெடுக்காதே, எனதின் பத்தை.
கிட்டி, இவ் வழியே மீள்வேன். 4

கவிஞன்:

சரி, சரி போய்வா; உன்னைத்
தடுக்கயார்க் கியலும்? காதல்
வெறியன்நீ யன்றோ? இன்ப
வேட்கைகள் தீர்ந்த பின்பு
வருக; இங் கெனக்கும் ஒன்று
வழங்கு, நின் அனுப வத்தை
உருகுசெந் தமிழ்ப்பண் ணாலே
உணர்த்துக; இசைப்பொன் வண்டே 5

—"பரமஹம்ஸ தாசன்"

போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்!
அழகிற் சிறந்த ஆபரணங்கள்!!
யாவற்றிற்கும்
ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை

யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்.
கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN
1959 ஜனவரி மாதம் 25-ந் திகதி
194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# (ச) மாஜிக் வாதம்

லங்கா சமசமாஜக் கட்சியினர் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை மயக்கித் தங்கள் கட்சி வலைக்குள் சிக்க வைப்பதற்காக இப்போது ஒரு புதிய மாஜிக் வாதத்தை (Magic Argument) அதாவது ஒரு மாயாஜால வாதத்தை பிரயோகித்து வருகின்றனர்.

குதிரையை வண்டிக்கு முன்னால் பூட்டுவது சரியல்ல; வண்டியைக் குதிரைக்கு முன்னால் பூட்டினால்தான் வண்டி ஓடும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு இலங்கைத் தமிழரசுக் கட்சி போதிய செல்வாக்குப் பெற்றிராத காலத்தில், கட்சியின் கூட்டாட்சிக் கோரிக்கையைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் "சமஷ்டியென்பது அர்த்தபுஷ்டியற்ற வெறும் காட்டுக் கூச்சல். அது இந்த நாட்டில் ஒருபோதும் கைகூடாத பகற் கனவு" என்று அபிப்பிராயம் வெளியிட்டு வந்த சமசமாஜிஸ்டு தலைவர்கள் இப்போது தங்கள் ஒலித் தட்டை வேறுவிதமாகப் புரட்டிப் போட்டு வருவதைக் காண நமக்கு நகைப்புத்தான் வருகிறது.

"நாங்கள் வகுப்புவாதத்துக்குத்தான் விரோதமானவர்கள். தமிழரசுக் கட்சியினர் வகுப்புவாதத்தைக் கிளப்புகிறார்கள். அதனால்தான் நாம் அக்கட்சியை எதிர்க்கிறோம். மற்றப்படி சமஷ்டிக் கோரிக்கைக்கு நாம் விரோதிகள் அல்லோம். ஆனால் இன்றைய அரசமைப்பில், சூழ்நிலையில் சமஷ்டி ஏற்படுவது சாத்தியமில்லை. முதலில் தொழிலாளர் வர்க்கம் ஒன்று சேர்ந்து இந்த நாட்டில் ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை அமைக்க வேண்டும். அதன் பின்னர்தான் தமிழ் பேசும் மக்கள் விரும்பினால், சமஷ்டியை அமைத்துக் கொள்ளலாம்" என்று பேசும் அளவுக்கு அவர்கள் இறங்கி வந்திருக்கிறார்கள். இந்த இறக்கம் எப்படி ஏற்பட்டது?

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சமஷ்டிக் கோரிக்கையென்ற ஒரே குரலிலே ஒன்றிவிட்டார்கள். மத்திய இலங்கையிலும், சென்னை மாவட்டத்திலுமிருந்து அவர்களுக்கு முறையே ஆதரவும், அனுதாபமும் பிறக்கின்றன. தமிழ் மக்களை சமசமாஜப் பாதையில் கவர்ந்திழுக்க வேண்டுமானால் இனியும் வெட்டிப் பேசிப் பயனில்லை; சமஷ்டியை ஆதரிப்பது போலவே ஒட்டிப் பேசி, சேர்ந்து கழுத்தறுக்க வேண்டும் என்று திட்டமிட்டே இந்த (ச) மாஜிக் வாதத்தைத் தமிழ் மக்களின் பசிய உள்ளத்தில் புகுத்திவிடப் பார்க்கிறார்கள்.

சிங்களத் தமிழ்த் தொழிலாளர் ஒன்று கூடி அமைக்கும் சோஷலிஸ அரசாங்கம் ஏற்பட்ட பின்னர்தான் சமஷ்டி உருவாக முடியும் என்பது போலி வாதம்; நடக்காத காரியம். வண்டியை குதிரைக்குமுன்னால் பூட்டினால்தான் வண்டி ஓட முடியும் என்பதைப்போன்றதே இக்கூற்றுமாகும். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

சமஷ்டி ஏற்பட்ட பின்னர்தான் சிங்களத் தொழிலாளிக்கும், தமிழ்த் தொழிலாளிக்குமிடையில் "நானும் நீயும் சமம்" என்ற சகோதர ஒற்றுமையும், சமூக உறுதிப்பாடும், உயர்வு தாழ்வற்ற உணர்ச்சியும் உருவாக முடியும். அதன் பின்னரே 'சிங்களவர் ஆளப் பிறந்தவர், தமிழர் மாளப் பிறந்தவர்' என்ற இன்றைய அகம்பாவ மனோபாவம் அற்று, இரு கூடாம் தோழர்களும் தோளோடு தோள் நின்று, சரிநிகர் சமானமான அரசியல் அந்தஸ்து பெற்ற பிரஜைகளாகப் போராடி அல்லது புரட்சி செய்து நாட்டில் சோஷலிஸ சமாப்தத்தைத் தோற்றுவிக்கலாம்.

தமிழ் பேசும் மக்களை இன்று பாதிப்பனவாகவுள்ள மிகப் பெரிய பிரச்னைகள் மூன்று:

1. தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்கப்படாமை.

2. தமிழ் மக்களில் ஒருசாராருக்கு பிரஜா உரிமை வாக்குரிமை வழங்கப்படாமை.

3. பரம்பரை பரம்பரையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்த வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நடைபெற்று வரும் அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம்.

இந்த மூன்று பிரச்னைகளிலும் மிகக் கொடியது எது, தமிழ் பேசும் மக்களுக்குப் படுபாதகமானது எது என்று கேட்டால், நிச்சயமாக அது மூன்றாவதுதான்—அதாவது திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றந்தான்—என்று நாம் தயங்காமல் கூறுவோம்.

ஒரு மொழி வாழ வேண்டுமானால் அதைப் பேசும் இனம் வாழ வேண்டும். ஒரு இனம் வாழ வேண்டுமானால் அதற்கு நிலைபதியான ஒரு வாழ்விடம் இருக்க வேண்டும். ஒரு இனத்தின் வாழ்விடத்தைப் பிடுங்கி, அந்த இடத்தில் பிறிதோர் இனத்தைப் புகுத்திவிட்டால், முதலினம் நாடற்று நாதியற்று, பஞ்சையாய்ப் பராரியாய்ப் பரதேசியாய்ப் பாழ்பட்டழிந்ததை நாம் பழம் சரித்திரங்களில் பார்த்திருக்கிறோம்.

மொழியளவில் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று சமசமாஜிஸ்டுகள் சொல்லளவிலாவது பலகாலம் நிலையாகச் சொல்லி வருகிறார்கள். இதனால் அவர்கள் கஷ்டமும் நஷ்டமும் அடைந்திருப்பதை நாம் மறப்பது நன்றியாகாது. இத்துறையில் அளவு ஸ்திரமான கொள்கையை அனுஷ்டிப்பதற்காக நாம் அவர்களைப் போற்றுவோம்.

# 20 இன மக்கள் வாழ்ந்தும் யூகோஸ்லேவியாவில் இல்லை இனப் பிரச்னை

## சமஷ்டி அரசமைப்பும் சகலருக்கும் சம உரிமை, சம சந்தர்ப்பம் சட்ட மூலம் வழங்கப்பட்டிருப்பதுமே காரணம்

### மார்ஷல் டிட்டோவின் 'டிப்டாப்' சாதனை

ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழும் நாட்டில் போட்டி, பொறாமை, பூசல், கொந்தளிப்பு, கலவரம், குத்து-வெட்டு இல்லாமல் இருக்க முடியுமா?

சகல மக்களும் உயர்வு தாழ்வு, பெருமை—சிறுமை கிஞ்சித்தும் பாராட்டாமல் பரஸ்பர நல்லெண்ணமும் நல்லுறவும் பூண்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒன்றுபட்டு உழைக்க முடியுமா?

"ஆம்!"

இதுதான் யூகோஸ்லேவிய நாடு நமக்கு அளிக்கும்பதில்! இலங்கைக்கு இடித்துரைக்கும் பதில்!

#### வெற்றி 'இரகசியம்

சமஷ்டி அரசமைப்பு இருக்க வேண்டும். சிறுபான்மையினருடைய தனித்துவத்தைச் சட்டமூலம் பாதுகாக்கவும் அதே வேளையில் பெரும்பான்மையினரோடு அவர்களையும் சரிசமமாக மதித்து நடத்தவும் அரசாங்கம் மனப்பக்குவம் அடையவேண்டும். இரண்டும் இருந்தால் நாடு என்றுமே இரண்டு படாது; ர[illegible] களமும் ஏற்படாது. பதிலுக்கு நாடு செழிக்கும்; மக்கள் உள்ளம் களிக்கும்; அமைதி நிலவும்; புகழ் பரவும். யூகோஸ்லேவியா உலக அரங்கில் புகழ் மணக்கப் பெருமையோடு வீற்றிருப்பதன் ரகசியம் இதுதான்.

#### சமத்துவமும் சமசந்தர்ப்பமும்

அது ஒரு சமஷ்டிக் குடியரசு நாடு. அங்கு ஆறுசமஷ்[illegible] இராச்சியங்கள் [illegible]ருக்கின்றன. [illegible] வெவ்வேறு மொழிகள் பேசும் ஐந்து பெரும்பான்மைச் சமூகத்தினரும் பதினைந்துக்குக் குறையாத சிறுபான்மைச் சமூகத்தினரும் அங்கு வாழ்கிறார்கள். அவர்களுக்கிடையே பதினெட்டு வகையான மதங்கள் பரவியிருக்கின்றன. எவ்வாறாயினும் அங்குள்ள மக்கள் அத்தனை பேருக்கும் அரசாங்கம் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் வழங்கி வருகிறது.

#### சுதந்திரப் போர்

பன்னெடுங்காலமாக அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்து அல்லல்பட்ட மக்கள் 19-ம் நூற்றாண்டில் விடுதலை வேட்கை கொள்ள ஆரம்பித்தனர். இரண்டாவது மகா யுத்தத்தில் யூகோஸ்லேவியா இழுத்துப் போடப்பட்டு, ஜெர்மன் தாக்குதலால் சொல்லொணாச் சேதத்துக்கு உள்ளானதோடு மக்களின் சுதந்திர ஆர்வம் கிளர்ந்து எழுந்தது.


மார்ஷல் டிட்டோ

1941 ஜூலை மாதம் [illegible]ந் திகதி தற்போது ஜனாதிபதியாயுள்ள மார்ஷல் டிட்டோ சுதந்திரப் போர்ப் படை நடத்தினார். அவரது பட்டாளம் எட்டு லட்சம் போர் வீரர்களைக் கொண்டுள்ளதாக வளர்ந்தது. அப்படை தோற்கின் எப்படைதான் வெல்லும்?

#### டிட்டோ தெரிவு

1943-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ந் திகதி யூகோஸ்லேவியாவில் தற்போதைய அரசாங்கம் நிலைகொண்டது. இத்தினம் இன்றும் குடியரசு நாளாகவும், பொது விடுமுறைத் தினமாகவும் அங்கு கணிக்கப்பட்டு வருகிறது. நாட்டின் விடுதலைக்குப் போர் புரியும் படைத் தளபதியாக இருந்த ஜோசில் புரோஸ் டிட்டோ 1941-ம் ஆண்டு யூகோஸ்லேவிய தேசத்தின் பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1953-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ந் திகதி அந்நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

#### சாதனை

புதிய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்துறையையும், கலை, கல்வி ஆகிய துறைகளையும் விருத்தி செய்ய முனைந்தது. அதிலும் வெற்றியேதான். யூகோஸ்லவேியாவின் பிறநாட்டுக் கொள்கை ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

#### கொள்கை

சமாதானத்தை நிலைநிறுத்தவும், பிறநாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருக்கவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மூலமாக சர்வதேச பிரச்னைகளைத் தீர்க்கவும், மற்றொரு மகா யுத்தத்திலிருந்து உலக மக்களைக் காப்பாற்றவும், பல்வேறு வகைப்பட்ட இராச்சியங்களுடன் ஒத்துழைத்து உடனிருந்து வாழவும் யூகோஸ்லேவிய நாடு உறுதி பூண்டு, அவ்வண்ணம் ஒழுகிவருகின்றது என்பதனை இலங்கை வந்துள்ள ஜனாதிபதி டிட்டோ தெளிவுபடுத்தியுள்ளார்.

#### அமைப்பு

தென் கிழக்கு ஐரோப்பாவில், போல்க்கன் குடாநாட்டில், 99,180 சதுர மைல் விஸ்தீரணமுள்ளதாயும் மொத்தம் ஒரு கோடி தொண்ணூறு லட்சம் மக்களைக் கொண்டதாயும் உள்ள யூகோஸ்லேவிய நாடு பெரும்பாலும் மலைப்பிரதேசமாகவே இருக்கிறது. அதனால் அங்கு நீர் வளம் அதிகம். அதேபோல அங்குள்ள மக்களும் மிகுந்த மன வளத்தோடு இருக்கிறார்கள். மார்ஷல் டிட்டோ இதையிட்டு பெருமை கொள்ள நியாயம் உண்டு.

பிரஜாஉரிமை வாக்குரிமை விஷயத்திலும் அவர்கள் மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று முரண்பட்ட செயலுடையவர்களாயிருந்தாலும் பேச்சளவில்தானும் பெரிதாகப் பேசி வருகிறார்கள். அதற்காகவும் நாம் அவர்களைப் பாராட்டுவோம்!

ஆனால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்ற விஷயத்தில் அவர்கள் கொள்கைதான் என்ன? இதையே தமிழ் பேசும் மக்கள் ஊன்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமசமாஜிஸ்டுகள் தங்கள் மாஜிக் வாதத்தோடு மேடைகளில் தோன்றினால் இதைத்தான் தமிழ் மக்கள் அவர்களிடம் கேட்க வேண்டும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் சமசமாஜிஸ்டுகளுக்கு வெறுப்பானதல்ல; உடன்பாடானதே. அதனால்தான் அவர்கள் அதை எதிர்ப்பதில்லை; வரவேற்கிறார்கள். எந்தப் பிரஜைக்கும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சென்று குடியேறும் உரிமை இருக்க வேண்டும் என்று மழுப்பல் வாதம் பேசித் தமிழ் மக்களின் இந்த உயிர்ப் பிரச்னையை ஒருபுறம் ஒதுக்கி வைக்கப் பார்க்கிறார்கள்.

சுயேச்சையாக ஒரு பிரஜை எங்கும் போய் குடியேறுவதை யாரும் தடுக்க வேண்டியதில்லை. அரசாங்கம் பணம் செலவிட்டு செய்யும் திட்டமிடப்பட்ட குடியேற்றம்தான் கொலைபாதகமானது. இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் தமிழ் பேசும் இனம் அழிந்துவிடும் என்ற வாதத்துக்கு அவர்கள் சமாதானம் சொல்வதே இல்லை.

'பொறுங்கள் சோஷலிஸ அரசாங்கம் வரட்டும்' என்கிறார்கள். மாமலையிலிருக்கும் அந்த மாமருந்தை. கடந்த நாலு நூற்றாண்டின் காலமாகக் கொண்டு வருகிறார்கள் சமசமாஜிஸ்டுகள். சரி, அது வருகிறபோது வரட்டும். அது வந்தாலும் வராவிட்டாலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பிரச்னையில் தங்கள் கொள்கை என்ன என்பதை உட[illegible] ஒரு அறிக்கை மூலம் வெளியிடும் துணிவு [illegible] சமசமாஜிஸ்டுகளுக்கு ஏற்படுமா?

## விடுதலை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபடுவது வரவேற்கத் தக்கது. அமைதியாகத் துக்கம் அனுஷ்டிக்க இது பெருதவியாக இருக்கும்.

5. தாம் இழந்துபோன மொழி, குடி, நில உரிமைகளையும் நல்லாவற்றிற்கும் போலாகத் தமது சுதந்திரத்தையும் பெற்று தன்மானத்தோடு வாழத் தம்மால் ஆனதைச் செய்வோம் என்று அனைவரும் அத்தினத்தில் திட சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

மேற்படி முறைகளைக் கட்சி தனது அதிகாரபூர்வமான அறிக்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக மதிப்புரை

# அவசரகால நிலைமை '58 உலகுக்கு

## எடுத்துரைக்கும் ஓர் உண்மை:

## 5 கோடி மக்கள் பேசும் தமிழ் எங்கே, ஆக 60 லட்சம் பேரால் அதுவும் இலங்கையில் மட்டும் பேசப்படும் சிங்களம் எங்கே?

## மழுப்பிய சரித்திரக் குறிப்புக்கள்: அவற்றில் மறைந்து நிற்கும் நச்சுக் கருத்து

### தமிழர்கள் என்றென்றும் ஆளப்படவேண்டியவர்களா?

ஆங்கிலத்தில் அவசரகால நிலைமை, '58 என்று இருப்பதைத் தமிழில் எப்படி வழங்குவது? அவசரம் '58, அவசர நிலைமை '58, அவசரகால நிலைமை '58—இவற்றில் எது சரி? அவசரம் என்பது Emergency என்ற ஆங்கிலச் சொல்லின் சரியான தமிழாக்கம் ஆகுமா? Urgency என்ருல்தான் அவசரம் என்று ஆகும். Emergency என்ருல் நெருக்கடி என்று பொருள் கொள்வதுதான் பொருத்தம்.

எப்படியோ Emergency' 58 என்ற ஆங்கில நூல் அவசர நிலைமை '58 என்று ஒரு சாராரால் அழைக்கப்படும் அளவுக்கு வந்துவிட்டது. அதை அவசரகால நிலைமை '58 என்று கொஞ்சம் அபிவிருத்தி செய்துகொண்டால் நன்ருக இருக்கிறதல்லவா?

அவசரகால நிலைமை '58, இலங்கை இனக் கலவரக் 'கதை' என்று புத்தக முகப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### எழுத்தும் நடையும்

'கதை' என்ற ரீதியில் மட்டும் பார்த்தால் நூலாசிரியர் பாராட்டப்பட வேண்டியவராவர். தமது அருமையான பத்திரிகை நடையில் சரளமான ஆங்கிலத்தில் அழகாக எழுதியுள்ளார். முதல் பக்கத்தை வாசித்த ஒருவர் கடைசியாக உள்ள 124வது பக்கம்வரை தொடர்ந்து வாசிக்காமல் புத்தகத்தைக் கீழே வைக்க முடியாது. 'இழுக்கும்' எழுத்தில் 'வெளுத்துக் கட்டி'யிருக்கிருர் ஆசிரியர். சிலோன் ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியர் திரு தார்ஸி வித்தாச்சி எழுதியதென்ருல் எழுத்தைப்பற்றிக் கேட்கவா வேண்டும்?

### யாருக்காக எழுதப்பட்டது

இனக் கலவரக் கதை! அது தெரிந்த கதையாயிற்றே. அனேகமாக இலங்கையிலுள்ளவர்களில் பலரும் கதாபாத்திரங்களாகவே இருந்திருக்கும்போது அவர்களுக்கு திரும்ப என்ன கதை சொல்ல வேண்டிக் கிடக்கிறது? இப்படி ஒரு கேள்வி எழலாம் என்று எண்ணித்தானே, என்னவோ நூலாசிரியர் அவசரகால நிலைமை '58ஐ பெரும்பாலும் வெளி உலகுக்கு, அதிலும் குறிப்பாக பிரிட்டிஷாருக்கு என்றே எழுதி இருப்பதாகத் தெரிகிறது.

நாட்டின் விஸ்தீரணம், ஜனத்தொகை முதலான விஷயங்கள் நிச்சயமாக இலங்கையருக்கென எழுதியதாகக் கருத முடியாது. பிரிட்டிஷார் இங்குள்ள தமது அலுவல்களை முடித்துக் கொண்டு சொந்த ஊருக்கு "கடை கட்டிய" வரலாறும் இன்று அந்தச் சமூகத்தில் எஞ்சியுள்ளவர்களது தொகை பற்றிய விரிவான குறிப்புகளும், ஆங்கிலேயருக்கு அக்கறையைப் ஏற்படுத்துவதற்கென்றே நூல் எழுதப்பட்டிருக்கிறது என்ற ஐயப்பாட்டை உறுதிப்படுத்துவதாக உள்ளது. புத்தகம் இங்கிலாந்தில் அச்சிடப்பட்டு முதலில் அங்கேயே விற்பனையாகியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழ் சிங்கள தாரதம்மியம்

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் வெளி உலகுக்கென எழுதப்பட்ட மற்றப் புத்தகங்கள் எல்லாம் செய்யாத ஒரு உன்னத பணியை அவசரகால நிலைமை '58 செய்திருக்கிறது.

"இலங்கையில் சிங்களவர்கள் மட்டுமல்லாமல் தமிழர்களும் வாழ்கிருர்கள். 60 லட்சம் சிங்களவர்களோடு 25 லட்சம் தமிழ் பேசும் மக்களும இருக்கிருர்கள்."—

"இலங்கையில் பேசப்படுவது சிங்கள மொழி மட்டுமல்ல. தமிழும் பேசப்படுகிறது 25 லட்சம் மக்களால். சிங்களம் இலங்கைக்கு அப்பால் இல்லை. தமிழோ கடல் கடந்த பிரதேசங்களிலும் வழங்குகிறது. மொத்தம் சுமார் 5 கோடி பேர் தமிழ் பேசுகிருர்கள். 60 லட்சம் எங்கே? 5 கோடி எங்கே?"—

### பெருமைப்படலாம்

இந்த உண்மைகள் பெரும்பாலும் வெளி உலகத்தவரின் கண்ணில் படாமல் சிங்கள அரசினரால் மறைக்கப்பட்டு வருவது வழக்கம். ஆனல் திரு வித்தாச்சியோ உண்மையை உண்மையாம்படி உலகுக்கு எடுத்து உரைத்துவிட்டார். இது பற்றி எந்தத் தமிழனும் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

தமிழர்கள் திறமைசாலிகள்—அத்தோடு மிகுந்த பொறுமை புடையவர்களும் கூட. அவர்களுடைய தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேர்மைக்கு பெயர்பெற்றவர். இந்த அருங்குணம் அவருக்கு ஈட்டித் தரும் பெருமதிப்பை இல்லாது ஒழிப்பது முடியாத காரியம்"—இப்படியாகஐயந்திரிபுக்கே இடமில்லாமல் எடுத்துச் சொல்லிவிட்டார் திரு தார்ஸி வித்தாச்சி.

### நூலாசிரியர் நிலை

அவர் ஒரு சிங்களவர் என்பதை அறிய நம்மவர் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஒரு சிங்களவரே இப்படியெல்லாம் எழுதினரா என்று கேட்கத் தோன்றலாம். உண்மையை யாராயிருந்தாலும் எழுதித்தானே ஆக வேண்டும்.

திரு வித்தாச்சி எழுதினது ஏதோ எழுதித்தான் விட்டார். என்ருலும் தாம் ஒரு சிங்களவரே தான் என்பதையும் ஓரோர் இடங்களில் காட்டவே செய்திருக்கிருர். எதிரிக்கு சகுனப் பிழை ஏற்படுத்தத் தன் மூக்கை அறுப்பவர்கள் இருந்தாலும் இருக்கலாம். ஆனல் இதற்காக தமது உயிரையே தியாகம் செய்ய யார் முன்வருவர்? தார்ஸி வித்தாச்சி இதற்கு விதிவிலக்கல்ல என்பது அவரது நூலை ஊன்றிப் படிப்பவர்களுக்கு புலனுகும்.

### பொது விரோதி

யார் அந்த எதிரி? கதை ஆர்வத்தில் வேகமாகப் பக்கங்களைத் தட்டிக்கொண்டு போகிறவர்களுக்கு, அது புரியாது. எழுத்தின் சக்தியாலும் நடையின் விறுவிறுப்பாலும் இழுத்துச் செல்லப்படும் நேயர்கள் இப்படி ஒரு கேள்வி ஏன் என்று கூட எண்ணாம். அது தப்பு. அந்த எதிரி இல்லாவிட்டால் ஒரு சில இடங்களிலாவது தமிழ் பேசும் மக்களைப்பற்றி உயர்வாகச் சொல்ல [illegible] சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. அதிகம் ஏன்? அந்த எதிரி இல்லாவிட்டால் அவசர கால நிலைமை '58 அவசர அவசரமாகத் தோன்றியிருக்கவே முடியாது. எனவே எதிரியைக் கண்டுபிடிக்க நூல் முழுவதையும் உன்னிப்பாகப் படித்தாக வேண்டும். படிக்கும்போது அந்த எதிரி தமிழ் பேசும் மக்களுக்கும் விரோதி ஆகையால், அவர்கள், அந்த எதிரி நூலில் நன்ருகத் தாக்கப்பட்டது கண்டு மகிழ்வர்.

### நூலில் உள்ளவை

முதலிலிருந்து கடைசி வரை இழையோடியுள்ள தாக்குதலைவிட இந்த நூலில் வேறு என்ன இருக்கிறது? குறிப்பாக மூன்று முக்கிய விஷயங்கள் என்கிருர் நூலாசிரியர்:

1. இலங்கையில் நடந்த சம்பவங்கள்
2. மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகள், அட்டூழியங்கள்.
3. சமூக பொருளாதாரக் கோட்பாடுகள் படிப்படியாகப் பாழாக்கிக்கொண்டு வந்த, வரும் விவரம்.

நூலில் உள்ளது இவ்வளவு தானு? இல்லை, இன்னும் உள்ளது அந்த உண்மையைத் தற்போ[illegible] விட்டு ஆசிரியர் தாமே இருப்பதாகச் சொல்லும் விஷயங்கள் கூறப்பட்டிருக்கும் விதத்தையும் அதன் பயனையும் பார்க்கலாம்.

### குடிப் பிரச்னை

2000 ஆண்டுகளுக்கு முந்திய சரித்திர சம்பவத்தைக் கூட ஆசிரியர் நூலில் குறிப்பிடுகிருர். வட இந்தியாவிலிருந்து விஜயன் தமது தோழர்களோடு வந்து இலங்கையில் குடியேறினன், அவனுடைய சந்ததியாரே சிங்களவர் என்கிருர். இதனல் சிங்களவர்கள் இலங்கையில் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்கிருர்கள் என்று தெரிகிறது.

தமிழர்களைப் பற்றிக்குறிப்பிடுகையில், அவர்கள் இந்த நாட்டுக்கு வந்து சேர்ந்தவர்களா இல்லையா என்ற விவரம் கிடையாது. திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிருர். அத்தோடு பல வருஷங்களாக இலங்கையின் வட பகுதியில் வாழ்ந்து வந்திருக்கிருர்கள் என்றும் சொல்லியிருக்கிருரே தவிர, ஏனைய பகுதிகளையும் காலத்தையும் ஏனே நாசுக்காகக் கைவிட்டு விட்டார்.

இலங்கையின் முதற் குடிகள் சிங்களவரே என்று வெளி உலகத்தை ஊகிக்க வைக்கக் கையாண்ட உத்தியா அல்லது சரியான சரித்திரம் தெரியாத காரணத்தால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத மழுப்பலா இது? புரியவில்லை.

### யுத்த விளக்கம்

அடுத்து துட்டகைமுனு—எல்லாளன் யுத்தம் பற்றியும் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். யுத்தத்துக்கு புதியதோர் விளக்கம் கூறுகிருர்.

"சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே நடந்த பலப்பரீட்சையாம் அது. இலங்கையில் எந்த இனம் ஆதிக்கம் செலுத்துவது அல்லது அரசாளுவது என்பதை அந்த யுத்தம் முடிவு செய்தது என்கிருர். ஆயின் வித்தாச்சியின் அந்தரங்கக் கருத்து இன்று தமிழர்கள் அரசியல் உரிமைக்காகப் போராடுவது சரியில்லை என்பதாகத் தானே இருக்க முடியும்? என்னதான் இருந்தாலும் சிங்களவர் சிங்களவர் தான்; தமிழர் தமிழர் தான். இல்லையா?

### காடுகளின் பயன்

துட்டகைமுனு — எல்லாளன் யுத்தத்துக்குப் பின்னர் சமீபகாலம் வரை இரண்டு இனங்களும் ஒன்ருேடொன்று மோதிக் கொள்ளாமல் இருந்ததற்கு வேடிக்கையான ஒரு காரணத்தை வித்தாச்சி கண்டு பிடித்துக் கூறியிருக்கிருர். அதைப் படிக்கும்போது உண்மையிலேயே அவர்மீது நமக்கு அனுதாபம் பிறக்கிறது. ஒப்சேவர் பத்திரிகை ஆசிரியரின் அறிவும் ஆராய்ச்சியும் இவ்வளவு தூரம் மழுங்கிப் போயிருப்பது காண மிக்க வேதனையாக இருக்கிறது. ஒரு செலை அபிவிருத்தி என்ற பேரில் இன்று நடக்கும் தில்லுமுல்லுகளைக் கண்டிக்கு முகமாகக் கூறினரோ தெரியவில்லை. அன்று இரண்டு இனத்தாரையும் மோத விடாமல் இடையே அடர்ந்து வளர்ந்திருந்த நெடுங்காடுகள் பிரித்து வைத்திருந்தனவாம். இன்று நில அபிவிருத்தி என்ற பேரால் அவை வெட்டி வெறுந்தரையாக்கப்படுவதால் இரண்டு இனமும் முட்டிக் கொள்ள இடம் ஏற்பட்டு விட்டதாம். என்ன செய்யலாம்; வேடிக்கை ஒரு புறம்; வேதனை மறுபுறம்.

### பிரஜா உரிமைச் சட்டம்

மற்றும், சம்பவங்களைப் பொறுத்த மட்டில் யு. என். பி. காலத்தில் டி. எஸ். சேனநாயகாவால் இந்தியர்—பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஒன்று தான் உருப்படியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டத்தின்நோக்கமும் சாதனையும் சரியாகச் சொல்லப் படவில்லை என்பதை மட்டும் இங்கு கூறுவதோடு நிறுத்திக்கொண்டால் நமக்கு பத்திரிகையில் இடம் மிஞ்சும்; நூலாசிரியருக்கும் சற்று ஆறுதலாக இருக்கும்.

### சமீப காலச் சம்பவங்கள்

இது தவிர ஏனைய சம்பவங்கள் எம். ஈ. பி. பதவிக்கு வந்தபின் நடந்தவை நூலில் இடம் பெற்றுள்ளன.

1. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியது.
2. இதன் பயனுக கொழும்புத் தெருக்களில் அல்லோல கல்லோலம். கல்லோயாவில் கலவரம். பலர் உயிர் துறந்த பரிதாபம்.
3. தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக அறிவிப்பு.
4. பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன் படிக்கை உதயம்.
5. உடன்படிக்கைக்கு பண்டாரநாயகாவையும் அவரது எம். ஈ. பி.யையும் பதவியில் ஏற்றி வைத்த புத்த பிக்குகளினதும் சிங்களத் தீவிரவாதிகளினதும் எதிர்ப்பு. ஈற்றில் உடன்படிக்கையின் ரத்து.
6. மோட்டார் இலக்கத் தகடுகளில் சிங்கள சிறீ. தமிழ் பிரதேசங்களில் பஸ்களில் சிங்கள சிறீ அழிப்பு. பதிலுக்கு தென் இலங்கையில் தார்ப் பூச்சு இயக்கம்.
7. துறைமுக அரசாங்க, வர்த்தக ஸ்தாபன சிப்பந்திகள் வேலை நிறுத்தங்கள்.
8. தமிழரசுக் கட்சியின் வவனியா மாநாடு.
9. ரயில் கவிழ்ப்பு, தமிழர் மீது காடைத்தனம், நாடெங்கும் குழப்பம்...கலவரம்... அவசரகால நிலைமைப் பிரகடனம்...பத்திரிகைச் சுதந்திரம் பறிமுதல்...!

### ஒரே கருத்து

மேற்படி சம்பவங்கள் பற்றி வித்தாச்சி கூறியதற்கும் அவை சம்பந்தப்பட்ட மட்டில் பெரும்பாலான தமிழரின் கண்ணேட்டத்துக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை.

"சிங்களம் மட்டும் சட்டம் நாட்டில் நிலவி வந்த நீண்ட நாள் அமைதியையும் இன ஒற்றுமையையும் குலைத்தது. உடன்படிக்கை ஓரளவு வேற்றுமையைக் குறைத்து நிலைமையை சுமுகமாக்கியது. உடன்படிக்கையின் முறிவோ தமிழருக்கு ஏமாற்றத்தையும் அரசாங்கத்தின் மீது நிரந்தரமான அவ நம்பிக்கையையும் அளித்தது. சிங்கள சிறீயைத் தோற்றுவித்ததும் சிங்கள சிறீ பஸ்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டதும் அரசாங்கத்துக்கு வேண்டாத வேலைகள்"—இந்த ரீதியில் தான் நடந்த சம்பவங்கள் பற்றிச் சொல்லுகிருர்.

இங்கெல்லாம் திரு வித்தாச்சியின் சொல்லம்புகள் ஆட்சியாளரின் இதயத்தைக் கிழித்தெறியும் அளவுக்கு சக்தி உள்ளவையாக விளங்குகின்றன.

மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகள் பற்றியும், சமூக, பொருளாதாரக் கோட்பாடுகள் படிப்படியாகப் பாழாகி வந்தமுறை பற்றியும் திருவித்தாச்சி தமது நூலில் கூறுவதை அடுத்த வாரம் ஆராயலாம்.

---

சிங்கம்

---

## தமிழரசு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடக்குமெனத் தெரிகிறது.

மாநாட்டுக்கு விஜயம் செய்யும் வெளியூர் அன்பர்களுக்கு இருக்க வசதியும் உணவும் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்பாடுகள் ஜரூராக நடைபெற்று வருகின்றன.

## 'சிறீ' அல்லாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல நிலையிலுள்ள வண்டிகளைத் தந்திரமாகக் கடத்திச் செல்வது மூலம் பிரயாண நெருக்கடியை வலுப்படுத்தலாமென்ற தந்திரத்தைப் புகுத்தி புதிதாக வந்து சேரண்டிருக்கும் வான்கள் முறியடித்து வருகின்றன. தனிப்பட்ட நபர்களின் இந்த வான்களிடம் தான் இப்போது யாழ்ப்பாணப்பகுதிப் பிரயாணிகளின் [illegible] இருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ் நகர் நாக விகாரை

சிறுகதை — எழுதியவர்: ஈழத்துச் சோமு

யாழ்ப்பாணம் புகை வண்டி நிலையத்தில் இறங்கி, தன் பாண்பேக்கரி இருந்த இடத்துக்கு நடந்து கொண்டிருந்தான் பண்டா. நெஞ்சு திக், திக் என அடித்துக்கொண்டது. எதிர்ப்படுவோரை மிரண்டு, பயத்தோடு பார்த்தான். மே ஜூன் மாதக் கலவரங்களுக்குப் பின் அவன் வந்திருப்பது இதுதான் முதல் தடவை!

பெரிய கடைச் சந்திக்கு பண்டா வந்ததும், திகைத்து பிரமித்துப்போய் நின்றுவிட்டான்! திடீரென இரத்தம் உறைந்து, உடல் விறைத்துவிட்டது போல சிலையாகிவிட்டான்!

சனக் கூட்டம்; மக்கள் வெள்ளம்! பரபரப்பு, கலகலப்பு!......?

"புதுக் கட்டிடத் திறப்பு விழா...'பெரகரா' ஊர்வலம் நாகவிகாரைக்குப் போகிறது"—யாரோ கதைத்துக்கொண்டார்கள். அதற்கிடையே இனிய நாதசுர இசையும், 'ரபானு' கொட்டு மேள ஒலியும் இணைந்து வந்து அவன் காதில் குதித்தன. இரத்தோட்டம் மீண்டும் நாளங்களில் தொடர்ந்து. பண்டா சன வெள்ளத்துடன் இரண்டறக் கலந்து சங்கமமாகி விட்டான்!

ஃ

மே மாதம்; கடைசி வாரம். புதன்கிழமையோ வியாழக்கிழமையோ நல்ல ஞாபகமில்லை. எத்தனையோ நிஷ்டூர நிகழ்ச்சிகள் தெற்கில் நடந்து கொண்டிருப்பதாக, பரபரப்பூட்டும் பயங்கரச் செய்திகள் வடக்கில் பரவின. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள், ஆத்திரம் குமுறியெழ, பல பரிதாபக் கதைகளைச் சொன்னார்கள். குடாநாடு கொந்தளித்தது!

"என்ன நடக்குமோ?" பண்டா பயந்தான்.

"பண்டா! நீர் பயப்பட வேண்டாம். சகோதரர் போல பழகிய உமக்கு நட்டமெதுவும் நடக்கவிடமாட்டோம்"-பாண் வாங்கவரும் அத்தனை வாடிக்கைக்காரர்களும் அவனுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

ஆனாலும் அவன் மனத்தில் பீதி உறுத்தியது. தனது இனத்தவர்கள் காட்டுமிராண்டிகளாக மாறி தென் இலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் கொடூரச் செய்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, எவ்வளவு தூரத்துக்கு தமிழர்கள் பொறுமையை இழக்காமலிருக்க முடியும்? இப்படி தன்னையே கேட்டான். தன் உயிருக்கு தீங்கு எதுவும் செய்ய மாட்டார்களென்ற நம்பிக்கை மட்டும் எப்படியோ அவனிடம் இருந்தது.

நச்சுச் சூறுவளி, பயங்கரப் பேயிரைச்சலுடன் அகோரமாக வீசியது! எங்கும் ஏக்கம்—பொருமல், ஆத்திரம், பரபரப்பு! இந்துக் கோயில் இடிக்கப்பட்டது! பாணந்துறையில், பரிதாபமான வகையில் குருக்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்! பொலநறுவையில் படுகொலைகள்! மட்டக்களப்பில் ரயில் கவிழ்க்கப்பட்டது! தமிழ்ப் பெண்கள் கற்பைக் காக்க உயிரிழந்தனர்! கொழும்பில் தமிழர்கள்மீது காடையர்கள் அட்டகாசம், ஆட்சியே ஸ்தம்பித்துவிட்டதாம்!

இத்தனை செய்திகளும் வடக்கே ஏககாலத்தில் வந்து குவிந்தபோது பண்டாவுக்கு என்னவோபோலிருந்தது. தன் பேக்கரி திடீரென கொளுத்தப்பட்டது போலவும், அதன் முகட்டு மரங்கள் அக்கினிக் குழம்பாகி, 'ஆ' என்று நாக்கை நீட்டிக்கொண்டு பூதாகாரமாகத் தன்னை நோக்கி வருவது போலவும் பிரமைதட்டியது. பேக்கரியைப் பூட்டிக்கொண்டு, அயல்வீட்டு ஆறுமுகத்தாரிடம் தஞ்சமடைந்தான். அங்கிருந்து பின்னர் அகதிகள் முகாமுக்கு அவன் அனுப்பப்பட்டான்.

ஃ

"என்ன! நாகவிகாரை தரைமட்டமாகிவிட்டதாம்! புத்த விக்கிரகத்தைச் சுக்குநூறாக நொறுக்கிவிட்டார்களாம்! எல்லாவற்றையும் தமிழர்கள் கொளுத்திவிட்டார்களாம்......!"

கண்டதையும், காணாததையும், கேள்விப்பட்டதையும், கேள்விப்படாததையும், கற்பனையில் உதித்தவற்றையும் சேர்த்து, ஒன்றுதிரட்டி உருட்டி எடுத்து, காது மூக்குகள் ஒட்டி கதைத்துக்கொண்டார்கள், கோட்டை அகதி முகாமில் பண்டாவுடன் இருந்தவர்கள்! மூலையிலிருந்த வானொலிப் பெட்டி அடிக்கடி "அதிகாரபூர்வமான" செய்திகளைச் சொல்லியது!—"ஊர்காவற்றுறை சுங்க காரியாலயத்தை புரட்சிக்காரர்கள் கைப்பற்றிவிட்டார்கள்! காங்கேசன்துறை விமான நிலையம் படைகள் கூட இறங்க முடியாமல் தீப்பற்றி எரிகிறது! தீவுப் பகுதிகளுடன் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது!-கிளர்ச்சிக்காரர்கள் வெடிவைத்து, பாலங்களை தகர்த்தெறிந்துவிட்டார்கள்! இராணுவத்தினர் தம்மீது ஆயுதம்தாங்கிய 'சிவிலியன்' படை எந்நேரமும் தாக்கலாமென அஞ்சுகிறார்கள்!" இரண்டாவது மகாயுத்தத்தின்போது 'யுத்த முனை'ச் செய்திகளை வானொலி வர்ணித்ததைக் கேட்பதுபோல இருந்தது அவனுக்கு!

"நாகவிகாரையை இடித்துவிட்டார்களாம்! அரச மரத்தை பெயர்த்துவிட்டார்களாம், தமிழர்கள்!"

கடந்த வருடம் மே ஜூன் மாதங்களில் நடந்த இனக் கலவரத்தின் போது நிகழ்ந்த சம்பவங்களைப் பின்னணியாக வைத்து நேயர்கள் சிறுகதைகள் எழுதி அனுப்பலாம். தகுதியானவை சுதந்திரனில் வெளியிடப்படும்.

பிரசுரமாகாத கதைகளைத் திருப்பிப் பெற விரும்புவோர் போதிய முத்திரைகளோடு கூடிய தபால் உறைகளைச் [illegible] [illegible] அனுப்பி வைக்க வேண்டும்.

—ஆசிரியர்: சுதந்திரன்

கேள்விச் செவியர்களின் உளறல்களைக் கேட்டு, அந்த வேளையிலும் நகைத்துக்கொண்டது பண்டாவின் உள்ளம், அந்த "நிலைகெட்ட மனிதர்களுக்காக! வழியில் காரில் வரும்போதுதான் பார்த்தான், அந்த அரச மரமும் இருந்தது-அதன் கீழ் புத்தர் சிலையும் அப்படியே இருந்தது! மதிற் சுவர்தான் கொஞ்சம் இடிந்துபோயிருந்தது!

ஃ

ஊர்வலம் நின்றுவிட்டது! அவ்வளவு நேரமும் பழைய சம்பவங்களோடு பின்னிப் பிணைந்து போயிருந்த பண்டாவின் சிந்தனை இப்போது தான் விடுபட்டது! நிமிர்ந்து பார்த்தான். நம்பவே முடியவில்லை! பழைய நாகவிகாரை இருந்த அதே இடம் ஆரிய குளம் சந்தி; கிளைகள் பரப்பி, இலைகள் நிறைந்து நிமிர்ந்து நிற்கும் அதே அரசமரம்; கீழே நிம்மதியாக, நிறைவாக, சாந்தம் வழிய, கருணை பொழியும் முகத்தோடு புத்த பகவான், புது எழிலுடன் முன் எப்பொழுதும் போல் இருந்து கொண்டிருந்தார்! மெல்லிய மஞ்சள் வண்ணத்தில் புறமதிற் சுவர் அதன் உட் பிரதேசத்தில் முன்பிருந்ததை விட அழகான கம்பீரமான விகாரைக் கட்டடம்! அலங்காரங்கள்; [illegible] கொண்டிருந்தது நாகவிகாரை!

இன்னிசைகள் ஏககாலத்தில் ஒலித்தன. கெட்டிமேளம்; 'ரபானு' வின் கொட்டு முழக்கு! — புத்த பிக்குகள் 'பிரித்' ஓத, புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது!

மத அனுஷ்டானம் நிறைந்த, வயது முதிர்ந்த பிக்கு ஒருவர் பேசத் தொடங்கினார்.

"சீ! இந்தப் பிக்குகள் பேசத் தொடங்கித் தானே நாடு இப்படி ஆகியது. மத போதனையை மறந்து, மஞ்சள் அங்கியோடு அரசியல் போதனையில் இறங்கி அட்டகாசம் புரிந்தார்களே! இத்தனைக்குப் பிறகும் பாடம் படிக்கவில்லையே! எங்காவது விகாரத்தில் அடைந்து கிடப்பதற்கு............மேடையில் எதற்கு?" பண்டாவின் உள்ளம் சீறியது!

அந்த பிக்கு பேசிக்கொண்டிருந்தார், கடைசி வாக்கியங்கள் மட்டும் பண்டாவின் காதுகளில் தெளிவாக விழுந்தன.

"அரசியல் சட்டந்தான் அவர்களது விரோதி-சிங்களவர்கள் அவர்களது சகோதரர்கள்" என்ற உண்மையைத் தமிழ் மக்கள் எந்தநிலையிலும் காத்திருக்கிறார்கள். தமிழர் மத்தியிலிருந்த ஒரு சிங்களவரும் துன்புறுத்தப் படவில்லை—உயிரிழக்க வில்லை!" இப்படி பிக்கு பேசி முடித்தார்.

பண்டா நிமிர்ந்து நின்றான். இதயத்தின் அடித்தளத்தில் இருந்த பீதி எங்கோ பறந்து விட்டது!

தன் இடுப்பிலிருந்த 'பெல்ட்'டை ஒருமுறை உருவி இறுக்கிக் கொண்டான். ஊரில் ஏற்கனவே தீர்மானஞ் செய்துகொண்ட எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, தான் வந்த சுவடே தெரியாமல் ஊருக்குப் போய்விட்டான் பண்டா!

ஃ

பலமணி நேர மனப் போராட்டத்தின் பின் நெஞ்சம் விடும் நெடுமூச்சுப் போல, களுத்துறைப் புகை வண்டி நிலையத்தில் புகையைக் கக்கிக் கொண்டு, புகை வண்டி நின்றது. இறங்கும் போதே, புகை வண்டி நிலையப் பெயர்ப் பலகையைப் பார்த்தான். தமிழ் எழுத்துக்களின் மீது இன்னமும் தார் அப்படியே மூடிக் கிடந்தது!

"முரட்டுப் பாவிகள்!"—பண்டாவின் வாய் முணுமுணுத்தது.

ஏற்கனவே, லொறி ஒன்றோடு அங்கு வந்து காத்து நின்ற, பண்டாவின் மனைவி பொடிமெனிக்காவுக்கும், அவளுடைய தகப்பன் சில்வாவுக்கும், பண்டா வெறுங் கையோடு வந்திறங்கியது பெரும் திகைப்பாகவும், ஏமாற்றமாகவு மிருந்தது. பேக்கரிச் சாமான்களெங்கே? கடையை மூடிவிட்டு, சாமான்களுடன் வருவதாகப் போனவராச்சே? தமிழர்கள் கொள்ளையடித்த பின் எரித்துவிட்டார்களா? தகப்பனும் மகளும் யோசித்தார்கள்!

"என்ன! சாமான்களெல்லாம் எங்கே?" மெனிக்கா ஓடிச் சென்று பரபரப்போடு கேட்டாள்.

"எல்லாம் நல்ல பாதுகாப்பாக இருக்கின்றன. தமிழர்கள் பண்புள்ளவர்களடி. பேக்கரியை மூடுவதில்லை; பதிலாக விஸ்தரிக்கப் போகிறேன்!" உறுதி தொனிக்கச் சொன்னான் பண்டா.

"உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா...? ஊர் இருக்கும் நிலையில்...?" அவள் பேசினாள்.

"போடி போ வீட்டுக்குள் அடங்கி இருக்கும் உனக்கும் மாமாவுக்கும் யாழ்ப்பாணத்தில் நடந்தது என்ன தெரியும். எல்லாம் பிறகு சொல்லுகிறேன்".

சில்வா, அந்த ஊரில் முன்னர் விதானையாகஇருந்தவர். தெற்கில் தமிழர் கடைகளுக்கேற்படுத்தப்பட்ட சேதங்களைச் சொந்தக் கண்ணால் கண்டுவிட்டு, தன் மருமகன் பண்டாவின் பேக்கரியும் அப்படியே யாழ்ப்பாணத்தில் சூறையாடப்பட்டிருக்கலாம் என்ற எண்ணத்தில், 'பழிக்குப் பழி வாங்குகிறேன்' எனக்கருவிக்கொண்டு, அந்த ஊரிலுள்ள வேலுப்பிள்ளையின் சுருட்டுக்கடை மீது வெறியாடும்படி 'வேட்டை நாய்க'ளுக்கு கண் சாடை செய்தவர் சில்வா! அப்பாடா! ஒரு நிமிஷத்தில் 'பூமணி ஸ்டோர்ஸ்' துவம்சமாகி விட்டதே! பண்டாவால் இந்தக்காட்சியை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. தன்னுடைய மாமனாரின் செயல் அவனை நாணிக்குறுக வைத்து விட்டது. மெனிக்காவையும் கூட்டிக்கொண்டு பண்டா யாழ்ப்பாணத்துக்குபுறப்பட்டான். வேலுப்பிள்ளை முதலாளியைச் சந்தித்துஆவன செய்ய வேண்டும் என்ற அங்கலாய்ப்பு ஒரு புறம்; தனது பேக்கரி பிஸ்னெஸ்ஸை விஸ்தரிக்க வேண்டும் என்ற ஆர்வம் மறுபுறம். போகும் போது பாதுகாப்புக்காக இருக்கட்டுமென்று, ஒரு உருவுவாளை எடுத்து அவசர அவசரமாக பெட்டியுள் சொருகினாள் மெனிக்கா. பண்டாவுக்கு எரிச்சலும், கோப

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜிரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11



## வாழ்க மணமக்கள் வாழ்க நீடூழி!

1959ம் ஆண்டில் மணம் முடிக்கப்போகும் இளந் தம்பதிகளுக்கும் அவர் தம் உறவினருக்கும் ஒரு நற் செய்தி.

புது மணத் தம்பதிகளின் புகைப்படங்களை "வாழ்க மணமக்கள் வாழ்க நீடூழி" என்ற இப்புதிய பகுதியில் பிரசுரித்து விளக்கமும் தர எண்ணியுள்ளோம். வாசக நேயர்களும், ஏஜண்டு நண்பர்களும், மற்றும் அன்பர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பெரிதும் பயன் படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

படங்கள் பிரசுரிப்பதற்கான மேலும் விவரங்களை திருமணப் பகுதி, C/o ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையோர் மொழி, கலை, பண்பாடு

## பேணி வளர்க்கத் தனி நிறுவனம்

## செஞ்சீனுவில் சிறப்பாகச் செயல்படுகிறது

### சகல மக்களிடமும் நல்லெண்ணம், நல்லுறவு ஒத்துழைப்பு ஓங்க அரசாங்க நடவடிக்கை

[மு. சிவானந்தம் பி. ஏ. (ஆனர்ஸ்)]

"சொல்லுதல் யார்க்கும் எளியவாம் அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" எனச் சொல்லிச் சென்றார் செந்நாப் புலவர். வெறும் பேச்சோடின்றிச் செயலிலும் இறங்கியுள்ளனர் செஞ்சீனர். எழுத்தளவிலோ, ஏட்டளவிலோ மாத்திரம் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்காது அவ்வுரிமைகளைச் செயல்படுத்த, அவர்தம் மொழிகளை வளர்க்கத் தேசியச் சிறுபான்மையோர் நிறுவனம் (Institute for National Minorities) ஒன்றை பீக்கிங்கில் நிறுவியுள்ளனர்.

#### தோற்றம்

இந்த நிறுவனம் 1957-ம் ஆண்டு ஜூன் மாதம் தொழிற்படத் தொடங்கியது. 1958-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ந்திகதி இலங்கை ஆசிரியர் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் இங்கு விஜயம் செய்தபோது நிறுவனத்தின் செயலாளரான லியாங்—சூ—வென் (Liang—Shu—Wen) எம்மை வரவேற்று, பல்வேறு பகுதிகளையும் காண்பித்ததோடல்லாமல் சிறுபான்மையோர் பற்றிய பல குறிப்புகளையும் தந்தார். இவர் பெரும்பான்மை இனமான ஹான் இனத்தைச் சேர்ந்தவர். இவரும் இவரோடுள்ள தலைமை அலுவலர்களும் நாம் துருவித் துருவிக் கேட்ட பல கேள்விகட்கும் பொறுமையோடு—புள்ளி விபரங்களோடு—பதில் தந்தார்கள்.

#### நோக்கம்

இந்த நிறுவனத்தின்நோக்கங்கள் மூன்று:

(1) சிறுபான்மையோரது கல்வி, பண்பாடு, பொருளாதாரம் முதலியவற்றை வளர்ப்பதற்கான முறைகளை ஆய்தல், ஆய்ந்த முறைகளை நடைமுறைக்குக் கொண்டுவர தகுந்தவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(2) சிறுபான்மையோரது மொழி, இலக்கியம் முதலியவற்றை ஆராய்ந்து வளர்த்தல்.

(3) சிறந்த மொழிபெயர்ப்பாளர்களையும், பன்மொழிப் புலவர்களையும் நாட்டுக்களித்தல் முதலியனவாம்.

#### அரசியல் துறை

இந்த மூன்று நோக்கங்களையும் நிறைவேற்ற இங்கு பல துறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. சில துறைகள் பல்கலைக்கழகத் தராதர முடையவை. துறைகளிலே மிகப் பிரதானமானவை அரசியல் துறை, வரலாற்றுத்துறை, மொழித்துறை முதலியனவாம். அரசியற்றுறையில் சேரும் மாணவர்கள் 3 வருடங்கள் பயில வேண்டும். சுயாட்சி மாவட்டங்களிலுள்ள சட்ட வல்லுனர்களே அதிகமாக இத்துறையில் பயிற்சி பெறுகின்றார்கள். இவர்கள் தமது மாவட்டங்களுக்குத் திரும்பிச்சென்றதும் அரசியலறிவைப் பரப்பவும், சட்ட ஒழுங்கை நிலைநிறுத்தவும் பெரிதுமுதவுகிறார்கள். கார்ல் மார்க்ஸின் தத்துவங்களை மிக ஒழுங்காகக் கற்றுக் கொள்கிறார்கள்.

> கடந்தஆண்டில், இலங்கை ஆசிரியர் நல்லெண்ணத் தூதுக் குழுவில் ஒருவராகச் செஞ் சீனு சென்று திரும்பிய ஆசிரியர் மு. சிவானந்தம் அங்குள்ள சிறுபான்மையோர் நிலை பற்றி, தாம் நேரில் கண்டவற்றையும் சேகரித்த புள்ளி விபரங்களையும் ஆதாரமாகக் கொண்டு தீட்டிய கட்டுரையின் முதல்பகுதி கடந்த வாரச் சுதந்திரனில் வெளியிடப்பட்டது. கடைசிப் பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

#### மொழித் துறை

மொழி, இலக்கியத்துறைகளிலே சிறுபான்மையோர் மொழிகள் பற்றி ஆய்வு நடைபெறுகின்றது. சில சிறுபான்மை மொழிகளுக்கு எழுத்து முறை இல்லை; சிலவற்றின் எழுத்து முறை பூரணமான வளர்ச்சி பெறவில்லை. எனவே எழுத்து முறையை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சி நடைபெறுகின்றது. மொழி வல்லுனர் சிறுபான்மை மொழிகளின் தொன்மை, தன்மை முதலியன பற்றி அரிய பல கருத்துக்களை ஆய்ந்தறிந்து வெளியிட்டிருத்தல் போற்றத் தகுந்த முயற்சியாகும். தற்சமயம் 19 சிறுபான்மை மொழிகளும் 37 பேச்சு மொழிகளும் (Dialects) பயிற்றப்படுகின்றன.

#### வரலாற்றுத் துறை

வரலாற்றுத்துறையிலே சிறுபான்மையினத்தவரின் பழைய வரலாறு பற்றியும், பண்டைய பழக்க வழக்கங்கள் பற்றியும் ஆய்வு நடைபெறுகின்றது. ஒருசிலரின் சுயசரிதமே வரலாறு என்ற கருத்திற்கு இங்கு சாவு மணி அடிக்கப்பட்டிருக்கிறது. பல இனத்தவர்களின் சமூகங்களும் எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தன. நாகரிகமும் பண்பாடும் வரலாற்றிலே எத்தகைய இடம் பெற்றன என்பன பற்றி ஆய்ந்து மாணவர்களுக்கு ஓர் புத்துணர்ச்சி நிரம்பிய வரலாற்றையே கற்பிக்கின்றனர்.

#### மொழி பெயர்ப்பு

பல்கலைக் கழகத் தராதரமுடைய வகுப்புகளைத் தவிர கீழ்வகுப்பு மாணவருக்கும் வகுப்புகள் நடத்தப் படுகின்றன. மாணவர்களைப் பல மொழிகளிலும் தேர்ச்சியடையச் செய்வதால் திறமைமிக்க மொழி பெயர்ப்பாளர்கள் உருவாகின்றனர். பல நாடுகளோடும் செஞ்சீனு பண்பாட்டுறவு கொள்ள முற்பட்டிருப்பதால், மொழிபெயர்ப்பாளர்கள் பெருமளவில் தேவைப் படுகின்றனர்.

#### மதம்

செஞ்சீனுவின் கல்வியமைச்சு மூலமாகவே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். தற்போது கல்வி பயில்வோர் எண்ணிக்கை 2200. இதிலே மாணவிகளின் எண்ணிக்கை 600. கல்வி, விடுதி வசதி, மருத்துவ வசதி முதலியன இலவசமாகவே அளிக்கப்படுகின்றன. வெவ்வேறு சிறுபான்மை யினத்தவர்களும் ஒன்றுகூடி வாழ்வதால்ஒருமைப்பாட்டுணர்ச்சி வளர்கிறது. பல்வேறு பழக்க வழக்கங்களையும் கைக்கொள்ள வசதியும் வாய்ப்பும் தரப்படுகின்றன. புத்த குருமார், இஸ்லாமிய மத குருமார் முதலியவர்களும் கல்வி பயில்கிறார்கள். திபெத்தியர்களின் மதவழிபாட்டிற்கான தனிஅறையுண்டு. இஸ்லாமியர் மத வழிபாட்டிற்கான அறையுமுண்டு. அங்கு திருக்குரான் வைக்கப்பட்டுளது.

#### உணவு வசதி

அந்த நிறுவனத்தின் நூல் நிலையத்திலே பல்மொழி வெளியீடுகள் காணப்படுகின்றன. அந்த மொழியினர் செய்திகளை அறிவதற்கு வசதியாய் புதினத் தாள்களும் சஞ்சிகைகளும் அங்கு வைக்கப்பட்டுள்ளன. எல்லா இன மாணவர்களும் ஒரேயிடத்தில் உணவருந்துகின்றனரென்றாலும் அவரவர் கட்குரிய வழக்கத்தின்படியே உணவளிக்கப்படுகின்றது. நாம் நிறுவனத்தின் சமையலறைக்குச் சென்றிருந்தபோது திபெத்து மாணவர்களுக்காக ஆக்கப் பெற்றுக்கொண்டிருந்த ஒருவித கோதுமை உணவை ருசி பார்த்து ரசிக்கும் வாய்ப்பேற்பட்டது.

#### நிறுவனத்தின் பயன்

தனியான பகுதியிலே சிறுபான்மை இனத்தவர்களின் பண்பாட்டு வளர்ச்சியினைக் காட்டும் தொல் பொருட் காட்சி நிலையம் அமைக்கப் பட்டிருக்கின்றது. சிறுபான்மையோர் உடுக்கும் உடுப்பு வகைகள், அவர்கள் வசிக்கும் வீட்டு மாதிரிகள், பயன்படுத்தும் இசைக்கருவிகள், விளக்கப் படங்கள், விசேட கொண்டாட்ட விளக்கங்கள் முதலியனவும் இங்கு இடம் பெறுகின்றன. சிறுபான்மையோரது இசை நடனம் முதலிய வற்றிற்கான பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப் பெறுகின்றன. சகல இனத்தவர்களிடமும் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் வளர்க்க சிறுபான்மை இனத்தவர்களைத் தன்மானத்தோடு வாழச் செய்ய, நாட்டின் ஆக்க வேலைகட்கு எதுவித குரோதமுமின்றி எல்லோரையும் ஒன்று சேர்க்க, இந்த நிறுவனம் பெரிதும் பயன்படுகின்றது.

---

## நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு இங்கு வந்தேன்" என்று கூறி பெயர்ப் பட்டியல் அடங்கிய ஒரு நீண்ட கவரைக் கட்டிலில் எறிந்தான் நிழல் மனிதன்.

காண்பது கனவா அல்லது நனவா என்ற வேறுபாடே தெரியாமல் நீலவேணியின் அறிவு குழம்பி விட்டது. நிழல் மனிதனின் அட்டகாசங்களைக் கேள்விப்பட்டதுமன்றி, அன்று டிஸ்பன்ஸரியில் பிரத்தியட்சமாகக் கண்டுமிருந்ததால் அவனைப் பார்த்ததில் அவளுக்கு ஒரு திருப்தி பிறந்தது.

"நன்றி" என்று அவளை அறியாமலேயே அவள் வாய் கூறியது. அந்த நன்றியை நிழல் மனிதன் ஏற்றுக் கொண்டதாகவே தெரியவில்லை. தான் எப்படி அங்கு வந்தானோ அதே போன்று மின்வெட்டு நேரத்தில் அங்கிருந்து மாயமாக மறைந்தான்.

'நிழல் மனித'னின் இந்த மாய வேலை நீலவேணிக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. அவன் எறிந்து விட்டுப்போன பெயர்ப் பட்டியலை எடுத்து லைட் வெளிச்சத்தில் ஒரு கண்ணோட்டம் செலுத்தினாள். 'அடேயப்பா! எவ்வளவு அற்புதமாக அந்த பட்டியலை அவன் தயாரித்திருந்தான். இலங்கையிலுள்ள மூலைமுடுக்கு சந்துபொந்து எழுத்தாளர்களின் முகவரிகளைக்கூட அதில் குறிப்பிட்டிருக்கிறானே! ஒருவேளை நிழல் மனிதன்கூட ஒரு எழுத்தாளனாக இருக்கலாமோ?" என்றுகூட அவள் எண்ணினாள். இருக்கலாம் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ யார் கண்டார்கள்? அதற்குப் பிறகு நீலவேணி நித்திரையே கொள்ளவில்லை. தன் மீது சுமத்தப்பட்ட விருந்து ஏற்பாட்டு அழைப்பிதழைத் தயாரிப்பதில் அவள் இரண்டறக் கலந்துவிட்டாள். காலையில் மிலூறியலைத் திணறவைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு கருமத்தில் கண் செலுத்தினாள்.

ஃ

வாசகநேயர்கள் இப்பொழுது ஒரு காரியம் செய்ய வேண்டும். நீலவேணியை அந்தப்படி அப்படியே விட்டுவிட்டு, நிழல் மனிதனின் பின்னால் செல்ல வேண்டும். அப்படி நாம் அவன் பின்னால் செல்ல வேண்டும் கொஞ்சமும் அசமந்தமாக இருந்துவிடக் கூடாது. கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு ரொம்பக் கவனமாக அவனை நாம் பின்தொடர வேண்டும். இல்லாதுபோனால் நம் கண்களில் மண்ணைத் தூவி விட்டு அந்த மாயாவி எங்காவது மறைந்துவிடுவான்!

இந்தத் தடவை நாம் அவனைப் பின்தொடர்வதில் நம் அங்கலாய்ப்பு ரஸனைக்கு ஒரு அரிய விருந்து கிட்டப்போகிறது. இத்தனை நாளும் பலர் கண்களுக்குப் புலப்படாமல் டிமிக்கி கொடுத்துக் கொண்டு வந்த அவன் வேஷம் எதிர்பாராத வகையில் ஒரு நெருக்கடியான சூழலில் கலைக்கப்படப் போகின்றது. அந்த அருமையான சந்தர்ப்பத்தை நாம் நல்லவழியில் பயன்படுத்திக் கொண்டால், நிழல் மனிதன் யார் என்ற மர்மம், இந்தக் கதை முடிவதற்கிடையிலேயே புரிந்துவிடும். ஆகவே வாசகநேயர்கள் தங்கள் திறமைகளையெல்லாம் மூச்சுப்பிடித்து, வரவழைத்துக்கொண்டு நிழல் மனிதன் பின்னால் போகத் தயாராகிக் கொள்ளுங்கள். எங்கே உங்கள் திறமையைப் பார்ப்போம்!

ஃ

நீலவேணியிடம், பெயர்ப் பட்டியலை அர்த்தராத்திரியில் திணித்துவிட்டு அவள் சொன்ன "நன்றி"யையும் ஏற்றுக்கொள்ளாமல் இருளோடு இருளாக நிழல் மனிதன் மறைந்தானல்லவா?

அவன் கண்களில் என்ன 'எலக்ட்ரிக்' பவர் இருக்குமோ தெரியாது. அந்தக் கும் இருட்டை ஊடுருவிப் பார்த்துக்கொண்டு அம்பு போல் மல்லிகைத் தோட்டப் பங்களாவுக்கு விரைந்தானவன்.

பங்களாவை அவன் அடைந்தபோது ரத்தம் ஜில்லிடும் ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டான். நிழல் மனிதன் அந்தக் காட்சியைக் கண்டதும், தன் தோற்றத்தை ஒருதரம் தனக்குள்ளாகப் பார்த்துக்கொண்டான். தான் நிழல் மனிதன் தானு அல்லது சாதாரண பேர்வழியா? தான் தான் நிழல் மனிதன் என்றால் அதோ...அதோ...இன்னும் ஒரு 'நிழல் மனிதன்' தோன்றுகிறானே! அவன் யார்? ஒருவேளை கண்ணாடிக்கு முன்னால் நாம் போய் நின்றுகொண்டோமா? நம் பிரதிபிம்பத்தைக் கண்டு நாமே கிலி கொண்டுவிட்டோமா? சே! அப்படியிருக்க நியாயமில்லை! நான் நின்ற இடத்தில்நின்று கொண்டிருக்கிறேன். அந்த உருவம் பதுங்கிப் பதுங்கிச் சென்றுகொண்டிருக்கின்றதே! நிழல் மனிதனுக்கும் போட்டியாக இன்னுமொரு நிழல் மனிதன் முளைத்துள்ளானா? என் உருவில் உலாவி வரும் இந்த 'டூப்ளிகேட்' நிழல் மனிதன் யார்? இவன் எதற்காக இந்த நேரம் இங்கு வரவேண்டும்? கையில் துப்பாக்கி வேறு வைத்திருக்கிறானே! தனிகாசலமாகவும் இருக்க முடியாதே! அவன் தான் காயத்துடன் கிடக்கிறானே!" இப்படியான நினைவோடு அவன் தலையைக் கிறுங்க வைத்தது அந்தக் காட்சி! புதிய நிழல் மனிதன் கண்ணாடி ஜன்னல் வழியாக பங்களாவின் உள்ளே புக முயற்சி செய்துகொண்டிருந்த காட்சி, நல்ல பாம்பின் [illegible] அவனுக்கு [illegible] படுத்தியது.

(தொடரும்)

உங்கள் நீடித்த எழிலுக்கு

எலைட்

என்றும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

'எலைட்'

பினிஷ் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,

லிமிடெட்,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியங்கள் - குறிக்கோள்கள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியான அடிப்படை உரிமைகள் என்ற வரம்பெல்லைக்குள் தமக்குத் தமக்குப் பிடித்த உரிமைகளைப் பாத்தியதை செய்ய தடையின்றி யிருக்கும் நிலைமை தான் சுதந்திரம் எனப்படும்.

உபாத்தியாயர்:

இந்த அடிப்படை உரிமைகள் காலத்திற்குக் காலம் மாற்றமின்றி யிருக்குமோ.

குமரேசு:

அப்படிச் சொல்ல முடியாது. காலத்திற்கேற்ற கோலமாக சூழலிற் கேற்றவாறு அடிப்படை உரிமைகளும் மாற்றமுற்றே வரும். தனி மனிதனின் நயத்தையும் சமூகத்தின் நயத்தையும் நிதானமாக எல்லை கட்டுவதுதான் அடிப்படை உரிமை நியமிப்பதாகும். தனி மனிதர் ஒவ்வொருவரின் நயமும் ஒன்றிற்கொன்று முரண்பாடுடையதாகும். அதன் பாற்பட்டே சமூக நயமும் தனி மனிதன் நயமும் ஒற்றுமையின்றி வேற்றுமைப்படும். இவ்வாறு அடிப்படை உரிமை நிர்ணயிப்பதில் தனி மனிதரின் நயத்திற்காகவே சமூகக் கட்டுக்கோப்பும் அரசாங்கமும் வகுக்கப்பட்டதன்றி அரசாங்கத்திற்காக தனி மனிதர் நியமிக்கப்படவில்லை என்ற உண்மை மலையிலக்காகக் கைக்கொள்ளப்படும்.

உபாத்தியாயர்:

இவ்வாறு நாங்கள் வரையறுத்த தனி மனிதர் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமைகள் பொருளாதாரத் துறையிலும் காண முடியுமோ?

குமரேசு:

ஆம். நான் முன்னமே சொன்னேன். தன் தன் விருப்பத்தின்படி ஒரு தொழிலைத் தெரியும் உரிமை ஒன்று. ஒவ்வொருவரும் தன் தன் விருப்பத்திற்கியைந்தவாறு பொருள் நுகர்வில் தெரிவு செய்தற்குரிய உரிமை மற்றொன்றாகும். ஆங்கிலத்தில் இதை (Consumer Sovereignity) என்று கூறுவர்.

அப்பாக்குட்டி:

ஓம் தம்பி. இந்தச் சண்டையெல்லாம் முடிஞ்ச பிறகும் சாமான் எல்லாம் நல்லாய் வரத்துப்போக்கான பின்னும் இந்தக் கண்ணுடிப் பச்சையரிசியையும் கோதுமையரிசியெண்ட கூப்பன் கொட்டையையும் தான் வாங்குஎண்டும் ஆகக் கூப்பன் கடையிலே தான் இவைகளை விக்கலாம் எண்டும் சட்டம் போடுறது அநியாயம் தானே. மனிதன்ரை சுதந்திரத்திற்கு அது மாறுதானே.

குமரேசு:

அப்பாக்குட்டியர் சொன்னதிலே மிக்க நுட்பமான உண்மையொன்று தொனிக்கின்றது. சண்டை நடக்கும் பொழுது சமூக நன்மைக்காகத் தனி மனிதன் சாதாரணமாகப் பாத்தியதை செய்த உரிமைகள் கட்டுப்பாடு பண்ணப்படலாம். ஆனால் சண்டை என்ற நிர்ப்பந்தமான நிலைமை முடிவெய்திய பின்னர் அந்தக் கட்டுப்பாடுகளை நிலை செய்வது தனி மனிதனின் சுதந்திரத்தைப் பாதிப்பதாகும்.

உபாத்தியாயர்:

சரி குமரேசு தனிமனிதனின் நியாய பூர்வமான சுதந்திரத்திற்கும் உரிமைகட்கும் பாதகமாயில்லாத வகையில் சமூகத்தின் நயத்தை உயர்த்துவதற்காக பொருள்உற்பத்தி விநியோகம் முதலிய துறையில் திட்டமிட்டுக் கருமம் ஆற்றுவது தான் நாம் குறிப்பிடும் இலட்சியங்களாகும். குறிக்கோள்கள் என்பன வற்றை எவ்வாறு நிர்ணயிப்பது?

குமரேசு:

என்ன வகையில் பொருளாதாரத் துறையில் மக்களின் சுபீட்சத்தை அதியுன்னத நிலைமைக்குக் கொண்டுவர முடியுமென்ற வினவின் பதில்தான் குறிக்கோள்களாகும். முதலாவதாக சுபீட்சம் அதிகரிப்பதற்குச் செல்வம் பெருக வேண்டும். சமூகத்தைப் பொறுத்தவரையில் நாட்டில் பொருள் உற்பத்தியதிகரிப்பதிலேயே செல்வ நிலையும் அதன் பாற்பட்ட சுபீட்சமும் பிரதானமாகத் தங்கியிருக்கின்றன. ஆகவே முதலாவது குறிக்கோள் பொருள் உற்பத்தி. பொருளாக்கம் எவ்வளவிற்கு உயர்த்த முடியுமோ அவ்வளவிற்கு உயர்த்துவதேயாகும்.

உபாத்தியாயர்:

ஒன்று பொருளுற்பத்தியைப் பெருக்கல். மற்றவை யாவை?

குமரேசு:

பொருள் உற்பத்தி பெருகினல் நாட்டு வருவாய் உயரும். ஆனல் அந்நிலைமை மட்டும் மக்கள் அனைவருக்கும் சுபீட்சத்தைக் கொடுக்கமாட்டாது. ஒரு சிலர் செல்வந்தராய் இருக்க முடியும். ஏனையோர் வறியவராய் இருக்கக்கூடும். ஆகவே நாட்டு வருவாய் சமபான்மையாக (Equitable) பங்கீடு பண்ணப்பட வேண்டும்.

உபாத்தியாயர்:

நாட்டு வருவாய் மக்கள் அனைவருக்கும் சமபான்மையாகப் பங்கீடு பண்ணப்படுதல் இரண்டாவது குறிக்கோளாகும். வேறு யாது?

குமரேசு:

ஒரு மனிதனுக்கு வருவாய் இருக்க வேண்டுமென்றல் அவன் பொருளாக்கத்தில் ஏதோ ஒரு வகையில் பங்கு பற்ற வேண்டும்! அதாவது உற்பத்திக்கான ஏதோ ஒரு தொழில் செய்ய வேண்டும். தனி மனிதன் ஒருவன் தானுகப் பொருள் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு இன்றைய நிலைமையிடந்தராது. ஆகவே தனி மனிதர்கள் ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கு அதாவது பொருளாக்கத்தில் ஈடுபடுவதற்கு உழைப்புச் சந்தர்ப்பம் பெற வேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

உபாத்தியாயர்:

தக்க அளவு உழைப்புச் சந்தர்ப்பம் மூன்றாவது குறிக்கோளாகும்.

குமரேசு:

தனிமனிதனின் வருவாயும் நாட்டு வருவாயும் சுருங்கியும் விரிந்தும் நிலை தளம்பாது நிலைப்பட்டிருக்க வேண்டும். ஆங்கிலத்தில் (Income Stability) என்று குறிப்பிடுவர்.

உபாத்தியாயர்:

நிலைதரமான வருவாய்க்கேற்ற பொருளாதாரமுறை நான்காவது குறிக்கோளாகும்.

குமரேசு:

இவையெல்லாம் ஒருபுறமிருக்க வருங்காலத்தையும் கண்காணிக்க வேண்டும். அதாவது மிக்க தீவிரமாக விஞ்ஞானம் முன்னேறிக்கொண்டு போகும் பொழுது உற்பத்தி முறைகளெல்லாம் மாறியும் விருத்தியடைந்தும் கொண்டிருக்கின்றன. ஆகவே காலத்திற்குக் காலம் நாட்டுப் பொருளாதாரம் முன்னேறியும் வளர்ச்சியெய்திக்கொண்டும் போகத் தக்கதாக திட்டமிட வேண்டும்.

உபாத்தியாயர்:

ஐந்தாது குறிக்கோளை வளர்ச்சி யென்று குறிப்பிடலாம்.

குமரேசு:

இவைதான் பிரதானமான குறிக்கோள்களாகும்.

உபாத்தியாயர்:

சரி இத்துடன் இன்றைக்கு நிறுத்துவோம். வருகிற சனிக்கிழமை தொடர்ந்து கவனிப்போம்.

குமரேசு:

நன்று.

அப்பாக்குட்டி:

நான் வரப்போறேன்.

சினிமா விமர்சனம்:

# பதிபக்தி

சாவித்திரி தனது கணவன் ஜெமினி கணேசன்மீது காட்டும் பக்தி விசுவாசத்தைச் சித்தரிக்கும் 'பதிபக்தி' என்ற படத்தில் சிவாஜி கணேசன் வேறு குறுக்கிட்டு கோளாறு செய்கிறார். தாய் மாமன் குறுக்கிட்டால் கைப்பிடித்த கணவன் மீதுள்ள பற்று நீங்கிவிடுமா என்ன? சிவாஜி முழுக்கித் தள்ளிவிட்டு கடைசிக் கட்டத்தில் சதி-பதிகளைக் கூட்டிவைத்து மகிழ்கிறார்.

சோலைமலையின் கதையிலே புதுமை இல்லாவிட்டாலும் பெண்களின் உள்ளத்தை உலுக்கவும் கண்களைக் கலங்க வைக்கவும் நிறைய 'சரக்கு' சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதனல் படம் பூராவும் மயானகாண்டமோ என்று எண்ணத் தேவையில்லை. சந்திரபாபு இருக்கவே இருக்கிறார். பரத நாட்டியத்தோடு ரெக்-என்-ரோள்கூட ஆடிப்பாடி அனைவரையும்திகைக்க வைக்கிறார். அவரோ கலைப்பித்தனர். பலரின் குருதேவர். உழைப்பின் பெருமை அறிய சைக்கிள் றிக்ஷோ தொழிலாளியைக் குருவாகக்கொள்கிறார். அகஸ்மாத்தாக அப்போது அங்கு வந்துவிட்ட கலைப்பித்தனரின் மாணவி ஒருத்தி தமது குருநாதரின் குருதேவரை, குருவின் குருவே என்று அழைத்த மாதிரியையும் அதற்கு குருதேவர்கள் இருவரும் மசிந்த விதமும், இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

'மல்லிகா'வுக்குப் பிறகு பதிபக்தியில்தான் தங்கவேலுவும் பாலையாவும் கூட்டுச் சேர்ந்து நடித்திருப்பதைப் பார்க்கிறோம். இருவரும் எதைப் பேசினலும் எதைச் செய்தாலும் நமக்கு பொங்கி வரும் சிரிப்பை அடக்க முடியாது.

ஜெமினி, சிவாஜி தாம் முன்னர் எடுத்த பெயருக்கு பங்கம் தேடிக்கொள்ளாத வகையில் நடித்திருக்கிறார்கள். சாவித்திரியும் எம்.என். ராஜமும் அப்படியே. நடிப்பு நன்றாக இருந்துவிட்டாலும் அதற்காக எப்பொழுதும் ஒரேவிதமான நடிப்பைக் கண்டு ரசிக்க முடியாதல்லவா?

பாடல்கள் இனிமையாக இருக்கின்றன. புத்தர் சிலையும் கோயிலும் இரண்டு மூன்று தடவைகள் திரையில் தெரிகின்றன. பதிபக்தியோடு தெய்வ பக்திக்கும் இடமளிக்கும். பதிபக்தி விரைவில் சிங்களத்தில் 'டப்' செய்யப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ்ப் பெண்கள் பார்க்க வேண்டிய படங்களில் ஒன்றுதான் பதிபக்தி. கொழும்பு 'கிங்ஸ்லி'யில் தற்பொழுது திரையிடப்படுகிறது.



# தியாகச் சின்னம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாட வேண்டுமென்று ஆசைப்படுகிறாராம். வேலை சீக்கிரமாக முடியட்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்.

சஞ்சயர்: சிற்பியாரே, சக்கரவர்த்தியின் கட்டளையைக் கேட்டீர்களா? கோவில் திருப்பணி வேலை சீக்கிரமாக முடிய முயற்சி செய்யுங்கள். வேண்டிய ஒத்தாசைக்கு மந்திரியையும் தனதிகாரியையும் அணுகுங்கள்.

மாயவர்: அரசே, சர்வேசுவரனின் திருவருளால் எவ்வித தடையுமின்றி கட்டட வேலை நடந்து வருகிறது. தெய்வத் திருப்பணியில் என்னோடு சேர்ந்து என்மகள் விநோதினியும் அயராது உழைக்கிறாள். இன்னும் ஒரு திங்களில் வேலை பூர்த்தியாகிவிடும் என்று நம்புகிறேன். அதற்கு மேல் ஈசன் செயல்.

சஞ்சயர்: ஆகட்டும். இராஜேந்திர சோழ சக்கரவர்த்தியின் மணிமுடி இலங்கை வரையும் ஆட்சி புரிந்தது என்பதற்கு ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு சான்றாக விளங்கப் போவது இந்த சிவன் கோவில் தான். உங்கள் சிற்ப சாஸ்திர திறமை பூராவும் எவ்வித குறைவுமின்றி அதில் பரிமளிக்க வேண்டும் சிற்பியாரே.

மாயவர்: தங்கள் வாக்குப்படியே நடக்க ஈசன் திருவருள் [illegible] அரசே.

(இந்த சமயத்தில் தென் பிராந்தியத்துக்குச் சென்றிருந்த ஒற்றர்படைத் தலைவன் வீரன் வந்து அரசரை வணங்குகிறான்)

சஞ்சயர்: வீரா, இப்பொழுது தான் உன்னைப் பற்றிக் கேட்டேன். நீயும் வந்துவிட்டாய். நீ போயிருந்த விஷயம் எப்படி? தென்னட்டு விக்ரமன் விஷயம் என்ன? எல்லாம் விபரமாகச் சொல்லு.

வீரன்: பிரபு, கழுத்துறையிலிருந்து கதிர்காமம் வரை ஊர் ஊராகச் சுற்றினேன். எல்லா ஊர்களிலும் படைக்கு ஆள் சேர்க்கும் முயற்சியில் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். வேல், வாள், ஈட்டி, கேடயம் முதலான ஆயுதங்களைச் செய்து குவிக்கிறார்கள் கொல்லர்கள். கழுத்துறை நகரபாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கிறது. மந்திரிகளும் பிரதானிகளும் அடிக்கடி விக்ரமபாண்டிய அரசருடன் அந்தரங்க ஆலோசனையிலீடுபடுகிறார்கள். அவர்களுடைய ஏற்பாடுகளைப் பார்க்கும் போது இன்னெரு தாக்குதலுக்கு திட்டமிடுகிறார்கள் என்றுதான் தெரிகிறது.

வீரவர்மன்: ஆஹா, மூன்று முறை புற முதுகு காட்டி ஓடிய விக்ரம பாண்டியருக்கு இன்னுமா வீராப்புப் போகவில்லை? சோழ சாம்ராஜ்ய மணிமுடியின் ஆசை அவரை இன்னும் விடவில்லை போலிருக்கிறது! உத்தரவு கொடுங்கள் அரசே, இந்தக் க்ஷணமே சென்று தென்னிலங்கையிலும் நமது கொடி பறக்கச் செய்கிறேன். சோழ நாட்டு எல்லையில் அவர்கள் கால் வைக்குமுன் அவர்கள் காலைக் கண்டதுண்டமாக்கி விட்டு வருகிறேன், அரசே!

சஞ்சயர்: தளபதி வீரவர்மரே, அவசரப்படாதீர்கள், கலியூர்ப் போரில் கோசலரைக் கொன்று வெற்றிக் கொடி நாட்டிய தளபதி அப்பிரமேயரின் மருமகன் தாங்கள், எங்கள் தளபதியாயிருக்கிறவரையில் சோழநாட்டுக்குப் பாண்டியரால் ஆபத்து என்கிற பேச்சுக்கே இடமில்லை. இன்னும் பாண்டியர்களுக்கு படையெடுப்பு எண்ணம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை.

ஜகத்பாலர்: அரசே! வீரன் சொன்னதைக் கேட்டபின்புமா அப்படி நினைக்கிறீர்கள்?

சஞ்சயர்: சோழர்களால் தங்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாதே யென்று தற்பாதுகாப்புக்காக ஏற்பாடுகள் நடக்கலாம். ஆனல், நாமும் அலட்சியமாயிருந்து விடக்கூடாது ............தளபதி, எவ்வித நிலைமையையும் சமாளிக்க நமது படைகள் ஆயத்தமாயிருக்கட்டும்.

வீரவர்மன்: உத்தரவு அரசே!

(வாழ்த்துக் கோஷங்கள் ஒலிக்க சஞ்சயர் எழுந்து செல்கிறார்)

(தொடரும்)


## தேவை

சுதந்திரன் ஆசிரியர் பகுதியில் வேலை பார்ப்பதற்கு ஒரு சிங்களம்—தமிழ் மொழி பெயர்ப்பாளர் தேவை. சிங்களப் பத்திரிகைகளிலிருந்து செய்திகளைத் தமிழில் மொழி பெயர்க்கக் கூடியவராகவும், சுயமே கட்டுரைகள் தீட்டக் கூடியவராகவும், ஆங்கில அறிவு உடையவராகவும் இருக்க வேண்டும். வயது, தராதரம், அனுபவம் முதலியன குறித்து 31—1—1959 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு.


சுதந்திரன் இன்றேல் சுபீட்சமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## — சுதந்திரன் சுருக்க விளம்பரக் கோவை —


ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு.

தொடக்கம் 2-2-59

இடம்: இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை.

தொடக்கம்: 2—2—59 திங்கள் பி. ப. 4 மணி.

பொறுப்பு: "தமிழ் மன்றம்", சங்குவேலி, மானிப்பாய்.

தொடக்கி வைப்பவர்: பிரபல கல்வி அதிகாரி ஒருவர்.

ஆசிரியர்கள்: அனுபவம் மிக்க பேராசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள்.

★ சாதாரண பயிற்சி, விசேட பயிற்சி இருவகை வகுப்புகள்.

★ குறைந்த கட்டணம்! வாரத்தில் 5 நாட்கள் வகுப்புகள்!! வரையறுக்கப் பட்ட மாணவர் தொகை! உடனே சேருங்கள்!!

விபரங்களுக்கு:
த. திருநாவுக்கரசன் ஆசிரியர்
("நாவேந்தன்")
செயலாளர்
"தமிழ் மன்றம்"
சங்குவேலி மானிப்பாய்.

**பூமகள் அழைக்கிறது**

ஆஸ்பத்திரி சுவீப், கொழும்பு சுவீப், காலி ஜிம்கானு இரண்டு ரூபா டிக்கற் தேவைகளுக்கு முத்திரையொட்டிய கவருடன் போஸ்டல் ஓடர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

பூமகள் வாசா ஸ்டோர்ஸ்
24, ஜெம்பட்டா தெரு,
கொழும்பு—13.

**சிங்கம் பற்பொடி**

தங்கம் நிகர் சிங்கம் பற்பொடி எங்கும் கிடைக்கும். பற்களின் வெண்மைக்கும் திண்மைக்கும் வேண்டியது சிங்கம் பற்பொடி.

குறைந்த விலை-நிறைந்த பயன்

ஏக விநியோகஸ்தர்கள்:
ஜி. கே. ஜி.
டிரேடிங் கார்ப்பரேஷன்
86, செக்கடித் தெரு,
கொழும்பு.

**நல்ல உணவுப்பொருட்கள் விலை சகாயமாகப் பெற வேண்டுமா?**

பிரசித்திபெற்ற இடம்

**லையன் ஸ்டோர்ஸ்**

171, காஸ்வேர்க் ஸ்ட்ரீட், கொழும்பு—11.

போன்: 7009

**NESTLE PRODUCTS.**

சகல நெஸள் வகையருப் பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும், மற்றும் சகல சாய்ப்புச் சாமான்களும் பெற்றுக் கொள்ள வேண்டுமா?

அப்படியெனில் உடனே விஜயம் செய்யுங்கள்

**V. செல்வரத்தினம் & Co.,**

264, பிக்கறிங்ஸ் ரேட், கொழும்பு

**'நாடோடி'**

இளந்தமிழ் மாத இதழ்.

கதை, கட்டுரை, கவிதைகள், சிறுவர் புத்தி விருத்திப் போட்டி, அச்சுக் கூப்பன்கள், கதைப் போட்டி இன்னும் பல.

தனிப் பிரதி ச. 10. வருட சந்தா ரூ. 1-50.

**நாடோடி**

அக்கரல்ல
ஒப்பநாயக்கா


# நாகரிகம் பேசினல் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து தெருவுக்கு ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் கட்டினல் எத்தனையோ பேருக்கு உபயோகப்படும்" என்று 'பொதுநலம்' பேசும் நிலைக்கு மாறிவிட்டிருந்தார்.

ஸ்ரீமதி வயிற் அவதாரம் கடிதம் எழுதினள். "ஆசை அத்தானே! அன்பு வைத்தேனே! உங்களைப் பார்க்க ஆவலாக இருக்கிறது. அவசியம் வாருங்கள். வரும்போது ஒரு சோடி தோடு வாங்கி வாருங்கள்". ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் 'தோடு வாங்கி வாருங்கள்' என்ற வரியைக் கத்தரித்து தலையணைக்குக் கீழே வைத்து விட்டு ஒரு வார லீவில் வீட்டில் படுத்திருந்து யோசித்தார்.

### ஸ்ரீமதிக்கு ஸ்ரீமான் பரிசு

அவருடைய தீராத சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது ஒரு நற்செய்தி. அப்போது புத்த ஜயந்திக்காலம் அதற்காக அரசாங்கம் முற்பணமாக நூறு ரூபா கொடுக்கப்போகும் செய்தியறிந்து துள்ளிக் குதித்தார். பணத்தோடு நகைக் கடைக்கு ஓடினர். அழகான ஐந்து கல் தோடு ஒரு சோடி வாங்கினர். ஐயா புறப்பட்டு விட்டார் அம்பாளின் தரிசனத்துக்கு!

### ப்பூ! இதுவா?

ஸ்ரீமதி வயிற் அவதாரம் தோட்டைப் பார்த்து விட்டு வயிற்றெரிச்சலை அப்படியே கட்டிக் கொண்டாள் என்று எண்ணிவிடாதீர்கள். அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"இதுவும் ஒரு தோடா? மயில் தோடு தானே இன்றைக்கு நாகரிகம்", என்று சீறினள். ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பினர் தோட்டுடன்!

### 'குழாய்' கொள்முதல்

[illegible]ம்பில், வாங்கிய கடையிலேயே [illegible] விற்ருர். 'கைமேலே' நாற்பது ரூபா நஷ்டம். அறுபது ரூபா கிடைத்தது. அந்தச் சமயம் பார்த்து அவருடைய 'குழாய்கள்' ஆயிரங்கண்களையும் சிமிட்டிச் சிரித்தன. இரண்டு மூன்று காற்சட்டைகள் வாங்கினர். அறுபது ரூபாவும் அந்தர்த்தியானமாயிற்று. மாதாமாதம் சம்பளத்தில் முந்திய முற்பணம் கழிக்கப்படும் பொழுது மட்டும் வயிற்றில் ஓங்கிக் குத்திக் கொள்வார்.

### இரண்டாவது பரிசு

ஸ்ரீமதி வயிற் அவதாரம் கடிதம் எழுதினள்: "ஆசை அத்தானே!.............. உங்களைப் பார்க்க ஆவலாக இருக்கிறது. அவசியம் வாருங்கள், தோட்டுடன்" ஸ்ரீமான் வயிற்றெரிச்சல், 'வாருங்கள், தோட்டுடன்' என்ற வரியைக் கத்தரித்துச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு இரண்டு வார லீவில் கால் போன இடமெல்லாம் திரிந்து யோசித்தார்.

யாரோ செய்துவைத்த புண்ணியம் ஸ்ரீமான் வயிற்றெரிச்சலின் தலையிலே வந்து விடிந்தது. ஆம், அவருக்கு விமோசனம் கிடைத்தது; புது வருடத்தையிட்டு முற்பணம் கொடுத்தார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு போய் நகைக் கடைக்காரனின் மடியில் சொருகிவிட்டு மயில் தோட்டை வாங்கிக் கொண்டார். ஐயா மீண்டும் புறப்பட்டு விட்டார், அம்பாளின் தரிசனத்துக்கு!

### தோள் பட்டையில் இடி

ஸ்ரீமதி வயிற் அவதாரம் அவரை "வாருங்கோ வாருங்கோ" என்று வாய் நிறைய வரவேற்று அழைத்துப் போய், வெந்நீர் வைத்துக் குளிக்க வசதி செய்து தலைவாழையிலையிட்டு சோறு பரிமாறி, தாம்பூலம் கொடுத்து, தெய்வம் தொழாது கொழுநன் தொழுதெழுந்து—அப்படியெல்லாம் நடக்கவில்லை. வாசற்படியிலேயே வைத்து "எங்கே தோடு?" என்று கேட்டாள். ஸ்ரீமான் வயிற்றெரிச்சல் குதூகலத்தோடு தோட்டை எடுத்துக் கொடுத்தார். ஸ்ரீமதி வயிற் அவதாரம் தோட்டை அவருடைய முகத்திலேயே விட்டெறிந்து "பூ! போயும் போயும் இந்தத் தோடுதான வாங்கி வந்தீர்கள்? ரொக் என்—ரோல்! தோடு அல்லவா இன்றைய நாகரிகம்?" என்று முகரக்கட்டையை தோள்ப்பட்டையில் இடித்தாள். அந்தளவிலேயே திரும்பினர் வயிற்றெரிச்சல். ரயில் ஏறினர் ஐயா நேரே கொழும்பில் வந்து இறங்கினர்.

### தீராத யோசனை

"இந்த மயில் தோட்டையே சொற்ப செலவில் 'ரொக்—என்—ரோல்' தோடாக மாற்றிச் செய்து தருகிறேன்" என்று ஒரு நண்பன் அந்த மயில் தோட்டை வாங்கிக்கொண்டு போனன். போனவன் ஒரேயடியாகப் போய்விட்டான்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ வயிற்றெரிச்சல், தான் இனிமேல் கொழும்பிலேயே நிரந்தர பிரசையாகி விடுவதா அல்லது எங்காவது போய் விடுவதா என்று இப்போது யோசித்து வருகிறார். கத்தரித்து தலையணைக்குக் கீழோ அல்லது சட்டைப் பையிலோ போட்டுக்கொள்ள இம்முறை கடிதம் இல்லை. அது தான் ஒருகுறை.

# இதோ விளக்கம்....

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுடைய பேராதரவைப்பெற்ற ஒரே ஒரு அரசியல் ஸ்தாபனமாக இன்று விளங்குவது இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். அதனல் தமிழ் மக்கள் அக்கட்சி மீது அபரிமிதமான பாத்தியதை கொண்டாடுகிருர்கள்.

தமிழரசுக் கட்சியும் அதனைச் சார்ந்த தலைவர்களும் கடைப்பிடிக்கும் கொள்கைகள், மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆதியன பற்றி அவ்வப்போது ஆராய்ந்து விளக்கம் தேடிக்கொள்ள தமிழ்பேசும்மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களும், பொதுவிஷயங்களில் தாம் மனம் போனபோக்கில் நடந்துகொள்ளலாம்; ஏன் என்று கேட்க ஆளில்லை என்று நினைக்க இடமில்லை. 'கூறுங்கள் பதில்' எனக் கேட்கும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. எனவே. தான் இப்பகுதி.

நேயர்கள் தங்கள் நியாயமான சந்தேகங்களைக் கீழ்க்காணும் பத்திரத்தில் கேள்விருபத்தில் நிரப்பி "இதோவிளக்கம்", C o ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்புவார்களானல் நாம் அதை உரிய தலைவரிடம் சமர்ப்பித்து விளக்கம் பெற்று இங்கு பிரசுரிப்போம் வினு விடுப்போரின் பெயரும் சேர்த்துப் பிரசுரிக்கப்படும்.

—ஆசிரியர்: சுதந்திரன்

### இதோ விளக்கம்

பெயர் ..........................................................

விலாசம் ..........................................................

வினு ..........................................................

..........................................................

..........................................................

..........................................................

கையொப்பம்

..........................................................

### இவை . . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லக் கூடாது.

6. கொடுப்பதும் வாங்குவதும் வலதுகையால் செய்ய வேண்டும்.

7. பொழுதுபட்ட பின்னர் ஊசிகொடுக்கக்கூடாது.

8. காலில் செருப்பு மாட்டிக் கொண்டு தோட்டத்துக்குள் போகக்கூடாது.

9. நல்ல காரியத்துக்கு மூன்று பேர் கூடிச் சொல்லக் கூடாது.

10. தொற்று நோய்க் காலம் விட்டு வாசலில் வேப்பிலை சொருக வேண்டும்.

---

### சமுதாயக் . . . .

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் கொடு" என்று நடைமுறையில் மாற்றி யமைத்துக் கொள்கின்றோம்.

இது தான் நாம் படித்ததின் பயனு? இல்லை! நாம் வாழ, நம் சமுதாய மக்கள் வாழ, இவ்வையகமே வாழ, சமுதாயக் கலங்கரை [illegible]


## ஏஜண்டுகள் தேவை

சுதந்திரன் பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க்காணும் இடங்களில் தகுதி வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| அளவத்துகொட | லப்பந்துறை |
| அல்தமுல்லை | லங்காவெல |
| ஹஸ்கரதெனியா | மானிப்பாய் |
| ஹாலி எல | மாங்குளம் |
| அப்புகஸ் தலாவை | மத்திகை |
| ஹொருணை | நிக்கவெறட்டியா |
| ஹொறப்பொத்தானை | [illegible]வெல |
| பூநகரி | கொஸ்லாந்தை |
| பொத்துவில் | வெலிகம |
| தலாவை | |

194, ஏதட்டா தெரு,
கொழும்பு—12.

சர்குலேசன் மனேஜர்,
சுதந்திரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க......

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினுக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. திருமணத்தின் போது தாலி கட்டும் முறை தமிழ் மக்களிடையே எப்படி ஏற்பட்டது?

—பொ. சோதிராஜா, குலனே.

2. மாமிசம் உண்ணும் மிகப் பெரிய மிருகம் எது?

—வ. முத்துலிங்கம், கோவில் குடியிருப்பு.

3. உறங்கும் பொழுது தலைக்குத் தலையணை வைத்து, தலையைச் சற்று உயரமாக வைத்துக்கொள்வது எதற்காக?

—'கலைத்திரு' காங்கேசன்துறை.

4. தேங்காயை நொறுக்கியதும் முதல் வெளிப்படுவது இளநீரா அன்றித் தேங்காய்ப் பாலா?

—ஏ. செல்வநாயகம், வாழைச்சேனை.

5. பணத்துக்குப் பதிலாக 'செக்'குகள் கொடுக்கும் பழக்கம் எப்போது ஏற்பட்டது?

—முஹம்மது முஹ்ஸின்.

6. ஐஸோகிரேடஸ் என்றால் என்ன அல்லது யார்? 1. ஒரு யந்திரம் 2. ஒருவித பானம் 3. ஒரு ஞானி 4. ஒரு நகரத்தின் பெயர். இவற்றில் எது சரி?

7. பாயாசம் தயாரிப்பதற்கு நாம் விருப்போடு வாங்கும் சவ்வரிசி என்ன மரத்தில் இருந்து பெறப்படுகிறது? அது பூவா அன்றி பழத்தின் வித்தா?

8. "கலியாணக் கதை" என்ற நூல் யாரால் எப்போது எழுதப்பட்டது?

9. இன்று சீமேந்து உபயோகிக்கப்படாத கட்டட வேலைகளே கிடையாது அல்லவா? இந்த சீமேந்து யாரால் எந்த ஆண்டில் முதன் முதல் உற்பத்தி செய்யப்பட்டது?

10. யூனெஸ்கோ (Unesco) என்றால் என்ன பொருள்?

...............பண்டிதனுவான்

# மாவீரன் மாட்டின் லூதர்

இப்பரந்த உலகில் பல அறிஞர்கள் தோன்றி மறைந்து இருக்கிறார்கள். அவர்களில் மாட்டின் லூதரும் ஒருவர் ஆவார்.

இவர் ஜெர்மனியில் ஒரு சிறு கிராமமாகிய துரிங்கியர் என்ற ஊரில் ஓர் ஏழை விவசாயிக்குப் பிறந்த மாவீரனாகும். இவ்வீரன் 1453ஆ நவம்பர் 10ந் தேதி இத்தரணியில் அவதரித்தார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த லூதர் தன் தாயாரின் முயற்சியினால் எர்பர்ட் என்ற கல்லூரியில் கல்வி பயின்றும் எம். ஏ. பட்டம் பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு. பொருளாதாரத்தின் சூழ்நிலையால் அவர் தம் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

பள்ளியை விட்டு விலகிய லூதர், தம் பகுத்தறிவின் கண்கொண்டு, சமுதாயத்தில் பரவிக் கிடந்த மூடநம்பிக்கையையும் மத வெறியையும் நன்கு ஆராய்ந்து அவற்றிற்கு முற்றுப் புள்ளியிட அரும்பாடுபட்டார்.

இதைக் கண்ட மக்கள், லூதர்மீது சீறி விழுந்தனர். பலவகையிலும் உதாசீனம் செய்தனர். இதன் விளைவால் அவர் இயற்றிய அநேக நூல்கள் தீயிலிடும்படிப் போப்பாண்டவர் கட்டளையிட்டார்.

போப்பாண்டவர், லூதரைப் பிடித்துத் தரும்படி பொதுமக்களுக்கு கட்டளை பிறப்பித்தார். இதையறிந்த மாட்டினின் உயிர்த் தோழரான பிரடரிக் என்பவர் தனக்குச் சொந்தமான சாக்ஸன் நாட்டிலிருந்த ஒரு மலையில் மறைத்து வைத்துவிட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு மக்கள் அனைவரும் லூதரின் நூல்களைப் படிக்க ஆரம்பித்தார்கள். அதன் பிறகு விவசாயிகள், மாட்டின் லூதரின் உள்ளக் கருத்தை உணர்ந்தனர். நாட்டில் மதப் போர் மூண்டது. இதை அறிந்த லூதர் நாட்டுக்குப் போகத் துடியாய்த் துடித்தார். அந்நிலையில் அவர் நண்பர் அவரை வெளியில் விடவில்லை. இதனால் லூதர் நாளுக்கு நாள் உடல் நலிந்து இறந்தார். அப்பொழுது அவருக்கு வயது 70.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 3.

பெயர் ...........................................................

பாடசாலை.......................................................

விலாசம்..........................................................

..........................................

.................................... ....................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்




# சமுதாயக் கலங்கரை விளக்கம்

(ச. தியாகராசா)

இருளில், சமுத்திரத்திலே தத்தளிக்கும் கப்பல்களுக்கு வழிகாட்டி தான் கலங்கரை விளக்கம். ஆம், ஒரு பரந்த மாசமுத்திரத்திலே இருண்ட வேளையில் பிரயாணஞ் செய்ய வேண்டுமென்றால் ஒரு கலங்கரை விளக்கம் அவசியம் தானே.

எப்படி இருண்ட வேளையில், கலங்கரை விளக்கத்தைப் பின்பற்றாத மாலுமி செலுத்துங் கப்பல் அபாயத்துக்குள்ளாகுமோ, அப்படியே சமுதாயத்தின் கலங்கரை விளக்கமாகிய குறளைப் பின்பற்றாதவரும் அபாயத்துக்குள்ளாவர் என்பது எமது துணிவு.

அபாயத்தைத் தடுப்பது மட்டுமல்ல நாம் எடுத்துக் கொண்ட கலங்கரை விளக்கத்தினது நோக்கம்; மனிதன் மனிதனுகவே வாழ்வதற்கும் வழிகாட்டும்.

"பழிக்குப் பழி" என்ற மிருக குணம் படைத்த மனிதர்களைப் பார்த்து,

> இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்து விடல்"

என்று அறிவு புகட்டுகின்றது. இந்நானிலத்திலே வாழும் நல்ல மனிதர் என்று நற்சாட்சிப் பத்திரம் பெற்ற ஒருவர் குறளின் கூற்றுப்படி "தமக்குத் துன்பம் செய்தவர்க்கு, (அவருக்கு) நன்மை செய்து தண்டிப்பாரா? குறளின் அறிவுக் குரலுக்குச் செவி சாய்ப்பார்களா? இல்லை! இல்லை! இந்த அவலநிலை சமுதாய மக்களிடையே ஒற்றுமையைக் காண முடியுமா? 'முடியாது' என்ற பதிலே கிடைக்கும்.

இப்படியே, 'இல்லை' 'முடியாது' என்ற பதில்களே கிடைக்குமானால் ஒரு சமுதாயம் முன்னேறுவது எப்படி? சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

வாழ்க்கை நூலான திருக்குறளில் கல்விக்காக ஒரு தனி அதிகாரமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு குறள்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்று அறிவுறுத்துகின்றது. குறளின் கூற்று "கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்," என்று இருக்கையில் மாணவர்களாகிய நாம் நம் வாழ்க்கையைக் கெடுக்கக் கூடிய நூல்களை பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர்களும், வீட்டிலே பெற்றோர்களும் காணுமல் மறைத்து வைத்துக் கொண்டு படிக்கின்றோம். இதனால் நம் வாழ்க்கையை நாமே அழித்துக்கொள்கின்றோம் என்பதை நாம் மறக்கக் கூடாது. "அவ்வாறு கற்றபிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்," என்கின்றது மேலே குறிப்பிட்ட குறளின் இரண்டாவது அடி. ஆனால் "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" என்ற பழமொழிக் கிணங்க, "ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் கொடு" என்ற ஏசுநாதரின் அருள் மொழியைப் படிக்கும் மாணவர்களாகிய நாம் "அடித்தவனுக்கு............மறு கன்னத்

(13-ம் பக்கம் பார்க்க)

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. பண்டைத் தமிழகத்தின் போர் வீரர், போர் ஒழிந்த காலத்தில் காட்டினில் வேட்டைக்குச் சென்று கடும் புலிகளைத் தாக்கி அவற்றின் வாயைக் கிழித்து வீரத்தின் சின்னமாகப் பற்களைப் பிடுங்கி வருவர். திருமணத்தின்போது இப்பற்களை மணமகளின் கழுத்தில் சூட்டுவர். இதுவே வீரன் அளிக்கும் காதற் பரிசாகும். இந்த நிகழ்ச்சியைப் பழந் தமிழ் கவிதை "மறங் கொள் வயப் புலி வாய் பிளந்து பெற்ற மாலை வெண் பல் தாலி" எனப் பாடிற்று.

2. உலகில் உள்ள மிகப் பெரிய மிருகங்களும், மிகப் பலசாலியான மிருகங்களும், சாதுவான மிருகங்களும் தாவர பட்சிணிகளாகவே யிருக்கின்றன. கோபம் கொண்டு கொதித்துச் சீறும் கொடிய மிருகங்களே மாமிசத்தை விரும்பி உண்கின்றன. யானை, காண்டாமிருகம், ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, குதிரை, பன்றி எல்லாமே இலை, குழை, கிழங்கு வகைகளை யுண்பவைதாம். மாமிசம் தின்னும் மிகப் பெரிய மிருகம் உலகின் உறைபனிப் பிரதேசமான வடபால் உள்ள துருவக் கரடியே யாகும்.

3. ஒரு மனிதனுக்கு அதிகமானபடி இரத்த நஷ்டம் ஏற்பட்டால் அவன் மயங்கி ஸ்மரணையற்று விழுந்து விடுவதைக் காண்கிறோம். இதிலிருந்து தெரிவது என்ன? சோர்வடையாமல் மூளை வேலை செய்வதற்கு இரத்த ஓட்டம் அவசியம் என்பதே. தலையைத் தலையணைமீது உயர்த்தி வைப்பதால் மூளைக்கு இரத்தோட்டம் அளவாகக் குறைக்கப்படுகிறது. இதனாலே விரைவில் உறக்கம் ஏற்பட உதவியாகிறது. 'உண்ட களை தொண்டருக்கும் உண்டு' என்கிறார்களே அதன் விளக்கம் என்ன தெரியுமா? உண்டதும் வயிறு உப்புகிறது. வயிற்றில் போன உணவைச் சீரணிக்கச் செய்ய குடலுறுப்புக்கள் அதிகப்படி இயங்க வேண்டி யிருக்கின்றன. இந்த இயக்கத்துக்கு அதிகமான இரத்தம் தேவை. தலையில் உள்ள இரத்தத்தில் ஒரு பகுதி வயிற்றுக்கு ஓடி விடுகிறது. இதனால் ஒரு விதமயக்க நிலை, களைப்பு உண்டவருக்கு ஏற்படுகிறது.

4. இரண்டும் அல்ல. முதல் வெளிப்படுவது காற்றுத் தான்!

5. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கிலாந்தை அரசாண்டுவந்த முதலாம் எட்வர்ட் மன்னர் ஹெபெர்ட் டிபிராஸ் என்னும் பிரபுவுக்கு தம் கணக்கிலிருந்து 40 பவுண் கொடுக்கும்படி பிளாரன்ஸைச் சேர்ந்த ஒரு வியாபாரிக்கு தன் கைப்பட ஒரு குறிப்பு அனுப்பினார். அந்தக் குறிப்பை அந்த வியாபாரி மதிப்பரிய பொருளாக மதித்துப் 'பிரேம்' போட்டுப் பாதுகாத்து வந்தார். இதைக் கண்ணுற்ற வங்கியாளர் செக் முறையை உருவாக்கினர். உலகத்தில் முதன் முதலாகக் கொடுக்கப்பட்டது முதலாம் எட்வர்ட் மன்னருடைய செக்தான்.

6. ஒரு ஞானி என்பது தான் சரி. சோக்கிரேடஸ் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? ஆம், அந்த கிரேக்க ஞானி சோக்கிரேடஸ்தான். அவருடைய மாணுக்கரில் ஒருவர்தான் ஐஸோகிரேடஸ் என்பவர். பேச்சுக் கலையில் வித்பன்னர். கி. மு. 436-ல் பிறந்தார் என்று தெரிகிறது. அதென்ஸ் நகரில் பேச்சுக் கலைக்குக் கல்லூரி நிறுவி சொற்கலை பயிற்றி வந்தார். கிரேக்கமும், ரோமும் அவர் நாவன்மையைக் கண்டு அதில் கட்டுண்டதுண்டு.

7. சவ்வரிசி என்பது பூவும் அல்ல வித்தும் அல்ல. மரவள்ளிக் கிழங்கின் மாவிலிருந்து ஒரு உருளை யந்திரத்தின் உதவியால் மணி மணியாக உருட்டி யெடுக்கப்படுகிறது.

8. "கலியாணக் கதை" மறைந்த தமிழ் நூல்களில் ஒன்று. யாப்பருங்கலம் செய்யுளியல் 21-ம் சூத்திரவுரையில் "உதயணன் கதையும் கலியாண கதையும் என் என்னும் அசைச் சொல்லால் இயன்ற நிலை மண்டிலம்" என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

9. ஆஸ்ப்டின் என்பவரால் 1824-ம் ஆண்டு சீமேந்து கண்டு பிடிக்கப்பட்டது.

10. United Nations Educational Scientific& Cultural Organization அதாவது ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் என்று பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# தமிழினம் விடுதலை அடைய, உரிமை பெற வழி

## பொங்கல் புது நாளில் திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

## தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. விக்கு அட்வக்கேட் பாலசுந்தரம் புகழ் மாலை

**"பாகிஸ்தான் வேண்டுமென்று கேட்டபோது பாரத நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது போல நமது இலங்கையிலே தமிழர்கள் உரிமை கோரும் வேளையில் சிங்கள ஆட்சியாளர் எம்மைப் பயமுறுத்தி அடக்கி விடலாமென எண்ணுகின்றனர். இது வெறும் பகற் கனவாகும்.**

**"தமிழினம் விடுதலையடைய வேண்டுமானால் நம்மிடையேயுள்ள சமுதாய வேறுபாடுகள் நீங்க வேண்டியது அவசியமாகும். தமிழர் அரசியலில் உரிமை பெறவேண்டுமேயெனில் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு கொள்கையுடன் செயல்பட வேண்டியதும் இன்றியமையாதது."**

இவ்வாறு இணுவில் மகாசன சனசமூக நிலையத்தில் நடந்த பொங்கல் விழாவில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறினார். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

"தமிழினத்தின் முன்னேற்றப் பாதையில் குறுக்கே நிற்பவர்களிருந்தாலும், அடிமை விலங்கை அறுத்து சுபீட்ச வாழ்வு எய்த திரண்டு நிற்கும் தமிழ் பேசும் மக்களை சத்திய மார்க்கத்திலே நேர்மையான வழியிலே தன் மானத்தோடு அழைத்துச் செல்லும் அரசியல் பிதா திரு. செல்வநாயகம் ஆவர். இவரைப் போன்ற தலைவர்கள் எமக்குக் கிடைத்தமையால் தான் நாம் தலை நிமிர்ந்து மானத்துடன் நிற்க முடிகிறது."

அட்வக்கேட் திரு எம். பாலசுந்தரம் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்:-

### எஸ். ஜே. வி. யின் அரசியல் பிரவேசம்

"இலங்கைக்கு பிரிட்டிஷார் சுதந்திரம் வழங்கிய போது கூடவே கொடுத்த ஒற்றை ஆட்சித் திட்டம் இங்குள்ள சிறுபான்மை மக்களுக்கு அழிவைத் தேடிக் கொடுக்கும் என்பதைத் திரு. செல்வநாயகம் அப்பொழுதே உணர்ந்து தமது இனத்தின் வருங்கால நிலையை மனக் கண்ணால் கண்டு கவலையுற்றார். மற்றத் தமிழ்த் தலைவர்களைப் போல தாமும் இருந்து விட்டால் தமிழினத்தின் அழிவை என்றுமே தடுக்க முடியாது போய்விடும் என்று நம்பினார். இதனாலேயே அவர் அரசியலில் பிரவேசித்தார்; மற்றத் தலைவர்களைப் போல அவர் அரசியலைத் தொழிலாகக் கொள்ள எண்ணவும் இல்லை; தலைமைப் பதவிக்காக அதில் பிரவேசிக்கவு மில்லை"

### ஒரே தலைவர்

அவர் மேலும் சொன்னதாவது:- "தமிழ் பேசும் மக்களுக்கு முன்பும் பல விதங்களிலும் அனேக இன்னல்கள் வந்திருக்கின்றன. அப்பொழுது பல பெரியார்கள் இருந்து அருந் தொண்டு ஆற்றினார்கள். ஆனால் முன்பு இல்லாத பெரிய நெருக்கடியும் அபாயமும் இப்பொழுது தான் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றிற்கேற்ப நமக்கு அதிர்ஷ்ட வசமாக அருமையான பெரிய தலைவரும் கிடைத்திருக்கிறார். இன்று தமிழ் பேசும்மக்களுக்கான ஒரே உண்மைத் தலைவர் திரு. செல்வநாயகம் தான் என்றால் அது மிகையாகாது.

### நம்பிக்கை

"திரு. செல்வநாயகம் தமது அரசியல் தூரதிருஷ்டி, நேர்மை, கண்ணியம், மன உறுதி, கொள்கைப் பற்று, அகிம்சை நாட்டம் முதலான நற்குணங்களால் தம்மை அந்த உயர் பதவிக்கு தகுதிப் படுத்திக் கொண்டிருக்கிறார். 'சூதும் வாதும் நீண்ட நாள் நிலைக்கா. நீதியே இறுதியில் வெல்லும்' என்பது அவரது உறுதியான நம்பிக்கை. தமிழ்ப் பேசும் மக்கள் சுதந்திரம் பெற்று சுபீட்சம் அடைய இந்த நம்பிக்கை அவர்களுக்கு தெம்பும் துணையும் அளிக்கத்தவற மாட்டாது என்று திடமாக எண்ணுகிறார்."-இப்படி திரு. பாலசுந்தரம் பேசி முடித்தார்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. சி. க. தியாகராசா திருவாளர்கள் புதுமைலோலன், அ. பொன்னம்பலம், த. வேலமுகன், வி. தர்மலிங்கம் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாச் செயலாளர் திரு. சி. சிவரத்தினம், ஆகியோரும் பேசினார்கள். பண்டிதர் நா. இராசையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

## யாழ் நகர் நாக விகாரை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் பொத்துக்கொண்டு வந்தன.

"ச்! இந்தக் கத்திகளும், வரட்டுப் புத்தி படைத்த வகுப்புவாதிகளும் தான் நாட்டின் நிம்மதியைக் குலைத்து, சந்தோஷத்தை குழி தோண்டிப் புதைத்து, சமாதான சக வாழ்வுக்குச் சதி செய்த சனியன்கள்! தொலைந்து போகட்டும், இன்றோடு!" என்று அந்தக் கத்தியைப் பறித்து அப்பாலே தூர வீசி எறிந்தான் பண்டா, 'டங்க்' என்ற ஒலியோடு ஒடிந்தது அது!

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த முதல் நாளிலேயே பண்டா ஆறுமுகத்தைச் சந்தித்தான். ஒரு வாரத்துக்குள் பண்டாவின் பேக்கரியில் பாண் தயாரிப்பு ஆரம்பமாகி விட்டது. முன்னையைக் காட்டிலும் இப்போது அதிக விற்பனை. ஜோலி தலைக்குமேல் இருந்ததால் சுமார் இரண்டு வாரங்கள் கடந்தும் வேலுப்பிள்ளையிடம் போக பண்டாவுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அப்படி போயிருந்தாலும் பயன் உண்டா? பூமணி ஸ்டோர் தான் 'பியசிரி ஸ்டோர்' ஆகிவிட்டதே!

ஃ

"அப்பு...எணை! ...அப்பு! வாயிலை சுருட்டு! பேப்பர் படிக்கிறன் எண்டு சொல்லிப்போட்டு, பட்டப் பகலிலை, அதுக்கிடையிலை நித்திரையாய்ப் போனியே? அப்பு...! எணை வாயிலை சுருட்டெல்லே சுடப்போகுது, சுருட்டு!" வேலுப்பிள்ளையின் கடைசி மகள் பூமணி, அவரை உலுக்கி எழுப்பினாள்.

"இல்லையடி மோனை, சாப்பிட்டது தெரியாதே, ஒரு சின்னக் கோழித் தூக்கம்!"

அந்தச் சாய்வுநாற்காலியிலிருந்து எழுந்து, வாயில் வைத்திருந்த கருகிப்போன சுருட்டை வீசி எறிந்தபடி சொன்னார். அவிழ்ந்துபோயிருந்த, ஐந்தாறு மயிர்களாலான தம் சின்னக் குடுமியை ஒரு தரம் தட்டி முடிந்தும் கொண்டார் வேலுப்பிள்ளை.

"ம்...ம்! தென் இலங்கையில் கொட்டிக் குவித்த பணத்தை இங்கு செலவு செய்து ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கி இருந்தால் ...? தமிழ்த் தலைவர்களின் எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாது அங்குஓடிப்போய் கடைவைத்து நடத்திய எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்" என்று வாய்க்குள் முணு முணுத்தார்.

எனினும் ஒரு விஷயம் அவருக்கு பெரிய மனப்பளுவைக் கொடுத்தது. யாழ்ப்பாணத்தில் இருந்த பண்டாவின் பேக்கரி மீண்டும் செழிக்கத் தென் இலங்கையில் உள்ள தனது பூமணி ஸ்டோர் மட்டும் யாரோ அட்டாதுட்டிக்காரனால் அபகரிக்கப்பட்டு பியசிரி ஸ்டோர் ஆகிவிட்டதை மட்டும் அவரால் பொறுக்க முடியவில்லை. இந்த நிலையில் தான் தினப்பத்திரிகையில் வந்த செய்தியை அவர் படித்தார்: நாகவிகாரையை திருத்தி அமைக்கும் தீவிர முயற்சியில் தமிழர்கள்! கூடவே தென் இலங்கை இந்துக் கோவில்கள் பற்றிய செய்தியும் இருக்கும் என்று துருவிப்பார்த்த அவருக்குக் கிடைத்தது வெறும் ஏமாற்றம்! சிரித்தார். அந்தச் சிரிப்புக்குத் தான் எத்தனை அருத்தம்!

## கைலாசம் கண்டேன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கே இருந்து விடாதீர்கள்"

"அவர்கள் அனுப்பி வைத்தால் வந்து விடுகிறேன்"

"'குழந்தைகள் இலங்கையில் இருக்கின்றனர்' என்று சொல்லிவிட்டு வாருங்கள். இன்னொரு முறை போகலாம்"

"'திரும்பிப் போனால் பின்னைகள் வர விடமாட்டார்கள். இங்கேயே இருந்து விட்டால் உன்னைத் தேடி வருவார்கள்' என்று இறைவன் சொல்லக்கூடும்"

"எங்களுக்கும் கைலை வர இன்று ஆற்றல் இல்லையே. அதனால், உங்களை எங்களிடம் அனுப்பி வைக்க வேண்டிக்கொள்வோம்"

"சரி அப்படியானால், அழைப்பது உங்கள் செயல். அனுப்பி வைப்பது அவன் திருவருள். உங்கள் பிரார்த்தனை அனைத்தையும் ஆனந்தமாக்கும்."—சம்பாஷணையின் போது கடைசியாக இப்படித் தான் கூறி விடை பெற்றேன்.

### பிரியாவிடை

1958 மே மாதம் 15-ந் திகதி காலை கண்டி சச்சிதானந்த தபோவனத்திலிருந்து ரயில்வே நிலையம்வரை அன்பர்கள் பலர் குழுமி வந்தனர். பிரியாவிடை பெற்றேன். ரயில் வண்டி தண்டவாளத்தில் உருள ஆரம்பித்தது. அன்பர்கள் பலரது கண்களிலிருந்து நீர்த்துளிகள் கன்னங்களில் உருளக் கண்டேன். விரைவில் வண்டி கொழும்பை அடைந்தது. அன்று முழுவதும் அன்பர்கள் வந்து சந்தித்த வண்ணம் இருந்தனர். மறுநாள் விமான நிலையத்தில் வந்திருந்த எல்லா அன்பர்களிடமும் விடை பெற்று விமானத்திலமர்ந்தேன். விமானம் மேலே பறக்க ஆரம்பித்தது. எனது சிந்தனையும் உயரப்பறந்தது. உயர்மலைநோக்கிய யாத்திரையும் ஆரம்பித்தது.

### சமத்துவம்

விமானம் மேலே சென்றுகொண்டிருந்த போது உயர்ந்த மலை, தாழ்ந்த பள்ளம், ஓடும் நதி, நிலைத்த நீர்ப்பரப்பு, பெரிய [illegible] சிறிய குடிசை, வா[illegible] பெரிய மரம், தரையிற் படிந்த சிறு செடி கொடி அனைத்தும் சமதளத்தில் பலவர்ண மைகொண்டு தீட்டிய சித்திரம் போலக் காட்சி தந்தன ஆம். அனைத்திற்கும் மேலான இறைவனை உணர்ந்து, உயர்நிலை அடைந்தோர்க்கும் எவ்வுயிரிலும் எவ்விடத்தும் உயர்வு-தாழ்வு தோன்றாது. அனைத்தும் ஒன்றுய தன்மையாகத் தெரியும் என்பது [illegible]தெளிவாக விளங்கிற்று.

### சோர்வு

மாலை 3 மணிக்குப் புறப்பட்ட விமானம் [illegible]ரை மணிக்கு சென்னை மீனம் [illegible] அடைந்தது. ஸ்ரீமான் விஸ்வநாதர் இல்லத்தில் சிறந்த விருந்துடன் இரு நாட்கள் தங்கினேன். 19-ந் திகதி பகல் புறப்பட்ட புகையிரதத்தில் 20-ந் திகதி இரவு பம்பாய் போய்ச் சேர்ந்தேன். பம்பாயில் சுவாமி பிரேமானந்தஜியை எதிர்பார்த்தேன். அவர் அங்கில்லை என்பதை அறிந்ததும் பிரயாணம் தடைப்படுமோ என்று சிறிது மனம் சோர்வுற்றது. எனது வரவுதாமதித்ததால், ஒருசமயம் நான் டெல்லிக்கு நேரே சென்றிருக்கலாம் என்று எண்ணி அவர் அங்கு சென்றதை பின்னர் அறிந்ததில் மீண்டும் உற்சாகம் அடைந்தேன். மறுநாள் அங்கு தங்கி 22-ல் புறப்பட்டு 23 மாலை டெல்லி அடைந்தேன்.

### ரிஷிகேசத்தில்

டெல்லியில் உயர்திரு ராமசுப்பிரமணியம் அவர்கள் செய்த உபசரிப்பை நோக்கும்போதெல்லாம், நான் கைலை சென்று திரும்பி வரத் தேவையான சக்தியை உடலில் உணவுமூலம் அவர் திணிக்கின்றாரோ என எண்ணவேண்டியிருந்தது. ஸ்ரீ பிரேமானந்தஜி அவர்களை டெல்லியிற் சந்தித்தேன். எங்களுடன் யாத்திரை செய்யவிருக்கும் இன்னும் இருவர் வந்து சேர சில தினங்களாகுமென்று அறிந்ததும் அந்நாட்களை நான் எதிர்பார்த்த வண்ணம், ரிஷிகேசம் சென்று ஸ்ரீ சிவானந்த சற்குருநாதனது நல்லாசிகளைப் பெறவும் அங்கு தங்கியிருந்துவரவும் பயன்படுத்திக்கொண்டேன்.

### உதவி

[illegible] திகதி காலை பஞ்சாப் மெயிலில் புறப்பட்டேன். ஒரு சில மணி நேரங்களில் புகையிரதம் மதுராவையடைந்தது. எமக்கு முன் அங்கு சென்[illegible] பிரேமானந்தசுவாமிகளும், வேறு சில அன்பர்களும் புகையிரத நிலையத்திற்கு வந்து வரவேற்றனர். அவர்களுடன் ப்ரவின் என்ற பம்பாய் அன்பரும இருந்தார். அவர் எம்முடன் கைலை வர ஆயத்தம் என்று அறிந்தேன். பம்பாய்ப் பிரமுகர்களில் ஒருவரும் பல பெரும் தர்மஸ்தாபனங்களுக்குக் கர்த்தரும், தயாள குணம் படைத்தவருமான லேடி தாக்கர்ஸீ என்பவர் எம்மனைவரது உபயோகத்துக்குமாக பத்துப் பன்னிரண்டு டின்களில் பலவித பலகாரங்களைப் பொதிந்து திரு ப்ரவீன் மூலம் அனுப்பியிருந்தார்கள். இமயத்தின் கடுங் குளிரில் நாங்கள் நடுங்கித் துன்புறுமல் தூங்கத் தேவையான தூங்கும் பைகளை (Sleeping bags) யும் பம்பாய் இமாலயன் கிளப்பிலிருந்து வாடகைக்குப் பெற்று வந்திருந்தார் திரு ப்ரவீன்.

### நாம் நால்வர்

அன்றிரவுவரை மதுராவிலும், பிருந்தாவனத்திலும் ஆலயங்களைத் தரிசித்துக் கொண்டு 11.30 மணிக்கு மீண்டும் ரயிலேறி காத்கோடம் நோக்கிப் புறப்பட்டோம். இடையே திரு இராமதாஸ் அவர்கள் பஞ்சாபிலிருந்து பலவித உணவுக்குரிய பண்டங்கள், சமையல் சாமான்களுடன் பரேலி ஜங்ஷனில் வந்து கூடிக் கொண்டார். ஆக, நாங்கள் நால்வரானோம். பிரேமானந்தஜியுடன் சதா இருந்து பணி புரிந்து வரும் 14 வயதுச் சிறுவனாகிய செல்வன் குந்தன் சிங்கும் உடன் வந்தான். மறுநாள் காத்கோடத்தையடைய சில மணிகளுக்கு முன்னர் ரயில் லால்குவா என்னும் இடத்தை அடைந்ததும் ஏற்றம் ஆரம்பித்தது. அவ்விடம் கடல் மட்டத்துக்கு மேல் 1700 அடி உயரமானது. ரயிலுக்கு முன்னும் பின்னும் எஞ்சின்கள் மாட்டப்பட்டன. அடர்ந்த காட்டுக்குள் வண்டி ஏறிச் சென்றது. பகல் 12 மணியளவில் காத்கோடத்தை அடைந்து புகையிரதம் நின்றது.

(தொடரும்)


## பிரதிநிதிகள் தேவை

இலங்கையின் பிரதான பட்டணங்களில் எல்லாம் சுதந்திரனுக்கு செய்திகளும், விளம்பரங்களும் திரட்டக்கூடிய பிரதிநிதிகள் தேவை. கல்வித் தராதரம், வயது முதலியவற்றைக் குறிப்பிட்டு, இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர் : சுதந்திரன்.

194 ஏ, தட்டா தெரு,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான மூன்ருவது வாரம்!!



கிங்ஸ்லி (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித் தெரு)

விஜயா (மட்டக்களப்பு)

மொடர்ன் (பதுளை)

வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை)

தீவொளி (நுவரெலியா)

ஜெமினி (ருகலை)

விஜிதா (மஸ்கேலியா)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ஆகிய திரைகளில் காட்சியளிக்கிறது

# ★ பதிபக்தி ★

ஜெமினி கணேசன், சிவாஜி கணேசன்,


சாவித்திரி, சந்திரபாபு, தங்கவேலு, பாலையா, நாகையா,

மற்றும் பலர் நடித்தது.

பின்னணி: டி. எம். சௌந்திரராஜன், ஏ. எம். ராஜா, ஜிக்கி, சுசீலா, வி. என். சுந்தரம்

கதை வசனம்:
எம். எஸ். சோலைமலை

டைரக்ஷன்:
A. பீம்சிங்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் [illegible] எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஜனவரி மாதம் 25-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.